
கோகுலம்

GOKULAM

ஜூன் '86 ரூ 2.





ப. ஜீவானந்தம்

தோற்றம்: 21.6.1905. மறைவு: 18.1.1963.



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்

கோகுலம்

1986 ஜூன் இதழ்
மலர்: 4 இதழ்: 5
தனிப்பிரதி ரூ 2/—
ஆண்டுச் சந்தா ரூ 24/—

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா



அருமைச் சிறுவர் சிறுமியரே,

தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் அனுப்புமாறு உங்களைக் கேட்டுக் கொண்டோம். பல ஊர்களிலிருந்தும் 150 க்கும் மேற்பட்டவர்கள், மிகுந்த உற்சாகமாக விண்ணப்பத்தைத் தயாரித்து, அதில் பல சிறுவர் சிறுமியரின் கையெழுத்துக்களைப் பெற்று, முதல்வருக்கு அனுப்பி எங்களுக்கும் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். இதுவரை சுமார் 8000 சிறுவர் சிறுமியர் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்கள். 'விளையும் பயிர்' பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட செல்வன் வெ. புகழ் ஒளி 1001 பேரிடம் கையெழுத்து வாங்கி அனுப்பி, நம்மை மலைக்க வைத்திருக்கிறான்! கையெழுத்து வாங்கி அனுப்பியவர்களின் பெயர்களை முகவரிகளுடன் இந்த இதழிலே வெளியிட முயன்றோம்; முடியவில்லை. அடுத்த இதழில் மொத்தமாக வெளியிடுவோம்.

சென்ற இதழில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியவர்கள் அறிவித்த கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களுக்கான கோடை விடுமுறைப் பரிசுப் போட்டிக்குத் தினமும் ஏராளமான விஷயங்கள் வந்து குவிக்கின்றன. ஏற்கெனவே சிலர் உறுப்பினர் மனுவை எங்களுக்கு அனுப்பியிருந்தும், நாங்கள் உறுப்பினர் அட்டை அனுப்பத் தாமதம் ஏற்பட்டுள்ளது. அப்படி மனு அனுப்பி, இதுவரை உறுப்பினர் அட்டை பெறாதவர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். அவர்கள் தங்கள் பெயர்களுக்குப் பக்கத்தில், மனு அனுப்பிய தேதியைத் தெளிவாகக் குறிப்பிட்டால் போதும்.

மற்றொன்றையும் இதன் மூலம் அறிவிக்கின்றோம். இந்த இதழில் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் மனு உள்ளது. இதுவரை, உறுப்பினராகச் சேராதவர்கள், அதை நிறைவு செய்து, அதைப் போட்டிக்கான விஷயத்துடன் இணைத்து 15.6.1986 க்குள் அனுப்பலாம். ஏற்றுக் கொள்வோம். போட்டிக்கு வரும் மற்ற விஷயங்களுடன், அவற்றையும் சேர்த்துப் பரிசீலனை செய்து போட்டி முடிவுகளை அறிவிப்போம்.

— அழ. வள்ளியப்பா

சிறுமி ஏ. ஆர். சிகப்பி
புகைப்படம்: மு. சிவாஜி


இந்த இதழ் எழுத்தாளர்கள்



ஜானகி மணாளன்




ஆர். பரிமளா



Dr. கருநாகராசன்


பிருந்தாவனக் கதாசிரியர்கள்



எம். அருணாசலம்



மா.தா. ஸ்ரீதர்




ஆர். அனந்தநாராயணன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



கா. சேட்டு முகம்மது



க. தங்கராஜ்

அட்டையில்: கல்பனா பாலாஜி
வண்ணப்படம்: ஏ.வி. பாஸ்கர்

கோகுலம் சிறுவர் சங்கம்

— கிண்டி, சென்னை-600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து

மின்மினிக் கதைகள்

பூனையின் நிறை என்ன?


ஒரு மனிதன் தன்னுடைய வேலைக்காரனிடம் மூன்று கிலோ இறைச்சியைக் கொடுத்துச் சமைக்கும்படி சொன்னான். இறைச்சியைக் கொடுத்துவிட்டு விருந்தாளிகளை அழைத்து வருவதற்காக அந்த மனிதன் வெளியே போய்விட்டான்.

அவன் விருந்தாளிகளோடு வீட்டுக்கு வந்தபோது, சமையற்காரன் சமைத்த இறைச்சி முழுவதையும் சாப்பிட்டுவிட்டான். வீட்டுச் சொந்தக்கார மனிதன், விருந்தாளிகளுக்கு உணவைக் கொண்டு வந்து பரிமாறும்படி கூறினான். அப்போது சமையற்காரன் எல்லா இறைச்சியையும், அந்த வீட்டிலே உள்ள பூனை தின்று விட்டதாய்க் கூறினான்.

வீட்டுக்காரனுக்கு ஆச்சரியமும் கோபமும் உண்டாயிற்று, உடனே, பூனையைப் பிடித்தான். தராசிலே வைத்து நிறுத்தான். பூனை சரியாக மூன்று கிலோ நிறையாக இருந்தது.

உடனே அந்த மனிதன் சொன்னான்: ''இதிலே பூனையின் நிறை மட்டுமேதான் உள்ளது. அப்படியானால் இறைச்சி எங்கே? இறைச்சியின் நிறை மூன்று கிலோ.... அப்படியானால் பூனை எங்கே?''


வேலைக்காரன் பதிலே பேசாமல் நின்றான்.



வெளவாலின் திட்டம்

மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் ஒருமுறை பெரிய யுத்தம் ஒன்று ஏற்பட்டது. இரண்டு தரப்பிலும் ஒன்றுகூடத் தவறாமல் மிருகங்களும் பறவைகளும் சேர்ந்து கொண்டன. ஆனால், வெளவால் மட்டும் ஒருபக்கமும் நிற்கவில்லை.

யுத்தத்தில் பறவைகள் வென்று விடுவது போலத் தோன்றுகின்ற போது வெளவால், பறவைகளின் பக்கமாக நின்று சண்டை செய்தது. மிருகங்கள் வென்று விடுவது போல் காணப்பட்டால் மிருகங்களின் பக்கமாக நின்று போர் செய்தது. இப்படியே அங்குமிங்குமாய் மாறி மாறி நின்று சண்டையிட்டது வெளவால்.



கடைசியில் ஒரு வழியாகச் சண்டை முடிவடைந்தது.

சண்டை நடந்துகொண்டிருந்த போதே வௌவாலின் நேர்மை இன்மையை மிருகங்களும், பறவைகளும் கவனித்து வைத்திருந்தன. இதனால், சண்டை முடிந்ததும் பறவைகளோ, மிருகங்களோ வௌவாலைத் தங்களோடு சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டன.

வௌவாலுக்குக் கவலை. அதனால், தூங்கவே முடியவில்லை. இனிமேல் மிருகங்களையோ, பறவைகளையோ சந்திக்கத் தனக்கு இஷ்டமே இல்லையென்று கூறிவிட்டு, ஒரு மரத்திலே போய்த் தலைகீழாகத் தொங்கலாயிற்று. அன்று முதல் இன்றுவரை வௌவால் தலைகீழாகவே தொங்கிக் கொண்டிருக்கிறது.

தேவதையும் வண்டிக்காரனும்

வண்டிக்காரன் ஒருவன் தனது வண்டியை ஓட்டிக் கொண்டு போனான். வழியிலே மழை பெய்து ஒரே சேறும் சகதியுமாக இருந்தது. வண்டிக்காரன் மிகவும் கஷ்டப்பட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு போனான். ஆயினும் சேறு அதிகமாக இருந்த இடத்திலே வண்டிச் சக்கரங்கள் புதைந்து போய்விட்டன!

உடனே வண்டிக்காரன் தனது குலதேவதையை வேண்டிப்பிரார்த்தனை செய்தான். தன் வண்டியை அந்தச் சேற்றிலிருந்து மீட்டுத் தரும்படி சொன்னான்.

அப்போது அந்தத் தேவதை அவன் எதிரே தோன்றியது.

அவன் தேவதையின் காலில் விழுந்து வணங்கினான். பின்னர், தேவதையைப் பார்த்து அழத் தொடங்கினான்.

அப்போது தேவதை அவனைப் பார்த்துக் கூறிற்று.

“சோம்பேறி மனிதனே, நீ என்னை எதற்காக இப்போது கூப்பிட்டாய்? சேற்றிலே புதைந்து போய்க் கிடக்கின்ற வண்டியை நகர்த்துவதற்கு



ஒரு சிறிய முயற்சியினைக் கூட நீ செய்யவில்லை. முதலிலே அதனைச் செய். மாடுகளை அடித்து வண்டியை இழுக்கத் தக்கதாய் விரட்டு. சக்கரங்களை நன்றாய்த் தூக்கி உருட்டு. அப்போது வண்டி சேற்றிலிருந்து வெளியே வருகின்றதா இல்லையா என்று பார். அப்போதும் இயலவில்லை என்றால் என்னைக் கூப்பிடு. நான் வந்து உதவுகிறேன்!'' என்று சொல்லிவிட்டுத் தேவதை அங்கிருந்து மறைந்து போயிற்று.

திருடர்களும் கோமாளியும்

நாடகங்களில் கோமாளி வேடத்தில் நடிக்கும் ஒருவனது வீட்டுக்குள் பயங்கர ஆயுதங்களுடன் திருடர்கள் நுழைந்தனர். வீட்டிற்குள் திருடர்கள் நுழைந்ததும் கோமாளி அங்கிருந்த ஒரு பெட்டிக்குள்ளே ஒளிந்துகொண்டான்.



வீடு முழுவதும் தேடியும் ஒரு பொருளும் கிடைக்காததால் அத்திருடர்கள் அந்தப் பெட்டியைத் திறந்தனர். பெட்டிக்குள் இருந்த கோமாளி பதுங்கிக் கொண்டு வெளியே வந்து, திருடர்களைப் பார்த்துச் சொன்னான்.

''ஐயா, நீங்கள் வந்தபோது நான் வெளியேதான் இருந்தேன். ஆனால், நீங்கள் இங்கே வந்ததும் உங்களுக்குத் தந்து அனுப்ப என்னிடம் எதுவும் இல்லை. அதனால், வெட்கப்பட்டு இந்தப் பெட்டிக்குள் ஒளிந்து இருக்கிறேன். வேறொன்றும் இல்லை...''

— செ. யோகநாதன் தொகுத்த 'குழந்தைகள் கதைக் களஞ்சியம்' என்ற புத்தகத்திலிருந்து.

பழைய பல்லக்கு



ரவீந்திரநாத் தாகூர் இப்போது நம்முடன் இருந்தால், அவருக்கு வயது 125.

தாகூர் சிறுவராயிருந்தபோது, அவர் வீட்டு வராந்தாவில் ஒரு பழைய பல்லக்கு இருந்தது. உட்காரும் இடமெல்லாம் கிழிந்து, வர்ணமெல்லாம் மங்கி யாரும் சீண்டுவாரில்லாமல் கிடந்தது. தாகூர் அந்தப் பல்லக்கிற்குள் போய் அடிக்கடி உட்கார்ந்து கொள்வார். உடனே அது நகர ஆரம்பிக்கும். மேலே கிளம்பி வானத்தில் பறக்கும். திடீரென்று ஒரு தீவுக்குள் இறங்கும். வழியிலெல்லாம் பல வீர தீரச் செயல்கள் செய்து கொண்டே போவார். எல்லாம் கற்பனையில் தான்!

— ஏ. ஆர். ஆனந்த் (421), காரைக்குடி.



என் குழந்தைப் பருவம்

—சௌந்தரா கைலாசம்—

தமிழகத்தின் 'கவிக் குயில்' எனப் போற்றப் பெறுபவர் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள். தெய்வத்தைப் பற்றியும், தேசத்தைப் பற்றியும், சான்றோரைப் பற்றியும் இவர் கவியரங்கங்களிலும், மாநாடுகளிலும், பத்திரிகைகளிலும், வானொலியிலும் பாடியுள்ள பாடல்கள் இரண்டாயிரத்திற்கு மேலிருக்கும்.

மேடையில் ஏறி இவர் பேசத் தொடங்கினால், அந்தப் பேச்சே ஒரு கவிதை போல் இனிக்கும். கவி பாடத் தொடங்கிவிட்டால் அக்கவிதையின் அழகிலும் இனிமையிலும் அளவில்லா மகிழ்ச்சி கொள்வோம்.

அகில இந்திய வானொலியின் ஆலோசனைக் குழு, திரைப் படத் தணிக்கைக் குழு, இந்து மத அறநிலையக் குழு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் குழு, சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் செனேட் முதலியவற்றில் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் ஜாகிர் ஹுசைன் தொடங்கி வைத்த முதலாவது குழந்தை இலக்கிய மாநாட்டிற்கும், டாக்டர் ஃபக்ருதீன் அலி அகமத் தொடங்கி வைத்த குழந்தை எழுத்தாளர் சங்க வெள்ளி விழாவிற்கும் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்து, குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு அரும் பணி புரிந்தவர்.


பாரதப் பிரதமராயிருந்த மொரார்ஜி தேசாய் தொடங்கி வைத்த திருவாசக மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்து, அம்மாநாடு சிறக்க உதவியவர்.

இவரது கணவர் நீதிபதி பி. எஸ். கைலாசம் அவர்கள், சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாகவும், டில்லி சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவும் விளங்கியவர்.

நான் 28.2.1927ல் சேலம் மாவட்டத்திலுள்ள புதுப்பாளையத்தில் பிறந்தேன். என் அன்னையின் தந்தையாகிய இரத்தின சபாபதி கவுண்டரும் ராஜாஜியும் நல்ல நண்பர்கள். 'திருச்செங்கோடு காந்தி ஆசிரமம்' நிறுவ, ராஜாஜிக்கு நிலம் வழங்கியவர் என் தாத்தா. ஆசிரமத்தைப் பெரியார் அவர்கள் திறந்து வைத்தார். அங்கே காந்திஜி வந்திருக்கிறார்.

அந்த ஆசிரமத்தில் ராஜாஜியின் மகள் திருமதி லட்சுமியும் என் தாயாரும் சேர்ந்து நூல் நூற்பார்களாம்.





அப்படி நூற்றுக் கொடுத்த நூலைக் கொண்டுதான் என் தாயாரின் திருமணத்தின் போது திருமாங்கல்யம் கட்டப்பட்டது. கூரைப் புடைவையும் கதர்தான்! திருமணத்திற்கு ராஜாஜி கைராட்டை பரிசளித்தாராம்.

என்னுடைய தந்தையின் ஊர் கரூர் மாவட்டத்திலுள்ள செட்டிபாளையம். செட்டிப்பாளையம் ஓர் அழகிய சிற்றூர். மேற்குப் பக்கத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அமராவதி ஆறு ஓடுகிறது. ஆற்றில் நீந்தி விளையாடுவதும் நாணற் காட்டிற்குள் மீன் பிடிப்பதும் நல்ல பொழுது போக்கு இள வயதில்! ஆற்றுக்குக் கீழ்புறம் வாய்க்கால் ஒன்று இருக்கும். வாய்க்காலுக்கும் ஆற்றுக்கும் நடுவே புளிய மரங்கள், ஆல மரங்கள், அரச மரங்கள், வேப்ப மரங்கள், தென்னந் தோப்புகள் இருக்கும். வாய்க்காலுக்குக் கீழ்புறம் வளர்ந்து படர்ந்து ஓங்கி உயர்ந்த வேப்பமரத்தின் அடியில் ஓர் அழகிய சிறு விநாயகர் கோயில் உண்டு. அதற்குப் பக்கத்தில் ஐந்தாவது வகுப்பு வரையுள்ள சிறிய பள்ளிக் கூடம்.

கோயிலுக்கு அருகிலேயே எங்கள் வீடு. ஊருக்கு அருகிலேயே தோப்புகள் நிறைந்த தோட்டம்.

எனக்கு மூன்று வயதாயிருக்கும் போது தாத்தா என்னைப் புதுப் பாளையத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கேயே நான் மூன்றாவது வரை படித்தேன். பிறகு செட்டிபாளையத்துக்கு வந்து ஓர் ஆண்டு படித்தேன். பிறகு, நான்காவது படிக்க சங்ககிரி துர்க்கத்துக்கு என் பெரியம்மா அழைத்துச் சென்றுவிட்டார்கள். அப்போது, என் தாத்தாவுக்கு உடல்நலம் குன்றியிருந்ததால், திருச்சி உறையூரில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து அங்கே வைத்தியம் பார்த்துக்கொண்டார். அப்போது நானும் அங்கு சென்று அங்கேயே ஐந்தாவதில் சேர்ந்து படித்தேன்.

தாத்தா இறைவனடி சேர்ந்ததால், பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு, செட்டிபாளையத்திற்கு நான் வர வேண்டியதாயிற்று.

எனக்கும், என் தம்பிகளுக்கும் தனியாக ஓர் ஆசிரியரை ஏற்படுத்தி வீட்டிலேயே பாடம் சொல்லித் தர வேண்டுமென என் தந்தை முடிவு செய்தார். பத்திரிகையில் விளம்பரம் செய்து, ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியரை எங்களுக்காக ஏற்பாடு செய்தார்.

எங்கள் ஊர் ஓரத்தில் உள்ள தோட்டத்துக் களத்து வீட்டில் அவர் குடியிருந்தார். நானும் என் தம்பிகளும் அங்கு அதிகாலையில் புத்தகப் பைகளுடன் செல்வோம். அங்கேயே பல் துலக்கி, முகம் கழுவி, திருநீறு குங்குமம் அணிந்து ஆசிரியர் முன்னால்போய் உட்கார்ந்து கொள்வோம். அவர் எங்களுக்குத் தமிழ், ஆங்கிலம், கணக்கு முதலிய பாடங்களைச் சொல்லிக் கொடுப்பார். காலையில் எங்களுக்குச் சிற்றுண்டி, காபி எல்லாம் தோட்டத்திற்கே வந்துவிடும். பகலிலே வீடு சென்று குளித்து உணவு அருந்துவோம். மீண்டும் 3 மணிக்குத் தோட்டத்திற்குச் செல்வோம். மாலை டிபன், காபி அங்கே வந்துவிடும். பாட்டியாள் நேரம் (பொழுது இறங்கும் நேரம்) வீடு திரும்புவோம். இப்படி ஒரு ஆண்டு படித்தோம்.

பிறகு, கரூரில் ஒரு வீடு எடுத்து

அங்கிருந்து கொண்டு, கரூர் முனிசிபல் ஹைஸ்கூலில் எட்டாவது வகுப்பில் சேர்ந்து படித்தேன். ஐந்தாவதுடன் பள்ளிப் படிப்பை நிறுத்தி, பிறகு தனியாகப் படித்த நான் ஒரே ஆண்டில் எட்டாவதில் சேரும் தகுதியைப் பெற்றேன் என்றால், எவ்வளவு நன்றாக அந்த ஆசிரியர் எனக்குக் கற்பித்திருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

கரூரில் எட்டாவது படித்து முடித்ததும், சென்னை மாம்பலத்திலுள்ள வித்யோதயா பள்ளியில் ஒன்பதாவது படித்தேன். பிறகு, எனக்குத் திருமணமானது. அப்போது என் வயது 14. திருமணமாகி மீண்டும் சென்னை வந்தபோது எழும்பூரிலுள்ள பி.டி. ஹைஸ்கூலில் பத்தாவது படித்தேன். அப்போது யுத்த காலமானதால், எல்லாரும் சென்னையை விட்டுக் காலி செய்து கொண்டு ஊர் சென்றனர். நானும் என் கணவரின் யோசனைப்படி ஊர் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டதால், பத்தாவதில் சில மாதங்களே படிக்க முடிந்தது. அத்துடன் என் பள்ளிப்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

நான் ஆண்டுக்கு ஒரு பள்ளியாக மாறிக் கொண்டிருந்தபோதிலும், எனக்குப் பாடம் சொல்லித் தந்த ஆசிரியர்கள் அனைவரது அன்பையும் ஆசியையும் நான் பெற்றிருந்தேன். இதை எண்ணி எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

செட்டிபாளையத்தில் படிக்கும் போது பள்ளி மாணவர்கள், மாணவிகள் அத்தனை பேரும் ஆசிரியருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம். பள்ளி செல்லும்போது, ஒவ்வொரு வரும் 'படி விறகு' — அதாவது ஒரு விறகுக் கட்டையை எடுத்துச் சென்று, அவர் வீட்டில் போட்டுவிட்டுப் போவோம். அவருக்குத் தேவையான அரிசி, பால், தயிர் முதலியவற்றையும் கொடுத்து உதவுவோம். அவர் எல்லாரிடமும் மிகவும் அன்பாக இருப்பார். அங்கிருந்து ஓய்வு பெற்றுச் சொந்த ஊருக்குப் போனபிறகுகூட அடிக்கடி எங்களைப் பார்க்க வருவார்.

'கட்டித் தயிர் சட்டி வெண்ணெய்த்
திண்டு — அது,
செட்டி பாளையத்திலே மெத்த மிக
உண்டு.'

என்று பாடிக் கொண்டே வருவார்.

அவர் எங்கள் வீட்டுக்கு வரும் போதெல்லாம், தானாகவே தனியாகச் சமைத்துச் சாப்பிடுவார். அவருக்கு வேண்டிய அரிசி, பருப்பு, காய்கறிகள், பாத்திரங்கள் கொடுப்போம். அவரிடம் காய்கறி நறுக்க அரிவாள்மணை கொண்டு போய்க் கொடுப்பேன்.

"சௌந்திரம், அரிவாள்மணை வேண்டாம். இதில் வெங்காயம் நறுக்கியிருப்பேள். கத்தி வாங்கிண்டு வா" என்பார்.

என் பாட்டியிடம் போய் விவரம் சொல்லி நான் கத்தி கேட்பேன். பாட்டி வேடிக்கையாக, "இந்தக் கத்தியில் தான் கோழி நறுக்கிறோம் என்று சொல்லு" என்பார்கள். இதை அவரிடம் சொன்னதும், 'குறும்புக்காரப் பொண்ணு!" என்று சிரித்தவாறே அடிக்க வருவார். ஓடி விடுவேன்.





எங்கள் ஊரான் செட்டிபாளையத்துக்கு அருகில் 'தான்தோன்றி மலை' என்று ஒரு மலை இருக்கிறது. அதில் எழுந்தருளியுள்ள தான்தோன்றிப் பெருமாள் ஒரு காலை மடக்கி, மற்றொரு காலைக் கீழே தொங்கவிட்டிருப்பார். அது சுயம்பு — அதாவது தானாகத் தோன்றிய திரு உருவம். தான்தோன்றிப் பெருமாளுக்கு 'மாயவர்' என்ற பெயரும் வழங்குகிறது.

அங்கு புரட்டாசி மாதத்தில் ஒரு சனிக்கிழமையன்று எங்கள் ஊர் மக்கள் எல்லாரும் பாத்திரங்கள், அரிசி, பருப்பு, காய்கறிகள் எடுத்துச் சென்று, அங்கு கூட்டாகச் சமைத்து மாயவர் பூசை செய்வார்கள். எல்லாருக்கும் அன்னமிடுவார்கள். (அன்னதானத்தை சைவர்கள் மகேஸ்வர பூசை என்பார்கள். வைஷ்ணவர்கள் மாயவர் பூசை என்பார்கள்) இப்படி அன்னதானம் இடும்போது, இறைவன், சித்தர்கள், தெய்வச் சீலர்கள் மனித உருவில் வந்து அந்தப் படையலை ஏற்றுக் கொள்கிறார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அன்றைக்கு என் கிராமத்து ஹரிஜனங்கள் மிகவும் பக்தியோடும் தூய்மையோடும் கூட்டமாக வருவார்கள். அவர்களில் ஒருவர் தன் தலையில் ஒரு பாதுகையை (ஒரு ஜோடி அல்ல) எடுத்து வருவார். அந்தப் பாதுகை அவர்களே தைத்தது. பெருமாளின் ஊன்றிய திருவடிக்காக மட்டும் தயாரிக்கப்பட்டது. அந்தப் பாதுகையை பெருமாளுக்கு அணிவிப்பார்கள். எந்தவித வேறுபாடுமின்றி, கோயிலுக்குள் எல்லாரும் சென்று வழிபடுவார்கள். சிறு வயதிலிருந்து இது போன்ற நிகழ்ச்சிகளைப் பார்த்ததால், பக்தி உணர்வு வளர்ந்தது. தோட்டத்தில் ஹரிஜன இளம் குழந்தைகளோடு ஓடி ஆடி விளையாடியதாலும், உயர்வு—தாழ்வு என்ற சாதி வேறுபாடு என் உள்ளத்தில் வளர்வதற்கு இடமில்லாமல் போயிற்று.

என்னுடைய இரண்டு பாட்டிகளும் (அம்மாவைப் பெற்ற பவளாயி அம்மாள், அப்பாவைப் பெற்ற காமாட்சி அம்மாள்) என் உள்ளுணர்வு வளர்ச்சிக்குக் காரணமானவர்கள் என்று சொல்லலாம். அவர்களின் அறிவுரைகள், அவர்கள் நடந்து காட்டிய முறைகள் என் வாழ்க்கைக்குப் பெரிதும் உதவி வருகின்றன.

நம் வீட்டுக்கு வரும் விருந்தினர்களை அவர்கள் தங்களின் சொந்த வீட்டில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படும் வகையில் அன்போடும் பண்போடும் உபசரிக்கவேண்டும், உணவுப் பண்டங்களை வீணாக்கக் கூடாது. அன்னம்தான் உயிர். வரவுக்குத் தகுந்த செலவு செய்து சிக்கனமாக வாழ வேண்டும் என்றெல்லாம் காமாட்சிப் பாட்டி அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள். எங்கள் வீட்டுக்கு யார் வந்தாலும், அவர்கள் பண்ணையிலோ, தோட்டத்திலோ வேலை பார்ப்பவர்களாக இருந்தாலும் காமாட்சிப் பாட்டி முதலில் கேட்கும் கேள்வி, "சோறு தின்னுச்சா?" என்பதுதான். பசி ஆறவில்லை என்று யாராவது சொல்லக் கேட்டால் உடனே சாதம் பிசைந்து எடுத்து வந்து போடுவார்கள்.

செட்டிப்பாளையத்தில் எங்கள் வீட்டிலிருந்த பாதாம் மரம், கொய்யா, மாதுளை, பிள்ளையார் கோயில் வேப்ப மரம், தோட்டத்துத் தென்னை மரம், பலா மரம் — முதலியவற்றின் மீது எனக்குச் சிறுவயதிலிருந்தே ஒரு தனிப்பட்ட பாசம் உண்டு. அதனால் நாங்கள் சென்னையில் 'முருகனடி' என்று பெயர் கொண்ட வீட்டைக் கட்டியதும் அதே வகைக் கன்றுகளை நட்டு வைத்தேன். அவை இப்போது ஓங்கி உயர்ந்து பெரிய மரங்களாக வளர்ந்திருக்கின்றன. அந்த மரங்களைப் பார்க்கும் போதெல்லாம் செட்டிபாளையத்துக் குழந்தை பருவ நினைவுகள் எனக்கு வரும்.

செட்டிபாளையத்தில் என் தாத்தா தினமும் விடியற்காலம் ஐந்துமணிக்கே எழுந்து வயலுக்குப் போவார்கள். "ஏன் தாத்தா தினமும் வயலுக்குப் போறீங்க? ஒரு நாளைக்குப் போகாட்டி என்ன?" என்று கேட்போம்.

அதற்கு அவர்கள், "நான் கரூர் போய்வரும்போது உங்களுக்குத் தின்பண்டங்கள் வாங்கி வருவேனல்லவா? நான் வருவதற்கு முன்பு, "தாத்தா வந்துவிட்டாரா? தாத்தா வந்துவிட்

டாரா?'' என்று எட்டி எட்டிப் பார்ப்பீர்கள். நான் அன்றைக்கு வராத போனால், நீங்கள் எப்படிச் சோர்ந்து போவீர்களோ அப்படி இந்தப் பயிர் பச்சைகளும் ஒருநாளைக்கு நான் போகவில்லையென்றால் வாடிப் போகும்'' என்பார்கள்.

நாற்றங்காலிலிருந்து எடுத்து நட்ட நெல் பயிர் வயல்களில் வேர் பிடித்து வளர ஆரம்பித்ததும் அவை நன்கு விளைச்சல் தர வேண்டும் என்று இறையருளை வேண்டி வயல்காட்டில் பொங்கலிட்டுப் படைப்பார்கள். மறுபடியும் அறுவடை ஆனதும் நன்றியோடு, தை மாதம் பொங்கல் வைத்து பயிர் விளையப் பெரிதும் காரணமாக இருந்த சூரியனுக்கும் கால்நடைகளுக்கும், மாடுகளுக்கும் படைப்பார்கள்.

தாத்தா தினமும் காலையில் பயிர் பச்சைகளைப் பார்த்தபின் ஆடு மாடுகளையும் பாசத்தோடு கவனித்துவிட்டு வருவார்கள். வந்து குளித்துவிட்டு, தேங்காய், வாழைப்பழங்கள் எடுத்துச் சென்று பிள்ளையாரை வணங்கித் தேங்காயை உடைத்து அங்கு விளையாடும் பிள்ளைகளுக்குத் தேங்காயையும், பழங்களையும் கொடுப்பார்கள்.

எங்கள் குல தெய்வமான செல்லாண்டி அம்மன் — கருப்பண்ணசாமியிடத்திலே மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு இரவும் கருப்பண்ணசாமி எங்கள் ஊருக்கு வந்து எல்லாரையும் காப்பதாக நம்பினார்கள், கருவூர் பசுபதி ஈஸ்வரர் அலங்காரவல்லி — சௌந்தர நாயகி ஆகிய தெய்வங்களிடம் மிகுந்த பக்தி உண்டு. அதன் காரணமாகத் தான் எனக்கு சௌந்தர நாயகி என்று பெயர் வைத்தார்கள்.

தேசிய உணர்வு என் உள்ளத்துக்குள் பெரிதும் அரும்பியதற்குக் காரணமாக இருந்தவர்கள் என் தாய்வழிப் பாட்டி பவளாயி அம்மாளும், தந்தை சுந்தர கவுண்டருமேயாவார்கள். திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்கு, காந்திஜி, கஸ்தூரிபாய் காந்தி, நேருஜி போன்ற பெருந்தலைவர்கள் வந்ததைப் பற்றியும், அப்போது அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், காந்திஜியும் ராஜாஜியும் சம்பந்திகளானது போன்ற பல செய்திகளையும் அப்பாவும் பாட்டியும் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள்.

என் தந்தை எப்போதும் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் போன்ற நூல்களிலிருந்து பல பாடல்களைப் பாடிக் கொண்டும், அவற்றிலுள்ள கருத்துக்களை எடுத்துச் சொல்லிக் கொண்டும் இருப்பார்கள். அப்போது, அவையெல்லாம் எனக்குச் சரியாகப் புரியவில்லை என்றாலும் ஏதோ ஓர் ஈடுபாடு இருந்ததன் காரணமாக அவற்றில் மனம் லயித்திருக்கிறது.

· திருமணம் ஆன பிறகு, என் இதயத்தில் புதைந்திருந்த இலக்கிய, கலை, தேசிய, தெய்வீக உணர்வுகள் எனும் விதைகள் முளைத்துத் தழைப்பதற்குக் காரணமாக இருந்தவை என் கணவர் அவர்கள் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் ஆன சிறப்பு மிக்க உரங்களே ஆகும்! இன்னும் இறைவன் திருவருள் என்னும் நீர் இவற்றைப் பசுமையாகப் பாதுகாக்கின்றது.



அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்

— சரோஜினி வரதப்பன் —

பிருந்தாவனக் கதையரங்கம்

எலிகளின் மொழி



பாரத நாட்டின் கிழக்குக் கடற்கரை ஓரத்திலே அந்த நகரம் இருந்தது. அதன் பெயர் நாகபுரி. அது ஒரு துறைமுகப் பட்டினமும் கூட. ஆகவே, அது வெளிநாட்டினரின் வருகைக்கும் உள்நாட்டின் வணிகத்திற்கும் மிகவும் பெயர் பெற்று விளங்கியது.

முன்னொரு காலத்தில், அந்த நாகபுரி துறைமுகப் பட்டினத்தில், அறிவாணன் என்னும் ஒரு பண்டிதர் வாழ்ந்து வந்தார். அவருடைய பாட்டனார், 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்னும் பழமொழியின்படி பல வெளிநாடுகளுக்குச் சென்று, வணிகம் புரிந்து, பொருள் ஈட்டி வாழ்ந்து வந்தார்.

அதோடு பல நாட்டுப் புத்தகங்களையும் வாங்கிக்கொண்டு வருவார். அவருக்குப் பிறகு, அவர் மகன் செல்வராயன் அவைகளை நன்கு படித்துப் பாதுகாத்து வந்தார். அவரும் வணிகத்தின் மூலம் பெரும் செல்வம் சேர்த்தார். தன் பிள்ளை அறிவாணனுக்குப் பல மொழிகளையும் கற்பித்தார்.

அவருக்குப் பிறகு அறிவாணன் வளர்ந்து மணம் புரிந்து வாழ்ந்து வந்தார்.

ஆனால், தகப்பனாரைப் போல வணிகத் துறையில் கவனம் செலுத்தாமல் பெற்றோர் சேர்த்து வைத்த செல்வத்தை நன்றாகச் செலவு செய்து ஆடம்பரமாக வாழ்ந்து வந்தார். பல மொழிகள் அறிந்த திறமையால் எப்பொழுதும் வம்பும் வாதமும் செய்து கொண்டிருந்தார்.

ஊரில் உள்ளவர்கள் எல்லாம் அவரிடம் பயமும் பணிவும் கொண்டிருந்தனர். அவர் அவர்களின் பயத்தையும் பணிவினையும் கண்டு தற்பெருமை பேசி, 'எல்லாம் செய்ய வல்லவன் நான் ஒருவன்' என்று இறுமாப்புக் கொண்டிருந்தார்.

அந்த ஊரில் வாழ்ந்து வந்த அருணாசலம் என்னும் ஒரு பெரியவர் அறிவாணனை நோக்கி, ''கர்வம் கொள்ளாதே! தர்மம் செய்! கடவுளைப் போற்று!'' என்று அறிவுரை கூறி வந்தார்.

''கடவுளாவது மண்ணாங்கட்டியாவது! அறிவே கடவுள். நான் இத்துடன் நிற்கப் போவதில்லை. மிருகங்கள், பறவைகளின் மொழிகளையும் கற்கப் போகிறேன்'' என்று பதில் சொன்னார் அறிவாணர்.

முதலில் எலிகளின் மொழியைக் கற்றுக் கொள்ளப் போவதாகச் சொல்லி, வீட்டில் எலிகளை வளர்க்க ஆரம்பித்தார். காட்டு எலிகள், வயல் எலிகள், பொந்து எலிகள் என்று வீடு முழுவதும் எலிகள் கொழுத்து வளர்ந்து வந்தன.

ஒருநாள் இரவு.

ஊரே உறங்கிக் கொண்டிருக்கும் நேரம்.

அறிவாணர் தன் வீட்டில் மனைவி மக்களுடன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் வேளை.

அவர் வளர்த்து வந்த ஒரு போக்கிரி எலி அகல் விளக்குத் திரியை இழுத்துக் கொண்டு வீட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஓடி விளையாடியது.

திரியிலிருந்த நெருப்புப் பற்றிச் சில துணிமணிகள் எரிய ஆரம்பித்தன. சிறிது நேரத்திற்குள், பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த செல்வந்தரின் வீடு அல்லவா, அது? பழைய தேக்கு மர மாடி வீடு தீயில் ப்ற்றிக் கொண்டு 'திமுதிமு'வென்று எரிந்தது.

அறிவாணரும் மனைவி மக்களும் திடுக்கிட்டு எழுந்து, 'குய்யோ! முறையோ!' என்று கூவிக் கொண்டு தெருவில் நின்றனர்.

அறிவாணர், "கடவுளே! கடவுளே!" என்று கூவினார். அவருக்கு அப்பொழுதுதான் கடவுள் ஞாபகமே வந்தது!

"மகனே" என்று கூப்பிட்டுக் கொண்டே அவர் முன் கடவுள் தோன்றினார்.

"அப்பா மகனே! மனிதர்கள் அறிந்து கொள்ளவும், சௌக்கியமாக வாழவும் மொழி, உணவு, வயல், ஆறு, மலை, பூ, பழம், மரம், சூரியன், சந்திரன் ஆகிய எல்லாவற்றையும் படைத்த நான், அவசியம் ஏற்பட்டு இருந்தால் மிருகங்களின் மொழியையும் மனிதர்கள் புரிந்து கொள்ளும்படி செய்திருப்பேன். தேவை இல்லாத விஷயத்தில் 'ஆராய்ச்சி செய்கிறேன்!' என்று வீட்டில் எலிகளை வளர்த்து இப்படிப் பரம்பரைச் சொத்துக்கு நாசம் தேடிக் கொண்டாயே! பல மொழிகளைக் கற்றும் அறிவு இல்லாமல் போய்விட்டதே!" என்றார்.

"கடவுளே! உங்களை மறந்து நான் என் அறிவை இழந்துவிட்டேன். மன்னியுங்கள். புத்தகங்களை வாங்கலாம். ஆனால், அறிவை வாங்க முடியாது! என்று புரிந்து கொண்டேன்!" என்று அறிவாணர் சொல்லி வெட்கத்தால் தலைகுனிந்தார்.

விறகு வெட்டியின் மகள்



ஆர். அனந்த நாராயணன்
10,680

நகரத்தை ஒட்டிய காட்டில் நாகன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு சொர்ணம் என்று ஒரு மகள் இருந்தாள். அவள் தேவதை போல் அழகானவள்.

நாகன் விறகு வெட்டிக் காலம் தள்ளுபவன். வயதாக ஆக அவனுடைய வருமானம் குறைந்தது. வறுமை வளர்ந்தது. அதனால் நகரத்திலிருக்கும் அரசரைப் பார்த்து உதவி பெற்று வர நினைத்தான். சொர்ணம் அவன் முடிவை வரவேற்றாள். வேந்தன் சபையில் எப்படிப் பேச வேண்டும் என்பதையும் விறகு வெட்டிக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

நாகன் நகரத்துக்குப் போனான். அரசரைக் கண்டான். தனது வறுமையைக் கூறி உதவி கோரினான்.

"விறகு வெட்டியான நீ இவ்வளவு நாகரிகமான முறையில், நயமான சொற்களால் பேசுவதற்கு எப்படிக் கற்றுக் கொண்டாய்?" என்று கேட்டான் அரசன்.

"அரசே, இதை என் மகள் சொர்ணம் எனக்குச் சொல்லிக் கொடுத்தாள்" என்று கூறினான் நாகன்.

''காட்டில் வாழும் சொர்ணத்துக்கு யார் இதைச் சொல்லிக் கொடுத்தது?'' என்று அரசன் மீண்டும் கேட்டான்.

''கடவுளின் அருளும் வறுமையின் கொடுமையும் இவற்றை அவளுக்குக் கற்றுக் கொடுத்ததாக அவளே என்னிடம் கூறினாள்!''

நாகன் சொன்னது நாடாளும் அரசனைச் சிந்திக்க வைத்தது. இந்த விறகு வெட்டியின் மகள் சிறந்த அறிவாளியாக இருக்க வேண்டும் என்று நினைத்தான். வறுமையில் அறிவின் திறம் வளரும் என்பதை நாசூக்காக அவள் தெரிவித்திருக்கிறாளே! அவளது அறிவைச் சோதிக்க விரும்பிய அரசன் ஒரு கூடையில் எட்டு முட்டைகளை வைத்து, அதை நாகனிடம் கொடுத்தான்.

''இம்முட்டைகளை உன் மகளிடம் கொடுத்துக் குஞ்சு பொரித்ததும், அக்குஞ்சுகளை என்னிடம் கொண்டு வா! இல்லையென்றால், உனக்கும் உன் மகளுக்கும் மரண தண்டனை கிடைக்கும்'' என்றான் அரசன்.

நாகன் முட்டைகளை எடுத்துக் கொண்டு போய்த் தன் மகளிடம் கொடுத்து, அரசன் கூறியதையும் சொன்னான். சொர்ணம் முட்டைகளை எடுத்துப் பார்த்தாள். அவை நன்றாக வேகவைக்கப்பட்ட முட்டைகள். அவற்றிலிருந்து குஞ்சு வராது என்பதைத் தெரிந்து கொண்டாள்.

சொர்ணம் எட்டு அவரை விதைகளை எடுத்தாள். அவற்றை நன்றாக வேக வைத்தாள். பின்பு அவரை விதைகளை நாகனிடம் கொடுத்து, அவன் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறினாள். சொர்ணம் சொன்னபடி செய்ய நாகன் வேக வைத்த அவரை விதைகளுடன் நகரத்துக்குச் சென்றான். சோலையில் அரசன் உலாவும் நேரத்தை அறிந்து அங்கே சென்றான். அரசன் கண்ணில் படும்படியான ஓர் இடத்தில் குழி தோண்டினான். அரசன் அந்தப் பக்கம் வரும் வரை காத்திருந்தான். அரசன் தலை தெரிந்ததும், ''கடவுளே, இந்த வேக வைத்த அவரை விதைகள் வேகமாக வளர்ந்து, கொத்துக் கொத்தாய்க் காய்கள் காய்க்குமாறு அருள் செய்'' என்று உரக்கக் கூறிக் கொண்டே அவரை விதைகளைக் குழியில் போட்டான்.

நாகன் கூறியதைக் கேட்ட அரசன் அவனிடம் வந்தான். அவன் தன் அரசவைக்கு வந்து உதவி கேட்ட விறகு வெட்டி என்பதைப் புரிந்து கொண்டான்.

''ஏ, விறகு வெட்டியே, வேக வைத்த அவரை விதைகளைப் போட்டால் எப்படி அவை முளைக்கும்?'' என்று கேட்டான் அரசன்.

''வேக வைத்த முட்டைகளிலிருந்து குஞ்சு வெளிவருவது போல, வேக வைத்த அவரை விதைகளிலிருந்து செடி முளைக்கும்'' என்றான் நாகன்.

''உன்னை இப்படிச் செய்யச் சொன்னதும், பேசச் சொன்னதும் உன் மகள் தானே?'' என்று கேட்டான் அரசன்.

''ஆமாம்,'' என்றான் நாகன்.

அன்றே அரசன் நாகனுடன் சென்று சொர்ணத்தைச் சந்தித்தான். சொர்ணத்தின் அறிவை அறிந்திருந்த அரசன், அவளது அழகை நேரில் கண்டு சொக்கிவிட்டான். சொர்ணத்தை மணந்து அவளைப் பட்டத்து ராணியாக்கினான்.

இனிமேல் நாகனுக்குக் கவலை ஏது?


படிக்காதவள்




எம். அருணாசலம்
11, 832

இருந்தை என்னும் கிராமத்தில் செல்வன் என்னும் ஏழைத் தொழிலாளி வசித்து வந்தான். அவன் ஓரளவு படித்திருந்தான். ஆனால் அவன் மனைவி

ஒரே கோட்டில்





சுப்பம்மாள் சிறிதளவும் படிப்பறிவு இல்லாதவள். செல்வத்திற்கு உள்ளூரில் வேலை கிடைக்கவில்லை. அதனால் பக்கத்தில் உள்ள பட்டணத்திற்கு வேலை தேடிச் சென்றான்.

அவன் சுப்பம்மாவிடம் பணம் எதுவும் தராமல் சென்றிருந்தான். பட்டணம் சென்றதும் அவனுக்குத் தன் மனைவியிடம் பணம் தராமல் வந்தது நினைவிற்கு வந்தது. அவன் வீட்டில் வாயிற்படிக்கு மேல் கூரையில் 50 ரூபாய் செருகி வைத்திருந்தான்.

அவன் சுப்பம்மாளுக்கு, "நான் பட்டணம் சென்று வேலை செய்கிறேன். விரைவில் பணம் அனுப்புகிறேன். நம் வீட்டு வாயிற்படிக்கு மேல் கூரையில் 50 ரூபாய் வைத்திருக்கிறேன். நான் பணம் அனுப்பும்வரை அதைப் பயன்படுத்திக் கொள்" என்று கடிதம் எழுதினான்.

சுப்பம்மாள் வீட்டில் இருக்கும் போது, "சார், தபால்" என்னும் சத்தம் கேட்டது. உடனே சுப்பம்மாள் எட்டிப் பார்த்தாள். தபால்காரர் கடிதத்தைச் சுப்பம்மாளிடம் நீட்டினார்.

சுப்பம்மாள் கடிதத்தை வாங்கியதும் அந்தத் தெரு வழியாகச் சென்ற ஒருவரை அழைத்து, "ஐயா, கடிதத்தை அனுப்பியவர் யார்?" எனக் கேட்டாள்.

"செல்வன் என்பவர் அனுப்பியிருக்கிறார்" என்று கூறினார் அவர்.

அதற்கு சுப்பம்மாள், "ஐயா, எனக்குப் படிக்கத் தெரியாது. நீங்களே இதில் இருப்பதைப் படித்துச் சொல்லுங்கள்" என்று கூறினாள்.

அவர் ஒருமுறை மனத்திற்குள் படித்துவிட்டுச் சுப்பம்மாளிடம், "தாகமாக இருக்கிறது. தண்ணீர் கொண்டு வாருங்கள். பிறகு இதில் எழுதியுள்ளதைக் கூறுகிறேன்" என்றார்.

சுப்பம்மாள் தண்ணீர் எடுத்து வர உள்ளே சென்றாள். அந்த மனிதர், தான் நின்றிருந்த இடத்திற்கு மேல் கூரையில் செருகி இருந்த பணத்தை மெதுவாக எடுத்துக் கொண்டார். அதன் பிறகு சுப்பம்மாள் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

அவர் தண்ணீர் குடித்துவிட்டு, "ஒன்றுமில்லை. பட்டணத்தில் வேலை கிடைத்துவிட்டதாம். விரைவில் பணம் அனுப்புவதாக எழுதியுள்ளார்" என்று கூறிவிட்டுக் கடிதத்தைச் சுப்பம்மாளிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்.

கல்வியறிவு இல்லாத காரணத்தால் சுப்பம்மாள் பணத்தை இழந்து, தன் கணவன் எப்போது பணம் அனுப்புவாரோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண்களைப் பாதுகாப்பது எப்படி?



டாக்டர் பக்கம்

டாக்டர் கு. கணேசன்

உடம்பில் உள்ள முக்கிய உறுப்புகளில் கண்களும் ஒன்றல்லவா? கண் ஒளி இல்லையென்றால் வாழ்வில் ஒளி இல்லை என்பதை அறிவீர்கள்தானே?

அன்றாட வாழ்வில் கண்கள் எப்படியெல்லாம் பயன்படுகின்றன? நீங்கள் படிக்க வேண்டுமா? கண்கள் அவசியம். படம் பார்க்க ஆசையா? கண்கள் வேண்டும். இயற்கையின் அழகைக் கண்டு ரசிக்க வேண்டுமா? அவசியம் தேவை கண்கள்.

இவ்வளவு எதற்கு?

தினமும் காலையில் எழுந்ததிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்கிற வரைக்கும் உங்கள் ஒவ்வொரு செயலுக்கும் முக்கிய வழிகாட்டியாக இருப்பவை உங்கள் கண்கள்தானே!

இயற்கையிலேயே கண்கள் பாதுகாப்பான இடத்தில்தான் அமைந்துள்ளன. முகத்தில், இரண்டு எலும்புக் குழிகளுக்குள்ளே கோள வடிவத்தில் அமைந்துள்ள கண்கள், விழி வெளிப் படலம், விழியடிக் கரும்படலம், விழி வெண் படலம், கறுப்புப் படலம், முன் கண் ரசம், விழிலென்சு, பின் கண் ரசம், சிலியரித் தசை, பாவை, விழித்திரை, பார்வை நரம்புகள் என்று பல பகுதிகளால் ஆனவை.

கண்களுக்கு வெளியிலிருந்து வரும் ஆபத்தைத் தவிர்க்கக் கண் இமைகள் உள்ளன.

கண்களுக்குப் பாவையைத் தருபவை விழிலென்சும், விழித்திரையும்தான். அது எப்படி என்பதை

இங்கேசுருக்கமாகச்சொல்கிறேன் —

நீங்கள் தியேட்டர்களில் சினிமா பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? அங்கே படச்சுருளில் உள்ள சிறிய படத்தை ஒரு லென்சு மூலமாகப் பெரிதாக்கி வெண்திரையில் பிம்பமாக விழச் செய்து உங்களுக்கு நிஜப்படமாகக் காண்பிக்கிறார்கள் இல்லையா?

அதேமாதிரிதான் இங்கே —

நீங்கள் பார்க்கும் பொருட்களிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் உங்கள் கண்ணின்லென்சின்வழியாகஉள்ளே சென்று விழித்திரையில் தலைகீழான பிம்பத்தை உண்டாக்குகின்றன. அவற்றைப் பார்வை நரம்புகள் கிரகித்து மூளைக்கு எடுத்துச் சென்று நீங்கள் பார்க்கும்பொருட்களை உணர்த்துகின்றன. இதைத்தான் 'பார்வை' என்கிறோம்.

கண்களைச் சரியான முறையில் பராமரித்தால் கண்களுக்கு எந்தவித நோய்களும் அண்டுவதில்லை. நம் பராமரிப்பில் ஏற்படும் குறைபாடுகளே கண் பார்வையில் ஏற்படும் குறைபாடுகளுக்குக் காரணமாகின்றன.

இங்கே, கண்களுக்கு வ்ரும் சில குறைபாடுகளையும் அவற்றைத் தடுக்கும் முறைகளையும் விளக்கமாகப் பார்ப்போம்.

முதலில் மாலைக்கண் நோய்: நாம் சாப்பிடும் உணவில் வைட்டமின் 'ஏ' சத்து குறைவாக இருந்தால் 'மாலைக் கண் நோய்' வரக்கூடும். இது பெரும்பாலும் ஏழைக் குழந்தைகளையே அதிகமாகப் பாதிக்கும்.. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாலைப் பொழுது வந்துவிட்டால் பார்வையும் மங்கிவிடும். இதை ஆரம்பத்திலேயே கவனித்துக் குணமாக்காவிட்டால் நிரந்தரமாகவேபார்வைபோய்விடும்.

எனவே, இந்நோயைப் போக்க வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளவேண்டும். எடுத்துக் காட்டாக காரட், காலிபிளவர் போன்ற காய் வகைகள், அகத்திக் கீரை, முருங்கைக் கீரை போன்ற கீரை வகைகள். தக்காளி, பப்பாளி போன்ற பழ வகைகள், பால், முட்டை, இறைச்சி போன்ற உணவு வகைகள் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொண்டால், 'மாலைக் கண் நோய்' வரவே வராது.

அடுத்ததாக பார்வைக் கோளாறுகள்: சில குழந்தைகள் படிக்கும்போது புத்தகத்தைக் கண்களுக்குமிக அருகில் வைத்துப் படிப்பார்கள். இன்னும் சிலர்மிகத்தொலைவில்வைத்துப்படிப்பார்கள். சிலர் படுத்துக் கொண்டே படிப்பார்கள்; சிலர் பஸ்ஸில் பயணம் செய்யும் போதும் படிப்பார்கள். இம்மாதிரி தவறான முறையில் படிக்கும்போது கண்ணின் விழிலென்சிலும், விழித் திரையிலும் கோளாறுகள் வருகின்றன. இக்கோளாறுகளுக்கு. 'கிட்டப் பார்வை' (Short sight) என்றும். 'தூரப் பார்வை' (Long sight) என்றும் பெயர்.

கிட்டப் பார்வை உள்ளவர்களுக்கு அருகில் உள்ள பொருட்கள் மட்டுமே தெரியும்; தூரத்தில் உள்ள பொருட்கள் தெரியாது.

தூரப் பார்வை உள்ளவர்களுக்கு தூரத்தில் உள்ள பொருட்களே தெரியும்; அருகில் உள்ள பொருட்கள் தெரியாது.

இவ்விரு கோளாறுகளின் ஆரம்ப அறிகுறிகளாகத் தலைவலி, கண் வலி கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல் போன்றவை உண்டாகும்.

இத்தருணத்தில் கண் மருத்துவரை ஆலோசித்துத் தகுதி வாய்ந்த கண் கண்ணாடிகளை அணிவதன் மூலம் இப் பார்வைக் கோளாறுகளுக்கு நிவர்த்தி காணலாம்.

அது மட்டுமல்லாமல், நீங்கள் படிக்கிற போது சில விதி முறைகளைக் கையாண்டால் பார்வைக் கோளாறுகள் வருவதை முன்கூட்டியே தடுத்து விடலாம். அவை என்ன?

— பகலானாலும், இரவானாலும் குறைந்த வெளிச்சத்தில் புத்தகங்களைப் படிக்காதீர்கள். நல்ல வெளிச்சமுள்ள இடங்களில் மட்டுமே படியுங்கள்.

— இரவு நேரங்களில் படிக்கும் பொழுது விளக்கின் வெளிச்சம் புத்தகத்தில் விழ வேண்டுமே தவிர, உங்கள் கண்களில் படக் கூடாது.

— உங்கள் கண்களுக்கும்படிக்கும் புத்தகத்திற்கும் இடைப்பட்ட தூரம்

30 செ. மீ.தான் இருக்க வேண்டும். படிக்கும் புத்தகத்தை சுமார் 45° கோணத்தில் வைத்துக்கொள்ளலாம். பலகோணங்களில் வைத்துப் படிக்கக் கூடாது.

— மிகச் சிறிய அளவில் உள்ள எழுத்துக்களை நீண்ட நேரம் படிக்கக் கூடாது.

— அதிகநேரம்பாடங்களைப்படிக்கும்போது, கவனம் அனைத்தும் பாடத்தில் இருந்தாலும், கண்களை அவ்வப்போது பாடத்திலிருந்து விலக்கித் தொலைவில் உள்ள பொருட்களின் மேல் படர விடுங்கள்.

— எம்ப்ராய்டரிபோன்றநுணுக்கமான வேலைகளைக் குறைந்த வெளிச்சத்தில் செய்யாதீர்கள்.

— டெலிவிஷன் பார்க்கும் குழந்தைகள் தொடர்ந்து ஒன்றரை மணி நேரம் மட்டுமே டெலிவிஷன் பார்க்கலாம்.



— கடைகளில் விற்கும் தரம் குறைந்த, பிளாஸ்டிக் கண்ணாடிகளை கண்களில் அணிவதைத் தவிர்த்து விடுங்கள்.

இத்தனை பாதுகாப்பு முறைகளையும் கையாண்டால் பார்வைக் கோளாறுகள் வருவதைத் தடுத்து விடலாம் அல்லவா?

கடைசியாக 'மெட்ரூஸ் – ஐ' என்று சொல்லப்படும் கண் – நோய் (**Conjunctivitis**) பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம். இது பாக்டீரியா கிருமிகளினாலும், வைரஸ் கிருமிகளினாலும் வரக் கூடியது. சில சமயங்களில் ஒவ்வாமை (**Allergy**) யினாலும் வரலாம்.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கண்கள் ஆப்பிள் பழம் போல் சிவந்து விடும். கண் வலி எடுக்கும். கண்ணுக்குள் இடைவிடாத நமைச்சல் ஏற்படும். கண் இமைகளைத் திறக்க இயலாத அளவுக்குப் பிசிறு வெளியேறும். கண் இமைகள் வீங்கும்.

இந்நோய், ஈக்கள் மூலமாக மற்றவர்களுக்கு எளிதாகப் பரவிவிடும்.

எனவே, கண் நோய் வந்தவர்கள் உடனே மருத்துவரைச் சந்தித்து மருத்துவம் பெற வேண்டும். அதை விட்டு விட்டுத் தாங்களாகவே கடைகளில் சில சொட்டு மருந்துகளை வாங்கி உபயோகிக்கக் கூடாது. அது கண் பார்வைக்கு ஆபத்தை விளைவிக்கும்.

— கண் நோய் வந்தவர்கள் சுத்தமான துணியால் கண்களில் வெளிப்

படும் பிசிறுகளைத் துடைத்துக் கொள்ளலாம்.

— வெளிச்சம் பட்டால் கண்கள் கூசும். அதைத் தவிர்க்க கண்ணுக்குத் துணித் திரை ஒன்றைத் தற்காலிகமாகப் போட்டுக் கொள்ளலாம்; அல்லது கூலிங்கிளாஸ் அணிந்து கொள்ளலாம்.

— கண் நோயாளிகள் உபயோகித்த சோப்பு, துண்டு, கைக்குட்டை, போன்றவற்றை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது.

— சில சமயங்களில் கண்களுக்குள் தூசு, துரும்பு போன்ற அசுத்தங்கள் சிக்கிக் கொள்ளும். இம்மாதிரி சமயங்களில் கண்களைக் கசக்கி விடக் கூடாது. சிக்கியுள்ள பொருள் சிறியதாக இருந்தால் இயற்கையிலேயே கண்களைச் சுத்தப்படுத்தும் கண்ணீர் மூலமாக வெளியே வந்துவிடும். அப்படி வெளிவராத பட்சத்தில் சுத்தமான தண்ணீரால் கண்களைக் கழுவிக் கண்களைச் சிறிது நேரம் மூடிக் கொண்டிருந்தால், தூசு ஒதுங்கி வெளியேறி விடும். இதிலும் வெளியேறாவிடில் கண் மருத்துவரிடம் செல்வதே நல்லது.

— சோதனைச் சாலைகளில் விபத்துக்கள் காரணமாக அமிலங்கள் கண்ணில் பட்டுவிடலாம்; தீப்புகை கண்களைத் தாக்கலாம். இச்சமயங்களிலும் முதலில் சொன்ன மாதிரியே கண்களை சுத்தமான தண்ணீரால் கழுவி உடனே கண்மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

பாக்டீரியாக் கிருமிகளின் தாக்குதலினால் கண் இமைகளில் சிறு சிறு கட்டிகள் வரலாம்; பார்வையைப் பறிக்கக்கூடிய 'கிளக்கோமா' என்ற கொடிய நோயும் வரலாம்; விழி லென்சைத் தாங்கியுள்ள தசைகளின் கோளாறுகள் காரணமாக 'மாறு கண்' வரக்கூடும். நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கண்களில் 'காட்டராக்ட்' (Cataract) என்ற நோய் வரலாம்.

இப்படிப் பல நோய்கள் கண்களைப் பாதித்தாலும், உங்களின் கவனமான பராமரிப்பினாலும், பாதுகாப்பு முறைகளினாலும் நல்ல முறையில் கண்களைப் பாதுகாக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.


யார் இந்தச் சிறுவன்?

மகிழ்வுடன் விளையாடிக் கொண்டிருக்கும் இந்தச் சிறுவன் யாரெனத் தெரிகிறதா?

பொம்மை விமானம் ஓட்டும் சிறுவனின் படத்தை வைத்து எளிதில் ஊகித்து விடலாமே!

விடை: பிரதமர் ராஜீவ் காந்தி.


சன் வார இதழிலிருந்து: சிதாபஞ்சு.



உருவகக் கதைகள்

-மலையமான்-

இன்ப வாழ்வு



மரத்தடிக் கிளி ஜோதிடர் தம் தொண்டைக்கு உணர்வூட்ட நினைத்தார். அடுத்திருந்த தேநீர்க் கடையை நோக்கிச் சென்றார். அந்தச் சமயத்தில் சோதிடக் கிளி கூண்டை விட்டு வெளியே வந்தது. பலருக்கும் பலன் சொல்லும் தான், ஏன் தன் வருங் காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடாது என்று எண்ணியது.

உடனே பழகிவிட்ட முறைப்படி, ஒரு சோதிட் அட்டையைத் தேர்ந்தெடுத்தது.

''உனக்கு நல்ல வீடு உண்டு; சுவையான உணவும் கிடைக்கும். உன் வாழ்வு மகிழ்ச்சியானது'' என்று அட்டை சொன்னது.

'அட்டை என் தற்போதைய நிலையைக் கூறுகிறதா? அன்றி வருங் காலம் பற்றிக் கூறுகிறதா?' என்பது கிளிக்கு விளங்கவில்லை. ஆகையால், சோதிட அட்டை, தன் சொற்களுக்குத் தானே விளக்கம் கூறியது.

''நீ அழகான கூண்டில் இருக்கிறாய். அது நல்ல வீடுதானே! உனக்கு அவ்வப்போது, நம் தலைவர் உணவு தருகிறார். அது சுவையான உணவுதானே! ஆகவே, நீ மகிழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும்'' என்று விளக்கவுரை வழங்கியது.

இதைக் கேட்ட கிளி, ''இந்தக் கூண்டு அழகாக இருக்கலாம். ஆனால், எனக்கு இது சிறைதான். நானாகத் தேடிப் பெற்று உண்ணாமல் எனக்கு ஊட்டப்படும் உணவு, அடிமைக்குத் தரும் கூலி போன்றதுதான். இந்த நிலையில் நான் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்?'' என்று கேட்டது.


''நீ மிக்வும் நன்றி கெட்டவன்; தலைவர் தான் துன்பப்பட்டாலும், உன்னைக் கண்ணே போல் போற்றுகிறார். உன் உடலுக்கு அழகு சேர்க்கப் பிசிர்களையும் கத்தரித்து விடுகிறார். ஆனாலும், உனக்கு நன்றி கூறி மகிழும் நெஞ்சு சிறிது கூட இல்லையே!'' என்று சோதிடருக்காக வழக்காடியது.

''அவர் என்க்கு அழகா சேர்க்கிறார். வளர்ந்து வரும் என் சிறகையல்லவா வெட்டி, நான் பறக்க முடியாதபடி செய்து என்னை ஆயுள் கைதியாக மாற்றி விடுகிறார். தன்னலத்திற்காக என்னலத்தைப் பேணி, எப்போதும் தன்னுடனே வைத்திருக்க முனைகிறார்'' என்று மறுமொழி சொன்னது கிளி.

'என்ன இருந்தாலும் உனக்குச் சிறிதும் நன்றியுணர்ச்சி இல்லை' என்று அட்டை மீண்டும் வலியுறுத்தியது.

''பட்டினி கிடந்தாலும், அழகற்ற கூட்டிலிருந்தாலும் அதுவே எனக்கு இன்பம் தரும். அழகான கூட்

டில் வாழ்ந்தும் சுவையான உணவை உட்கொண்டும் விடுதலையின்றி இருந்தால், அது வாழ்வே ஆகாது. அட்டையே, உன்னால் தனித்து வாழ முடியாது. நீ சோதிடருடன் கூடியிருந்தால்தான் உனக்கு நன்மை; அவரை அண்டி வாழ வேண்டிய நீ இப்படித்தான் பேசுவாய். உன்னைப் போன்றோர், ''ஆமாம் சாமிகளாகத்தான் இருப்பார்கள். வேறு எப்படி இருக்க முடியும்?'' என்று கிளி கூறியதும் அட்டை வாய் மூடிக் கொண்டது.



மேலும் கீழும்


சுவரின் மேல் சாய்ந்து கொண்டிருந்தது ஓர் ஏணி. அந்த ஏணியின் உச்சியில் கால் வைக்க உதவும் மூங்கில் துண்டு கடைசிப் படியிலிருக்கும் குறுக்குத் துண்டைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தது. அதற்கு உரிய காரணம் புரியாத கடைசிப்படி, ''என்னைப் பார்த்து ஏன் சிரிக்கின்றாய்?'' என்று கேட்டது.

''ஒன்றுமில்லை,. கடைசிப் படியே, ஒன்றுமில்லை'' என்று கூறி மழுப்பியது. குறிப்பாகச் சொன்ன பதிலைப் புரிந்து கொள்ள முடியாத கடைசிப்படி, நடுவிலிருந்த ஒரு மூங்கில் துண்டினிடம் விளக்கம் கேட்டது.

''அறிவாலோ, செல்வத்தாலோ, அதிகாரத்தாலோ வேறு பிற நிலையாலோ உயர்ந்து விட்டவர்களிடம் இயல்பாகவே இருக்கும் செருக்கு, அந்த உயர்ந்திருக்கும் படியிடம் இருக்கிறது. நீ கடைசிப்படி என்பதால் அதற்குக் கேலிச் சிரிப்பு ஏற்பட்டிருக்கின்றது'' என்று அது கூறிற்று.

சிறிது நேரம் கழித்து ஒரு பையன் வந்தான்; ஏணியைத் தூக்கிக் கொண்டு சென்றான். மற்றொரு இடத்தில் அதனைத் தலைகீழாக வைத்து விட்டான். மேல்படி கீழே வந்தது.

முன்பு கீழ்நிலையில் இருந்த படி, ''ஐயா, உயர்ந்த படியில் இருந்தவரே, இப்போது எங்கே இருக்கிறீர்? நலம்தானா?'' என்று முன்பு கேலிச் சிரிப்புச் சிரித்த மூங்கில் துண்டிடம் கேட்டது. அதற்கு அந்தப் படியிடமிருந்து விடை கிடைக்கவில்லை!



பழைய கதை; புதிய பாடல்

பிள்ளையாரும் பெருச்சாளியும்



செல்வ ரான வேலுச் சாமி
　செலவு மிகவும் செய்த தாலே
எல்லாப் பொருளும் இழந்த பிறகு,
　இரண்டு மட்டும் வைத்தி ருந்தார்.

பிள்ளை யாரின் உருவம் ஒன்று,
　பெருச் சாளி உருவம் ஒன்று
வெள்ளி யாலே செய்த இரண்டும்
　விற்ப தற்குக் கொண்டு வந்தார்.

வெள்ளிக் கடையில் இருந்த மனிதர்,
　மேலும் கீழும் அவற்றைப் பார்த்தார்.
நல்ல வெள்ளி தானு என்றே
　நன்ருய் அவரும் தெரிந்து கொண்டார்.

இரண்டு பொருளும் தனித்த னியாய்
　எடையைப் போட்டுப் பார்த்த பின்னர்
''இரண்டும் எடையில் ஒன்றே. அதனுல்,
　இதற்கு நூறு; அதற்கு நூறு.


இரண்டு நூறு தருவேன்'' என்ருர்.
　இதனைக் கேட்ட வேலுச் சாமி,
''அருமை தெரியா உம்மி டத்தில்
　ஐயோ! நானும் விற்க வந்தேன்.

பிள்ளை யாரோ பெரிய கடவுள்;
　பெருச் சாளி சிறிய பிராணி.
இல்லை என்று சொல்லு வீரோ?
　இரண்டும் விலையில் ஒன்ரு?'' என்ருர்.

''பிள்ளை யாரைக் கடவுள் என்றே
　பெரிதும் நானும் போற்று கின்றேன்.
வெள்ளிக் கடையில் எடைதான் பார்ப்போம்
　வித்தி யாசம் பார்ப்ப தில்லை.

எடையைப் பார்த்து விலையைச் சொன்னேன்.
　இதிலே என்ன தவறு?'' என்று
கடையில் இருந்த மனிதர் உடனே
　விடைய ளித்தார் சிரித்த படியே!

—குழந்தைக் கவிஞர்—



தோழர் ப. ஜீவானந்தம்

காலுக்குச் செருப்பு மில்லை.
கால் வயிற்றுக் கூழு மில்லை.
பாழுக் குழைத்தோ மடா —
என் தோழனே,
பசை யற்றுப் போனோ மடா.

இந்தப் பாட்டு 50 ஆண்டுகளுக்கு முன்பு தொழிலாளர் கூட்டங்களிலெல்லாம் உணர்ச்சியோடு பாடப்படும் பாட்டாக இருந்தது.

'ஜீவா' என்று செல்லமாக அழைக்கப்படும் ப. ஜீவானந்தம் அவர்கள் தான் இப்பாடலை இயற்றியவர்.

பாரதியாரிடம் பெரும் ஈடுபாடு கொண்ட இவர், மனிதனையே மையமாக வைத்துப் பல பாடல்களைப் பாடினார். நாட்டு மக்கள் பாடி வந்த பழைய மெட்டுக்களிலே புதுமைக் கருத்துக்களைப் புகுத்தி எழுச்சி ஊட்டியவர்.

முதல்முதலாகத் தமிழ்நாட்டில், காந்தியின் பெயரால் சிறுவயல் என்ற ஊரில் ஆசிரமம் நிறுவியவர். தேச பக்தி மிக்கவர்.

தொழிலாளர் தலைவராக விளங்கிய இவரின் மேடைப் பேச்சிலே இலக்கிய நயத்தைக் காணலாம்.

எல்லாரும் கல்வி பெற வேண்டும். வறுமையை ஒழிக்க வேண்டும், மூடப் பழக்க வழக்கங்களை அகற்ற வேண்டும், ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றி எல்லாரும் சமமாக வாழ வேண்டும், தொழிலாளர் வளம் பெற வேண்டும் என்ற நோக்குடன் கடைசி மூச்சு இருக்கும்வரை பாடுபட்டவர்.



கவிஞர் கண்ணதாசன்

மகாகவி பாரதியாருக்குப்பிறகு, மக்களுடைய உள்ளமெல்லாம் கவர்ந்த ஒரு பெருங் கவிஞர் கண்ணதாசன் அவர்கள்.

செட்டி நாட்டில், எட்டாவது குழந்தையாகப் பிறந்த இவர், எட்டாம் வகுப்பை முடித்ததுமே பத்திரிகை ஆசிரியரானார். தொடக்கத்தில் 'திருமகள்' என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருந்த இவர், பிறகு பல பத்திரிகைகளை நடத்திப் பலருக்கு ஊக்கமளித்து வந்தார்.

திரைப்படத்துறையிலேபலபுதுமைகளைச் செய்தார். 4000 க்கு மேற்பட்ட கவிதைகளையும், சுமார் 5000 திரைப் படப் பாடல்களையும் இவர் இயற்றியிருக்கிறார்.

இவர் எழுதிய 'அர்த்தமுள்ள இந்து மதம்' (பத்து பாகங்கள்) பலரது பாராட்டைப் பெற்றுள்ளது.

ஆதி சங்கரரின் கனகதாரா தோத்திரத்தைவடமொழியிலிருந்து 'பொன் மழை', என்ற தலைப்பில் தமிழில் தந்திருக்கிறார்.

1970 ல் இந்தியாவிலேயே சிறந்த திரைப் படக் கவிஞர் என்ற விருதினை இந்திய அரசு இவருக்கு வழங்கியது. 'சேரமான்மாதேவி' என்ற இவரது நூலுக்கு, சாகித்ய அகாதமி பரிசு கிடைத்துள்ளது.

தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கிய பெருமையும் இவருக்கு உண்டு.

இவர் இறுதியாக இயற்றியது 'இயேசு காவியம்' என்ற இனியதொரு காவியமாகும்.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* திருடித் தின்றால் 'விக்கல்' ஏற்படும் என்கிறார்கள். இது உண்மையா?

— மா. வெங்கடேசமூர்த்தி, குரோம்பேட்டை.

விக்கல் ஏற்படும் என்று சொல்ல முடியாது. ஆனால் நிச்சயம் 'சிக்கல்' ஏற்படும்!


* ஈசாப் கதைகள் மொத்தம் எத்தனை இருக்கும் என்று கூற முடியுமா?

— என். தேவகி, திருச்சானூர்.

அவருடைய எல்லாக் கதைகளையும் தொகுத்து வெளியிட்டுள்ள ஆங்கிலப் புத்தகத்தில் மொத்தம் 331 கதைகள் இருக்கின்றன.

* நாய், குரங்கு — இந்த இரண்டில் எது மிகவும் புத்திசாலி?


— செ. ர. குணசேகரன், சென்னை—49.



இரண்டுமே அறிவுள்ளவைதான். ஆனாலும் நாயைவிடக் குரங்குக்கு அறிவு அதிகம். இரண்டுக்கும் பலர் பலவிதமான வித்தைகளைக் கற்றுக் கொடுக்கிறார்கள். நாயைக் காட்டிலும், சுலபமாகவும் புத்திசாலித்தனமாகவும் குரங்கு வித்தைகளைக் கற்றுக் கொள்ளும். அத்துடன் தானாகப் பல விஷயங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்வதிலும் குரங்கு மிகவும் புத்திசாலி.

* குழந்தைகளுக்கு எழுதுபவர்களிலேயே அதிகமான வயது யாருக்கு?

— வள்ளிதாசன், இராஜபாளையம்.



பெ.நா. அப்புசாமி அவர்களுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட இன்னும் 5 ஆண்டுகளே இருக்கின்றன!

* பறவைகளில் சோம்பேறி உண்டா?

— கோ. காசிவிஸ்வநாதன், திருப்பூர்.

குயிலைத்தான் சோம்பேறிப் பறவை என்பார்கள். கூடு கட்டுவதற்குக்கூட இதற்குச் சோம்பல். காக்கையின் கூட்டில் தந்திரமாக முட்டை இடும். காக்கை அடைகாத்துக் குஞ்சுகளை வளர்க்கும். குஞ்சுகள் பெரிதானதும், மற்ற குயில்களோடு சேர்ந்துவிடும்.

* இடது கையால் குழந்தைகள் எழுதக் கற்றுக் கொள்ளலாமா?

— அ. கயல்விழி, விருத்தாசலம்.

வலக்கைதான் வலிமையுடையது; வசதியானது. வலக்கையால் எழுத முடியாதவர்கள் இடக்கையால் எழுதிப் பழகலாம்.

* நம் தமிழ் எழுத்தில் ஐ, ஔ என்ற எழுத்துக்களை அய், அவ் என்று எழுதலாம் என்றும், ஐ, ஔ எழுத்துக்கள் தேவையில்லை என்றும் சிலர் சொல்கிறார்களே, உங்கள் கருத்தென்ன?

— சி. வேதநாயகம், திருநெறலூர்.

நல்ல கருத்தாகவே தோன்றுகிறது. மிகப் பழங்காலத்தில் ஐ, ஔ என்ற இரண்டு எழுத்துக்களுமே இல்லையாம். அவை பிறகு ஏற்பட்டவை என்று ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகிறார்கள். அய்யனார், அவ்வையார் என்று எழுதினாலும் ஒலியிலே மாற்றம் இருக்கிறதா? இல்லையே!



* புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பள்ளி ஆசிரியராக வேலை பார்த்தாராமே, எந்த ஊரில்?

— ச. மருதவாணன், போரூர்.

அவர் தமிழாசிரியராக 18வது வயதில் சேர்ந்தார். 55வது வயதுவரை பணியாற்றினார். ஆனால், இந்த 37 ஆண்டுகளில் ஒன்றிரண்டு ஊர்களில் அல்ல; புதுவை மாநிலத்திலுள்ள பல ஊர்களில், அவர் பணியாற்றியிருக்கிறார்.

* வாழைமரம் ஒருதடவைதான் காய்க்குமா?

— த. சிங்காரம், புதுக்கோட்டை.

ஆம். ஒரு தடவைதான் காய்க்கும். ஒரு தடவைதான் பூக்கும். குலை போட்டு அது முற்றிய சில நாட்களில் மரம் பட்டுப்போகும். அதனால், குலையை வெட்டி எடுத்த பிறகு, மரத்தையும் வெட்டி விடுவார்கள்.

* விண்வெளி ஓடமான சாலஞ்சர் விபத்துக்குள்ளாகி வெடித்தது என்று படித்தேன். அப்படியானால் அதில் இருந்தவர்கள் என்ன ஆனார்கள்?

— டி. பரமேஸ்வரன், சென்னை—6.

இந்த விபத்தில் சாலஞ்சர் சுக்கு நூறாகி விட்டது. அதில் சென்ற ஏழு விண்வெளி வீரர்களும் இறந்துவிட்டனர். ஏழு பேரில் இருவர் பெண்கள். அவர்களில் ஒருவர் பள்ளி ஆசிரியை.

* கரகம் ஆடுவது தமிழ்நாட்டில் மட்டும்தானா? இல்லை, வேறு இடங்களிலும் உண்டா?

— க. கோபிநாத், குன்றத்தூர்.

ஆந்திரா, கேரளம், மைசூர் முதலிய மாநிலங்களிலும் கரகாட்டம் நடைபெறுவதைக் காணலாம்.

* போலோ என்கிற விளையாட்டு எப்போது எந்நாட்டவரால் ஏற்படுத்தப்பட்டது?

— ஆ. மாதவராமன், கிருஷ்ணகிரி.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு பாரசீகத்தில் முதல்முதலாக ஆடப்பட்டதாம்.

* நம் தமிழ்நாட்டு விஞ்ஞானி ஜி.டி. நாயுடுவைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆவல். அவரைப் பற்றி ஏதாவது புத்தகம் வெளிவந்திருக்கிறதா?

— சே. குணசீலன், சேலம்.

'உழைப்பால் உயர்ந்த ஜி. டி. நாயுடு' என்ற புத்தகம் அவரது வாழ்க்கை வரலாற்றை நன்றாக எடுத்துக் கூறுகிறது. எழுதியவர்: 'மெர்வின்'. வெளியிட்டவர்: முருகன் பதிப்பகம், சென்னை—56.

* சங்க காலத்தில் ஔவையாரைப் போல் கவி பாடிய பெண் புலவர்கள் எத்தனை பேர் இருந்தார்கள்?

— ப. மனோன்மணி, காரைக்கால்.

சுமார் 30 என்று கூறுகிறார்கள்.

* கொரில்லாக் குரங்கு மனிதரைப்போல்வே நன்றாக வளர்ந்திருக்கும் என்று படித்தேன். அதன் உடம்பில் மொத்தம் எத்தனை எலும்புகள் இருக்கும்?

— சி. குமாரசாமி, கூனிமேடு.



எலும்புக் கூட்டைப் பொறுத்தவரை நமக்கும் கொரில்லாவுக்கும் வேற்றுமையே இல்லை. அதற்கும் மொத்த எலும்புகள் 206; நமக்கும் மொத்த எலும்புகள் 206.

பிருந்தாவனம்

அது புள்ளியல்ல!



தென் அமெரிக்காவில் ஏற்பட்ட ஒரு விமான விபத்தை அந்த நாட்டுப் போலீஸார் திரைப்படம்போல் எடுத்தனர். உடனே அப்படத்தைச் சில விஞ்ஞானிகள் போட்டுப் பார்த்தனர். மற்றவர்கள் கண்ணில் படாத ஒன்றை ஒரே ஒருவிஞ்ஞானி எப்படியோ கண்டு விட்டார். ''அதோ அங்கே ஒரு புள்ளி நகருவது போல் தெரிகிறது. நாம் அங்கே நேரில் சென்று பார்க்க வேண்டும்'' என்றார்.

உடனே விமான விபத்து ஏற்பட்ட 'ராக்கி' என்னும் மலைத் தொடருக்குச் சில தீயணைப்புப் படை வீரர்களுடன் சென்றனர். அப்பகுதியில் பனி அதிகமாகப் பெய்து கொண்டிருந்தது. பல மணி நேரம் அவர்கள் மிகுந்த சிரமப் பட்டுக் கடைசியில் கண்டு பிடித்து விட்டனர். புள்ளி போல் நகர்ந்தது வேறு எதுவுமல்ல; ஒரு குழந்தை! அந்தச் சின்னஞ் சிறு குழந்தை நல்ல வேளையாக உயிருடன் இருந்தது! (இதை எங்கள் ஆசிரியர் கூறினார்)

— ர. வெங்கடேஷ் (50 35), ஈரோடு

ஆங்கிலப் பழமொழிகள்

* நல்ல பெயர் செல்வத்தைவிடச் சிறந்தது.

* வெறும் சாக்கு நேராக நிற்பது இல்லை.

* சிந்திய பாலுக்கு அழுது பலன் இல்லை.

* ஒரு பொய் பல பொய்களைக் கூறும்படி செய்யும்.

— வெ. மோகன் (20 17), கவரயபட்டி.

ஊரும் நீரும்




கிணத்துக் கடவு (கிணறு)
குளத்தூர், அரசர் குளம் (குளம்)
திருவையாறு (ஆறு)
கடலூர் (கடல்)
அம்பா சமுத்திரம், நமுன சமுத்திரம் (சமுத்திரம்)

— ச. ஆதிநாராயணன் (4139) புதுக்கோட்டை.

முடியும் எழுத்து 'ணை'

'ணை' என்ற எழுத்தில் முடியும் சொற்களைக் கண்டு பிடிக்கலாமா? குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.



1. தொடுப்பது
2. தடுப்பது
3. அமர்வது
4. நீட்டுவது
5. குழந்தை படுப்பது
6. வாசிப்பது
7. உடனிருப்பது
8. ஜோடி சேருவது

விடை: 1. கணை; 2. அணை; 3. மணை; 4. சாணை; 5. ஏணை; 6. வீணை; 7. துணை; 8. இணை;

— எம். ஆர். ஸ்ரீப்ரியா (225),
சென்னை — 33.

கண்டக்டர் விழித்தார்!



ஒரு வயதான அம்மாள், பம்பாயி லுள்ள தன் பெண் வீட்டிற்கு வந்தாள். அவளுக்குப் பம்பாயைச் சுற்றிப் பார்க்க ஆசை. ஆனால், பெண்ணுக்கு நேரமில்லாததால், அம்மாவை அழைத்துப் போக முடியவில்லை. ஒருநாள் தனியாக ஊரைச் சுற்றிப்பார்க்கக்கிளம்பி விட்டாள் தாய்.

பஸ்ஸில் ஏறி அமர்ந்ததும் அவரவர்கள் மகாலட்சுமி, பிரபா தேவி, கல்பா தேவி என்று சொன்னவுடன் கண்டக்டர் அவர்களுக்கு டிக்கெட் கொடுத்தார். அதைப்பார்த்துக்கொண்டிருந்த அந்த அம்மையார், தன் முறை வந்ததும் கண்டக்டரிடம், 'சீதாதேவி' என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்தாள். கண்டக்டருக்கு ஒன்றும் புரியவில்லை. 'என்னம்மா சொல்கிறீர்கள்?' என்று கேட்டார்.

'என் பெயர் சீதாதேவி' என்றார் அம்மையார். அதாவது, எல்லாரும் மகாலட்சுமி, பிரபா தேவி, கல்பா தேவி என்று அவரவர் பெயரைச் சொல்வதாக நினைத்து அந்த அம்மையாரும் தன் பெயரைச் சொல்லியிருக்கிறார். உண்மையில் அவைகள் பஸ் ஸ்டாப்புகள் என்பது அந்த அம்மையாருக்குத் தெரியவில்லை. எல்லாரும் சிரித்துவிட்டார்கள்.

— சி. ஷ்ட்டால் (69), பம்பாய்—71.

சின்னச் சின்னக் கல்



சின்னச் சின்னக் கல்பொறுக்கி
சிங்காரப் பாலம் கட்டி
பாலத்துமேல் ஏறிக்கிட்டு
பபூன் வேஷம் போட்டுக்கிட்டு
தில்லாலே! தில்லாலே!
எனக்கு ஒண்ணும் நல்லால்லே!

(நாடோடிப் பாடல்)

— தெ. சிவக்குமார் (9373),
சேரிட ளையம்.

ஒளிந்திருக்கும் வள்ளல்கள்

கீழ்கண்ட வாக்கியங்களில் ஒளிந்திருக்கும் வள்ளல்களைக் கண்டுபிடிக்க முடியுமா?

1. என் அன்பே கன்னத்தில் குழி விழச் சிரிக்கும்போது நீ எவ்வளவு அழகாயிருக்கிறாய்?
2. பட்டம்மா ஒப்பாரி வைத்து அழுதாள்.
3. ராமு, இன்றைக்குச் செய்யக்கூடிய காரியத்தை நாளைக்குத் தள்ளிப்



போடாதே.

4. கண்ணா, நீ இந்த ஆய்வைச் செய்து பார்.
5. ராமு வீட்டில் திருடுவதற்காக நள்ளிரவில் ஒரு திருடன் வந்தான்.
6. பாஸ்கர், கோகுலத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற முடியுமா?

விடை: 1. பேகன்; 2. பாரி; 3. காரி; 4. ஆய்; 5. நள்ளி; 6. ஓரி.

— கி. ராஜு (9526), திருச்சுழி

நண்பர்களா? எதிரிகளா?



ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கனைப் பார்த்து ஒரு நண்பர் கேட்டார். "உங்களது எதிரிகளையும் நண்பர்களாக்கிக் கொள்ள நீங்கள் ஏன் இவ்வளவு பாடு படுகிறீர்கள்? நீங்கள் நினைத்தால், அவர்களை எளிதில் அழித்துவிட முடியுமே!"

இதற்கு லிங்கன் கூறினார். "அவர்களை என் நண்பர்களாக்கிக் கொள்ளுகிறேன் என்னும்போதே, என்னுடைய எதிரிகளை அழித்து விடுகிறேன் அல்லவா?"

நண்பர் ஆச்சரியமாக அவரைப் பார்த்தார்.

— என். செந்தில் குமார் (131), பேரூர்.

குறளைப் பாராட்டும் குறள்



☼ கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்.

— இடைக்காடர்

☼ அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்.

— ஔவையார்

— சி. பாலச்சந்தர் (6981, சாலிக்கிராமம்.

யாருடைய பொன் மொழி?





ஒரு சமயம் காந்திஜியிடம், கவிக்குயில் சரோஜினி தேவி ஒரு கேள்வியைக் கேட்டார். "ஏழைகளிடம் ஆண்டவன் ரொட்டி வடிவத்தில் வருகிறான் என்ற பொன்மொழியைக் கூறியவர் யார்? சொல்லுங்கள் பார்க்கலாம்."


காந்திஜி யோசித்தார். நினைவுக்கு வரவில்லை. அந்தப் பொன்மொழி, மிகவும் கேள்விப்பட்டதாக நினைவுக்கு வந்ததே தவிர, அதை யார் சொன்னது என்பது புரியவில்லை.

"எனக்கு நினைவில்லை. நீங்களே கூறலாம்." என்றார் காந்திஜி.

"பாபு, தாங்கள் தான் அந்தப் பொன்மொழியைச் சொன்னவர்" என்று கவிக் குயில் சொன்னதும், காந்திஜி பெரிதாகச் சிரித்துவிட்டார்.

— எஸ். மாதவன் (20 4),
திருச்சி — 14

விடை என்ன?



1. நாகணை வாய்ப் புள் என்றால் என்ன?
2. உலகிலேயே அதிகமான மக்கள் பேசும் மொழி எது?
3. கடம்பவனம், ஆலவாய், மதுரா புரி, நான்மாடக்கூடல், கன்னி புரம், சிவன் முக்தித் தலம், துவாத சாந்தம், பூலோக சிவலோகம் — இந்தப் பெயர்கள் ஒரே ஓர் ஊரைத் தான் குறிக்கின்றன. அது எந்த ஊர்?

விடை: 1. மைனா; 2. சீன மொழி; 3. மதுரை.

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி — 14.

விளையாட்டு வீரனுக்கு 10 கட்டளைகள்

1. விளையாட்டில் வெல்வது மட்டுமே முக்கியமல்ல; முறைப்படி விளையாடுவதுதான் சிறப்பு.

2. விளையாட்டுத் திடலை எப்பொழுதும் ஒரு கோயிலாகக் கருது.



3. உனக்காக விளையாடாதே; உன் குழுவிற்காக விளையாடு.

4. நடுவரின் தீர்ப்புக்குத் தலை வணங்கு.

5. மாற்றாரின் சிறப்பைப் போற்றப் பழகு.

6. வெற்றியால் பெருமை கொள்; ஆனால், மமதை கொள்ளாதே!

7. விளையாட்டைக் கருதி விளையாட்டில் ஈடுபடு.

8. வென்றவனைப் பாராட்டு; தோற்றவனைச் சீராட்டு.

9. ஓடு, ஓடு. இறுதி வரை சளைக்காமல் ஓடு. தாவு, தாவு, முடிந்தவரை துணிவாகத் தாவு.

10. கடமையைச் செய்; பயனை எதிர் பாராதே. பயன் என்பது உழைப்போடு வரும் நிழல் ஆகும்.

— சு. நாச்சியார் (910 8),
திருச்செந்தூர்.

ஒரே மாதம், ஒரே தேதி



பிறந்த நாளும் இறந்த நாளும் ஒன்றாக அமைவது மிகவும் அபூர்வம். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

பிறந்த நாள்: 30 .10 .190 8
மறைந்த நாள்: 30 .10 .1963

— வி. அருள் சாமுவேல் (11993),
புளியங்குடி.

சார் தபால்!

ஆங்கிலப்படம் போல் அற்புதம்!

* கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களின் குழந்தைப் பருவம், மாணவர்களாகிய எங்களைச் சிந்திக்க வைத்தது.

—ச. ஆறுமுகம், இராமநாதபுரம்.

* தங்கமணி அவர்களின் தொடர்கதை ஆங்கிலப் படத்தை நேரில் காண்பது போல் அற்புதமாக இருக்கிறது.

— ஜி. ஆர். ஸ்ரீதர், மேட்டூர் அணை—1.

* தாய் தந்தையரின் அரவணைப்பில் இருந்தும்கூட வசதி வாய்ப்புகள் இல்லையே என்று என்னுள் உருவாகியிருந்த 'மயக்கம்' தெளிந்தது! அதற்குப் பெரிதும் உதவிய அரசு மணிமேகலை அவர்களுக்கு நன்றி.

— பி. சுதனு, மதுரை—1.

* இந்தக் கோடை விடுமுறையில் எங்கள் திறமையை சோதிக்கவும், தகுதியானவர்களுக்குச் சன்மானம் அளிக்கவும் ஏற்பாடு செய்துள்ள ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு நன்றி.

— என். சந்திரன் (4785), பாலவிட்க்குடி.

* பரிசுப் போட்டியை அறிவித்தாலும் அறிவித்தீர்கள், நூலகங்களில் இராமாயண மகாபாரதப் புத்தகங்களே கிடைக்கவில்லை! அவைகளுக்கு அவ்வளவு டிமாண்ட்!

— அ. நடராஜன், அண்ணாமலைநகர்.

* பெற்றோரிடம் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுச் செல்லும் சிறுவர்களுக்கு, 'ஆனந்தன் ஓடப் போவதில்லை' ஓர் அரிய படிப்பினை.

— த. பாண்டியன் (7831), கோவை—17.

* 'உண்டி வில்' சிறுகதை, என் கல் நெஞ்சத்தை உருக வைத்தது. சோமு மாதிரிதான் நானும் நண்பர்களுடன் சேர்ந்து உண்டிவில்லால் அப்பாவி உயிரினங்களைக் கொன்று கொடுமை செய்து வந்தேன். இச்சிறுகதை என்னைத் திருத்தியதற்கு நன்றி.

— பி. கோவிந்தசாமி (570 3), டி. புதூர்.

* சென்ற இதழ் பிருந்தாவனக் கவியரங்கத்தில் இடம் பெற்ற 'வேப்ப மரம்' என்ற பாடலை தமிழ்நாடு அரசின் ஐந்தாம் வகுப்புத் தமிழ்ப் பாட நூலில் காணலாம். அப்பாடல் புலவர் ல. சண்முகசுந்தரம் அவர்களால் இயற்றப்பட்டது. அதை அப்படியே காப்பி அடித்து ம. இராமநாதன் (1190 0) அனுப்பியிருக்கிறான். நீங்களும் ஏமாந்து போய் வெளியிட்டுவிட்டீர்களே!

— பி. கோகுல கிருஷ்ணன், (8567), மேட்டூர் அணை.

— சி. குமார் (5190), நெய்வேலி—3.

— அரங்கசுரமுத்து (3728), திருமழப்பாடி

— ஜி. புவனேஸ்வரி, சென்னை—31.

— போச. அ. கஸ்தூரி, விரையாச்சிலை.

— ஜி. கமலவல்லி, நேமம்.

— டி. மாதவன் (6764), மரக்காணம்.

— மா. வெங்கடே சமூர்த்தி (7698), ஆரோம்பேட்டை.

— ஜெரச். புஷ்பா கௌரி, கோவில்பட்டி.

* கல்யாண வெங்கடேசன் அவர்கள் எழுதிய 'திருட்டுப் பயல்' கதை என் உள்ளத்தைக் கவர்ந்தது.

— எஸ். அனீஸ், திருச்சி—8.

* 'பற்களைப் பாதுகாப்பது எப்படி?' கட்டுரையை என் பையனுக்குப் படித்துக்காட்டியதிலிருந்து இஷ்டப்படி இனிப்பு சாப்பிட்டு வந்ததை 'இன்றோடு' விட்டுவிட்டான். பாதுகாத்து வைக்க வேண்டிய பயனுள்ள மருத்துவக் கட்டுரை!

— என். கண்ணன், வடுவூர்.

* கார்ல் மார்க்ஸ் 1949ல் நாடு கடத்தப்பட்டார் என்று தவறாக உள்ளது. 1849ல் தான் நாடு கடத்தப்பட்டார்.

— கே. ருக்மணி (3386), பொன்மலை.

— நீ. உஷா சர்மா (880 8) ஆரோம்பேட்டை

— ப. சேகர் (11251), கிருஷ்ணகிரி.

— ஆர். பழனிவேலன் (3671), சேலம்—6.

(1849 என்பதுதான் சரி. தவறுக்கு வருந்துகிறோம். — ஆசிரியர்.)

* வரவர வெல்லம் இனிப்பதில்லை. ஆனால் 'கோகுலமோ' படிக்கப் படிக்க மிகவும் சுவையாக உள்ளது.

— ஏ. பாஸ்கரன், சின்னப்பம்பட்டி.

* 'நரிகள் பரிகள் ஆன கதை' ஆனந்தி அவர்களின் கருத்து வண்ணத்திலும் வினு அவர்களின் கைவண்ணத்திலும் மிளிர்ந்தது. பெரிய வரலாறு புரியும்படி அழகாக விளக்கப்பட்டுள்ளது. மதுரைத் திருவிழா சமயத்தில் சரியாகக் கதையை வெளியிட்டு மதுரை நகரக் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்று விட்டீர்கள்!

— பா. ரமாபிரபா (3492).

— பா. சுகந்தி (6894).

— பா. ராஜேஷ் குமார் (5344).

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்-தொடர்ச்சி

3524 வி. கிருத்திகா, 35, ஸ்ரீனிவாசபுரம், பட்டுக்கோட்டை—614601.
3525 வி. லலிதா, 35, ஸ்ரீனிவாசபுரம், பட்டுக்கோட்டை—614601.
3526 என். உமா மகேஸ்வரி, 87, போஸ்டாபீஸ் தெரு, சோளிங்கர், வ.ஆ. மாவட்டம் 631102.
3527 ஆர். கிருஷ்ணகுமார், 46, தெற்குச் சேணியத் தெரு, ஆடுதுறை—612101.
3528 கே. சினிவாசன், 14, தோப்புத் தெரு, அம்மையப்ப இல்லம், திருப்பத்தூர்—623211.
3529 தி. நிவேதிதா, திருமகள் வாசம், 15, ஆண்டியப்பர் தெரு, கும்பகோணம்.
3530 ஆர். ஹரிஹர குமார், 23, ராஜாஜி தெரு, ரங்கா நகர், ஸ்ரீரங்கம், திருச்சி—620 006.
3531 ஆ. தனபால், எட்டிமடை போஸ்ட், மதுக்கரை, கோயம்பத்தூர் மாவட்டம்—641105.
3532 T.K. Rashmi D/o. Mr. T.V. Krishnan, Malti-Chem Research Centre, Nandasari, Vadodara, Gujarat State-391340
3533 T.K. Harish S/o. Mr. T.V. Krishnan, Malti-Chem Research Centre, Nandasari, Vadodara, Gujarat State – 391340.
3534 வெ. மீனாட்சி, 23, வேப்பந் தோப்புத் தெரு, திண்டுக்கல்.
3535 ஸ்ரீ. இராம்பிரகாஷ், 12/80, முதல் வீதி, 100 அடி ரோடு, காந்திபுரம், கோவை-641012.
3536 ஜி. கிருஷ்ணகுமார், 17 ஏ, குள்ளப்பன் தெரு, சஞ்சீவிராயன்பேட்டை, சேலம்-636006.
3537 எஸ். சதீஷ்குமார், 120, கீரைக்காரத் தெரு, ஸ்ரீரங்கம் (திருச்சி-6)
3538 க. சிவக்குமார் த/பெ. செ. கந்தசாமி, ஆசிரியர், வெண்ணந்தூர் போஸ்ட், சேலம் மாவட்டம்-637505.
3539 கே. ஹேமமாலினி, 19, மேல முதல் தெரு, சேரன்மகாதேவி, திருநெல்வேலி ஜில்லா.
3540 ரா. இராமச்சந்திரன், பி. 22, போர்ஷோர் எஸ்டேட், சான்தோம், சென்னை—600 028.
3541 அ. ஐஸ்வரியா, 2 பி, சுந்தரம்மா காலனி, கோதண்டராமையர் தெரு, சென்னை—21.
3542 பி.எஸ். ஸ்ரீவித்யா, 12 ஏ, மூன்றும் வீதி, சுப்ரமணியபுரம், காரைக்குடி—623002.
3543 ஏ.எஸ். கண்ணன், 14, குலாலர் வீதி, அந்தியூர், பெரியார் மாவட்டம்—638501.
3544 இரா. சிவகாமசுந்தரி, 7, வடக்குக் கோவில் தெரு, அண்ணாமலைநகர், சிதம்பரம்.
3545 கே.ஏ. ஷீலா, 17, வடக்கு ஹைகோர்ட் காலனி, ரெட்ஹில்ஸ் ரோடு, வில்லிவாக்கம், சென்னை—49.
3546 எம்.ஆர். அருளாளன், 34, சீனிவாசய்யர் தெரு, பழைய மாம்பலம், சென்னை—600 033.
3547 எஸ். சுவாமிநாதன், 141, ஆராய்ச்சிப்பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர்—626125.
3548 எஸ்.கே. சிவவள்ளி, சிவபவனம், கீழத் தெரு, இரணியல், நெய்யூர் தபால், குமரி மாவட்டம்—629802.
3549 கே. சிவதாணு, கீழத் தெரு, இரணியல், நெய்யூர் தபால்—629802.
3550 S. Mahesh, 310, Somwarpath, Poona, Pune-11, Maharashtra State.
3551 ஜே. சத்தியசீலன், 9/10, காளிதாசர் வீதி, ஒத்தக்கல் மண்டபம், கோவை—641032.
3552 வி.கே. சுஜாதா, 11, அப்பாசாமி தெரு, கொசப்பாளையம், ஆரணி, வ.ஆ. மாவட்டம்.
3553 நா. விநோத் குமார், 15, பாலாஜி நகர், அனகாபுத்தூர், சென்னை—600 070.
3554 ப. முரளி, 19, ஸ்ரீ சுப்பிரமணியபுரம் காலனி, அரக்கோணம் ரோடு, திருத்தணி—631209.
3555 கு. ராதாமணி 47, மேற்கு சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.
3556 எஸ். குருராஜ், 37, தர்ம ராய ரெட்டித் தெரு, சுவால்பேட், அரக்கோணம்—631001
3557 ஏ. முஸ்தபா உசேன், 31/26, வாசுகி வீதி, ஈரோடு—1.
3558 டி. ராம்குமார், 12/2, பங்களா சந்து, செய்யாறு—604407.
3559 பி.பி. ராஜலட்சுமி, 53, வெட்டநரி ஹாஸ்பிட்டல் ரோடு, போஸ்ட் பாக்ஸ் நெ. 55, கோவை—641001.
3560 கே. தியாகராஜன், 25/40 8, மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்பத்தூர்—641002.
3561 சு. பூங்கோதை, C 7, ராமசாமி ராஜா நகர்—626204.
3562 கோ. நரேந்திர வித்யாசாகர், 132, ஹவுசிங் யூனிட், அனுப்பபாளையம் போஸ்ட், திருப்பூர்—638652.

3563 எஸ். சங்கர், 33, சந்தான கோபாலபுரம், மெயின் தெரு, விழுப்புரம்—60 560 2.
3564 வி.வெங்கடகிருட்டிணன் சி—2,2 வது குறுக்குத்தெரு தில்லைநகர் திருச்சி—620 0 18.
3565 V. Sridharan C/o. K.M.S. Mari Chettiar, Mohan Buildings, Chickpet, Bangalore-560053.
3566 க. ஆனந்த சீதாராமன், 3/73, அந்தநல்லூர் அக்ரஹாரம்—63910 1.
3567 அ.பாண்டியன், 13, பாரதிதாசன் தெரு, லால்பகதூர் நகர் மயிலாடுதுறை—60 90 0 1.
3568 ஒ. முருகன், உ. புதுக்கோட்டை, உத்தப்ப நாயக்கனூர், உசிலை தாலுகா, மதுரை மாவட்டம்—626537
3569 எஸ்.ஆர். பிரபாகரன், த/பெ. எஸ். என். ராஜா கண்ணன், கப்பாம்பாடி போஸ்ட், செஞ்சி தாலுகா, தெ.ஆ. மாவட்டம்—60 420 1.
3570 மு. பூங்கொடி, 7, லட்சுமிபுரம், காந்தி ரோடு, சேலம்—7.
3571 பி. கண்மணி, 87, வெள்ளாளர் தெரு (மாடி) புரசைவாக்கம், சென்னை—84.
3572 ஏ.அ. சுதாகரன், த/பெ. பா.ஏ. அடியான், தாய்முடி, முடீஸ் போஸ்ட் 642117.
3573 ந. கணபதி 139, பாரதியார் தெரு, திருநெல்வேலி—6270 0 6.
3574 ஜி. சிவகுமார், 26, ஆறுமுகம் பிள்ளை வீதி, நெகமம் 642120.
3575 கே. வெங்கட சுந்தரம், 5 ஏ, ஜீவ நகர் 2 வது தெரு, மதுரை—11.
3576 என். சிவராம், 5 ஏ, ஜீவ நகர், 2 வது தெரு, மதுரை—11.
3577 எஸ். லதா, த/பெ. எஸ்.எம். சுந்தரம், சாம்ராஜ் குரூப் ஆபீஸ், சாம்ராஜ் எஸ்டேட் போஸ்ட், நீலகிரி—64320 4.
3578 டி. மணிகண்ட ஈஸ்வரி, C/o. N. தண்டபாணி சோதிடர், புதுத்தோட்டம், பல்லடம் ரோடு, திருப்பூர்.
3579 பி. மோகன், 4, சென்னிமலைக் கவுண்டர் லே அவுட், காந்தி புதூர், உப்பிலிப் பாளையம், கோவை—15.
3580 வெ. சுந்தரி, 4/219, டாக்டர் இராதாகிருஷ்ணன் வீதி, காந்தி நகர் கிழக்கு, வேலூர்—6.
3581 பி. வித்யாலெக்ஷ்மி, 37, லஜபதிராய் தெரு, ராம் நகர், கோவை—9.
3582 வெ. மீனாட்சிசுந்தரம், 48, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புத்தூர், முசிறி தாலுகா, திருச்சி மாவட்டம்—62120 7.
3583 கோ. கிருபானந்தன், 7, பீட்டர் தெரு, இராஜாஜி நகர், வில்லிவாக்கம், சென்னை—60 0 0 49.
3584 அ. இராதா, 30, வேளாளர் தெரு, தாரமங்கலம், சேலம்.
3585 கி. வெங்கடேஷ், 14, எல்.ஐ.சி. காலனி, சுப்ரமணியபுரம், கோவை—40.
3586 என். கிரிதரன், 218, கடை வீதி, பொள்ளாச்சி.
3587 ஜி. என். செந்தில் குமார், 3, வாய்க்கால் ரோடு, கோபி செட்டி பாளையம், பெரியார் மாவட்டம்—638452.
3588 கே.எஸ். சிவக்குமார், 4, காதர் மெய்தீன் வீதி, கள்ளுக்கடை மேடு, ஈரோடு—6380 0 1.
3589 க. ஜெயஜோதி, 3, வடக்கு தையற்காரத் தெரு, திருச்சி—8.
3590 எஸ். கணேசன், 121, நடுத் தெரு, வத்திராயிருப்பு, 626132.
3591 M. Umadevi, D/o. S. Murugesan, Chamaiah Gowdaline, Bhadravathi (P.O.), Shimoga (Dt.) Karnataka State 577303.
3592 பிரியா, 3, தேவராஜன் தெரு, வேதாசல நகர், செங்கல்பட்டு—60 30 0 1.
3593 கி. சிற்றரசு, 32 ஏ, வடக்கு மாதுளங் கொல்லைத் தெரு, உறையூர், திருச்சி—3.
3594 எச். பயாஸ்கான், 85, செட்டித் தெரு, கோட்டார், நாகர்கோயில்—2.
3595 எஸ். கண்ணன், 11, ஈசானிய தெரு, சீர்காழி போஸ்ட், தஞ்சை ஜில்லா.
3596 கே. சாருமதி, கொல்லன் தெரு, அளக்குடி போஸ்ட், ஆச்சாள்புரம் (வழி), சீர்காழி, (தாலுகா) தஞ்சை மாவட்டம்.
3597 A. Arun Udayar, S/o. Captain A. Arumugam APTO, P.O. NDA, Kadakawasala, Pune-411023.
3598 க. சிதம்பரநாதன், த/பெ. சி.க. சுப்பையா பிள்ளை, கிராம சேவக், மேலத் தெரு, திருவிதாங்கோடு போஸ்ட்.
3599 எஸ். உமா, 133 ஜெ. வெள்ளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை—84.
3600 குமார், 2, அபிராமி தெரு, ராம் நகர், அம்பத்தூர், சென்னை—63.
3601 பி. எஸ். சங்கர ராமகிருஷ்ணன், 65, ஈஸ்ட் தெரு, சிவானந்தா தெரு, பத்தமடை, திருநெல்வேலி மாவட்டம் 627453.
3602 கு.வே. சாந்தினி, 112, நா. அ. தேவர் வீதி, கோயம்பத்தூர்—6410 45.
3603 நா. ராகவேந்திரன், 172, குப்புத் தெரு, பொன்னம்மாபேட்டை, சேலம்—6560 0 1
3604 வி. கணேச ராமசுப்பிரமணியம், மீட்டா மான்ஷன், கிருஷ்ணபுரம் போஸ்ட், தென்காசி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்—627759.
3605 ஏ. அருள் ராஜு, கொல்லன் தெரு, அளக்குடி அஞ்சல், ஆச்சாள்புரம் வழி, சீர்காழி தாலுகா, தஞ்சை மாவட்டம்.
3606 ஆர். ரங்காச்சாரி, த/பெ. கே. ராம்சாமி, ஆச்சாள்புரம் வழி, அளக்குடி, சீர்காழி தாலுகா.
3607 பி. இந்திரா, 282, முத்தகம், நாராயண நகர், சங்கர் நகர் போஸ்ட்—627357.


(இன்னும் வரும்.)


ஜெய்ஹிந்த்


தீரர் நேதாஜியின் வீரப் போர்!

கதை: ஆனந்தி
படம்: விஜய




கோவிலுக்கு வெளியே...
தருமம் தாயே...
அம்மா! இவர்கள் ஏன் பிச்சை எடுக்கிறார்கள்?
ஜென்மாந்திர பாவத்தால் ஏழைகளாகப் பிறந்தார்கள்!
சுபாஷ் உள்ளத்தில் சந்தேகங்கள் எழுந்தன.
நாம் வசதியாக வாழ்கிறோமே? நம் முன்னோர்கள் பாவமே செய்யாதவர்களா?
ஆமாண்டா செல்லம்!
சுபாஷின் மனம் திருப்தி அடைய வில்லை. ஒருநாள் ஐரோப்பிய மாணவர்கள் கால் பந்து விளையாடக் கண்டு...
ஸார்! நானும் இந்தச் சங்கத்தில் சேர விரும்புகிறேன்...
இது ஆங்கிலேயச் சிறுவர்களுக்கு மட்டுமே ஏற்பட்ட விளையாட்டுச் சங்கம்.
சுபாஷின் மனம் வெதும்பியது.
சமுதாயத்தில் எத்தனை ஏற்றத் தாழ்வுகள்! நிற பேதங்கள்! இன, மத வேற்றுமைகள்...! ஏன்? ஏன்? ஏன்?
உயர்நிலைப் பள்ளியில் சுபாஷ், இந்தியக் கலாச்சாரம், ஆத்ம ஞானம், இவற்றில் விடைகளைக் காண முயல்கிறான்... நூலகத்தில் ஆசிரியர்....
என்ன படிக்கிறாய்?
விவேகானந்தரின் நூல்!
அடேயப்பா!


தலைமை ஆசிரியர் சுபாஷின் அப்பாவைச் சந்தித்து...
உங்கள் மகன் மகா அறிவாளியாக விளங்குவான். இப்போதே ஆன்மீக ஞானம் தேடுகிறான்!
எனக்கென்னவோ கவலையாக இருக்கிறது. பிஞ்சில் பழுத்தது போலிருக்கிறான். எதிலும் பற்றுதல் இல்லை. பாடங்களை அல்லவா படிக்கணும்?
பாடங்களையும் நன்றாய்ப் படிக்கிறான். கவலையே வேண்டாம்!
நாட்கள் சென்றன...
அப்பா! தம்பி சுபாஷ் பல்கலைக் கழகத்திலேயே இரண்டாவது மாணவனாகத் தேறி விட்டான்!
அப்படியா! சந்தோஷம்! ஆனால் ஏன் தலை குனிந்து வருகிறான்?
எல்லாரும் புகழ்வது அவனுக்கு வெட்கமாயிருக்காம்!
சுபாஷ் தொடர்ந்து விவேகானந்தரை ஆழ்ந்து படித்தான்...
நல்லவர்கள் பிறருக்காகவே வாழ்கிறார்கள்... இளைய தலைமுறையிடம்தான் எனக்கு நம்பிக்கை. பிறருக்கு நன்மை செய்வதே தர்மம்... தீங்கிழைப்பதே பாவம்.
விவேகானந்தருக்கு ராமகிருஷ்ணர் கிடைத்தது போலத் தனக்கும் ஒரு குரு கிடைப்பார் என்று எண்ணி தன்னந்தனியே புறப்பட்டு விட்டான் சுபாஷ்...
வலிமையும் வீரமும் தருமம்... சுதந்திரம் புண்ணியம்... அடிமைத்தனம் பாவம்...




குருவைத் தேடினான் சுபாஷ்...
சுவாமி! எனக்கு உபதேசம் செய்ய வேணும்!
உனக்கு இன்னும் வயசாகவில்லை!
கங்கைக் கரையில், பிருந்தாவனத்தில், இமயச் சாரலில் எங்கே தேடியும் குரு கிடைக்கவில்லை...
ஒன்று என்னைப்போல் ஞானத்தைத் தேடுகிறார்கள்; அல்லது போலிச் சாமியார்களாய் இருக்கிறார்கள்! ஹூம்...
இரண்டு மாதங்கள் கழித்து ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினான் சுபாஷ்...
யாரப்பா நீ? என்ன வேண்டும்?
என்னைத் தெரியலையா அம்மா?
என் செல்வமே வந்தாயா! இப்படி இளைத்து விட்டாயே!
ஞான குருவைத் தேடி அலைந்தது போதும். கல்லூரியில் சேர்ந்து படி!
நான் விவேகானந்தரை மானசிக குருவாகக் கொண்டிருக்கிறேன்.
விவேகானந்தர் இளைஞர்களைச் சுற்றி அலைந்து வீண் பொழுது போக்கச் சொன்னாரா? நன்றாகப் படித்து விட்டு நாட்டுக்காக உழைக்க வேண்டும்!



கல்லூரியில் சேர்ந்தான் சுபாஷ். இரு நாள் வெள்ளைக்கார ஆசிரியர் திமிராக...
இந்திய அடிமையே!
சுபாஷ் கொதித்தெழுந்தான்.
ஆசிரியரே! இந்தியர்களை இழிவாகப் பேசியதற்கும் மாணவனை அடித்ததற்கும் நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும்.
மிரட்டுகிறாயா? சரிதான் போடா!
கல்லூரித் தலைவரிடம் சென்றான் சுபாஷ்.
பேராசிரியர் மன்னிப்புக் கேட்காவிட்டால் மாணவர்களின் வேலை நிறுத்தம்!
ஓட்டனிடம் பேசுகிறேன்.
முதல்வரின் முயற்சி பலன் தரவில்லை. வெள்ளைக்காரப் பேராசிரியர் மறுபடியும் இந்தியர்களை இழித்துரைக்க...
ஓட்டன் ஒழிக!
ஆணவம் அழிக!
பேராசிரியர் தாக்கப்பட்டதை யடுத்து சுபாஷும் வேறு சிலரும்...
உங்களைக் கல்லூரியிலிருந்து டிஸ்மிஸ் செய்கிறேன்!



பின்னர் வேறு கல்லூரியில் சேர்ந்து வகுப்பில் முதல் மாணவனாக பி.ஏ. பட்டம் பெற்றார் சுபாஷ்.
பஞ்சாபில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில் ஜெனரல் டயர் என்பவன் காரணமின்றி சுடுமாறு துருப்புக்களுக்கு உத்தரவிட்டதில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.
செய்தி அறிந்ததும் மனம் கொதித்தார் சுபாஷ்.
அண்ணா! இப்படிப்பட்ட சம்பவத்துக்குப் பிறகும் இளைஞர்கள் சும்மா இருப்பதா?
சுபாஷின் ஆவேசப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த தந்தை...
இவனை மேல்படிப்புக்கு லண்டனுக்கு அனுப்பி விட வேண்டும். இங்கிருந்தால் வம்பை விலைக்கு வாங்குவான்!
கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்த போதும் சுபாஷுக்கு இந்தியா பற்றிய கவலைதான்...
ஏழரை கோடி மக்கள் முப்பது கோடி மக்களை அடக்கி ஆள்கிறார்கள். இதற்கு எப்போது முடிவு காலம்?


லண்டனுக்கு வந்த சரோஜினி தேவியின் சொற்பொழிவைக் கேட்டார் சுபாஷ்...
ஆழ்ந்து யோசித்தார்...
பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கூலிபெற்று ஐ.ஸி.எஸ். அதிகாரியாகப் பணியாற்றுவதா? ஒரு நாளும் கூடாது...!
லண்டனில் இந்தியா மந்திரி மாண்டேகுவைச் சந்தித்தார் சுபாஷ்...
மிஸ்டர் போஸ்! ஐஸிஎஸ் பரீட்சையில் நான்காவது இடம் பெற்றுத் தேறியிருக்கிறீர்களாமே? மகிழ்ச்சி!
இந்தக் கடிதத்தைக் கொடுத்துப் போகவே வந்தேன்.
முப்பது கோடி இந்தியர்களை அடிமைப் படுத்தியுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஊழியனாக நான் இருக்க விரும்பவில்லை. என் ஐ.ஸி.எஸ். பட்டத்தைத் துறக்கிறேன். — சுபாஷ் சந்திரபோஸ்
தாய் நாடு திரும்பிய சுபாஷ் மகாத்மா காந்தியைச் சந்தித்தார்.
உன் தீரத்தைப் பாராட்டுகிறேன். வங்கம் திரும்பி சித்தரஞ்சன் தாஸிடம் யோசனை கேள்!


காந்திஜி சொன்னபடி தாஸைச் சந்தித்தார் சுபாஷ்.
தேசியக் கல்லூரி நிறுவி யிருக்கிறேன். அதன் தலைவராக இருந்து பணியாற்று.
வேல்ஸ் இளவரசரின் இந்திய விஜயத்தை காங்கிரஸ் பகிஷ்கரித்தது. போஸுக்குச் சிறை தண்டனை.
குழப்பம் விளைவித்ததற்காக ஆறுமாதக் கடுங் காவல்!
எங்கே என்ன கலகம் நடந்தாலும் சுபாஷை அதில் சம்பந்தப் படுத்தியது பிரிட்டிஷ் அரசு...
அலிப்பூர் சிறை ஆயிற்று... பெர்ஹாம்பூர் சிறை ஆயிற்று... அடுத்து அந்த- மானுக்கு அனுப்பினால்கூட ஆச்சரியமில்லை!
பர்மாவில் மாந்தலே சிறைக்கு அனுப்பப் பட்டார் சுபாஷ்! காசநோய் கண்டது... வங்க மக்கள் கிளர்ந் தெழுந்தனர்...
வந்தே மாதரம்!
சுபாஷை விடுதலை செய்!
அடக்குமுறை ஒழிக!
விடுதலை பெற்றார் சுபாஷ். 1931 ஜனவரி 26ம் தேதி சுதந்திர தினமாக அறிவிக்கப் பட்டது. கல்கத்தாவில் ஊர்வலத்துக்குத் தலைமை வகித்தார் சுபாஷ்.
வந்தே மாதரம்!
பாரதமாதாகி ஜெய்!



போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ய...
வந்தே மாதரம்!
வந்தே மாதரம்!
மறுபடியும் சிறை வாசம். சுபாஷின் காசநோய் முற்றியது. சிகிச்சைக்கு ஐரோப்பா செல்ல அரசு அனுமதித்தது.
தூய கடல் காற்றே நோய்க்கு ஒரு நல் மருந்து.
தந்தையின் மரணச் செய்தி கேட்டு இந்தியா திரும்பி...
அழாதே அம்மா! நம் வருத்தத்தைப் பகிர்ந்து கொள்ள தேசமே முன் வந்திருக்கிறது!
ஹரிபுரா காங்கிரஸ் மாநாட்டுக்கு சுபாஷ் போஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
பாரதமாதா கீ ஜெய்! சுபாஷ் சந்திரபோஸ் ஜிந்தாபாத்!
சுபாஷின் செல்வாக்கைக் கண்டு பயந்து, அவரை வீட்டுக் காவலில் வைத்தது பிரிட்டிஷ் அரசு.
தலைவர் இருக்கிறாரா?
அவர் மௌனவிரதம் இருக்கிறார். ஒரு வாரம் யாரும் அவரைப் பார்க்க வர வேண்டாம்.


ஒரு நாள் இரவு ஒரு மணி. வீட்டின் பின்புறம் ஒரு கார் வந்து நின்றது. வீட்டிலிருந்து ஒரு மௌல்வி வெளியேறினார்.
கார் பறந்தது...
சிசிர்குமார்! உனக்கு எப்படி நன்றி கூறுவேன்?
சுபாஷ் ஜி! ஆபத்து இன்னும் நீங்கவில்லை. நீங்கள் காபூலை அடைந்த பிறகுதான் எங்களுக்கு நிம்மதி.
ரயிலேறி பெஷாவர் சென்றும்...
...பெஷாவரிலிருந்து காபூலை அடைந்துவிட்டார் மௌல்வி வேடத்தில் சுபாஷ் சந்திர போஸ்.
காபூல் உங்களை வரவேற்கிறது!
உத்தம்சந்த்! பெயருக்கேற்ப நீ உத்தமன்.
உத்தம் சந்த் உதவியுடன் ஜெர்மனி சென்று ஹிட்லரைச் சந்தித்தார் சுபாஷ்.
பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்து இன்று உங்கள் கைதிகளாக உள்ள இந்தியர்களை என்னிடம் ஒப்படையுங்கள்.
பத்தாயிரம் இந்தியக் கைதிகளை விடுவித்து, இந்திய தேசிய ராணுவம் அமைத்தார் நேதாஜி.
ஜெய்ஹிந்த்!


ஜெர்மனியில் வாழ்ந்த இந்தியர்கள் கூடி...
சுபாஷ் நமது நேதா (தலைவர்) அவரை மரியாதையோடு நேதாஜி என்று அழைப்போம்!
நேதாஜி - ஜிந்தாபாத்! ஜெய் ஹிந்த்!
ஜெர்மனியில் பெர்லினிலும் இத்தாலியில் ரோமிலும் ரேடியோ நிலையங்கள் தொடங்கினார் நேதாஜி. நான்கு மொழிகளில் கொள்கைப் பிரசாரம்!
எனது அருமை இந்திய மக்களே! இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முடிவு காலம் நெருங்குகிறது. உற்சாகமாக இருங்கள்!...
1941 இறுதியில் உலக யுத்தத்தில் குதித்த ஜப்பான், அமெரிக்காவைத் தாக்கியது.
சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் கிழக்காசியாவில் வசித்த இந்தியர்களை ஒன்று திரட்டிய ராஷ் பிகாரி போஸ்...
நமது அமைப்புக்கு 'இந்திய விடுதலைக் கழகம்' என்று பெயர் சூட்டுவோம்.
கிழக்காசிய இந்திய இளைஞர்களைக் கொண்டு இந்திய தேசிய ராணுவம் அமைத்தார் ஜெனரல் மோகன் சிங்.
நேதாஜிக்குப் பக்கபலமாக இயங்குவோம். ஜெய் ஹிந்த்!


ஆனால் மோகன்சிங் சீக்கிரமே ஜப்பானியரின் நோக்கத்தில் சந்தேகம் கொண்டு...
ராஷ்பிகாரி! இந்திய தேசிய ராணுவத்தைக் கலைத்து விடுகிறேன்.
அவசரப்படாதே! இக்கட்டான நிலை. சுபாஷுக்குச் செய்தி அனுப்பும்.
ஜப்பானியத் தலைவர்கள் கேலி செய்தனர்...
சுபாஷ்போஸ் கிழக்காசியாவுக்கு ஜெர்மனியிலிருந்து எப்படி வருவார்? பிரிட்டனும் அமெரிக்காவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா?
ஆனால் ஜெர்மனியில் செய்தி கிடைத்ததும், ஜெர்மானியர்...
நான் உடனே புறப்படுகிறேன்.
விமானத்தில் போக முடியாது. நீர்மூழ்கிக் கப்பலில் அனுப்புகிறோம்.
நேதாஜியின் பயணம் பரமரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது. கீல் நகரில் நீர்மூழ்கிக் கப்பல் புறப்பட்டது.
மலேயா, பினாங்கு துறைமுகத்தில் ஒரு ஜப்பானிய நீர்மூழ்கி புறப்பட்டு...



இரண்டும் ஆப்ரிக்கா கண்டத்துக்குத் தெற்கே இந்து மகா சமுத்திரத்தில் ஒன்றை யொன்று கண்டு பிடித்தன. ரேடியோ தொடர்பு கொண்டன.
பாயும் புலி!
உதய சூரியன்!
நீர்மூழ்கிகள் கடல் மட்டத்துக்கு மேலே வர, ஒரு ரப்பர் படகில் ஜப்பானிய நீர் மூழ்கியை அடைந்தார் நேதாஜி.
மழையும் புயலும் ஒரு நாள் என்னைத் தாமதப் படுத்திவிட்டன..
சுமத்ரா தீவை அடைந்து அங்கிருந்து டோக்கியோவுக்கு விமானமேறினார் சுபாஷ்.
ஜப்பானியப் பிரதமர் டோஜோவைச் சந்திக்கிறார்.
உங்கள் திட்டங்கள் எனக்குப் பூரண நம்பிக்கை அளிக்கின்றன. ஜப்பான் முழு ஆதரவு தரும்.
சிங்கப்பூரை மையக் கேந்திரமாகக் கொண்ட இந்திய தேசிய ராணுவத்துக்கு நேதாஜி பிரதம தளபதியானார்.
இன்றுமுதல் "சலோ தில்லி" என்பதே நமது லட்சிய முழக்கம்!


ஆயிரம் பிரதிநிதிகள் கூடியிருந்த சபையில்...
சுதந்திர இந்திய அரசை இன்று இங்கே நிறுவுகிறேன். இந்தியாவை விடுவிக்கும் வரை ஓய மாட்டேன்!
மலேயா, சிங்கப்பூரிலிருந்து பெண்கள் ஆர்வத்துடன் முன்வர...
காப்டன் லக்ஷ்மி தலைமையில் ஜான்ஸி ராணி படையை அமைக்கிறேன்.
பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் மீது இந்திய தேசிய ராணுவம் ஆவேசமாகப் பாய்ந்தது...
ஆ!
ஐயோ!
இந்தியப் படை எங்களுக்குப் பின்னால் தான் வரவேண்டும்!
இ.தே.ராவின் வெற்றிகளும் வேகமான முன்னேற்றமும் ஜப்பானிய அதிகாரிகளுக்குப் பொறாமை ஊட்ட...
இது இந்திய விடுதலைப் போர். நாங்கள்தான் முன்னால் செல்வோம்!



கடைசியில் இரு தரப்பினரும் ஒன்றாக முன்னேறுவதெனத் தீர்மானமாயிற்று.
வெற்றி அல்லது வீரமரணம்! சலோ தில்லி!
சீக்கிரமே நேதாஜி ரேடியோ மூலம் சந்தோஷச் செய்தியை உலகெங்கும் உள்ள இந்தியர்களுக்கு அறிவித்தார்.
எல்லையைக் கடந்து இந்திய மண்ணில் நமது ராணுவம் வெற்றிக் கொடி நாட்டியது! ஜெய் ஹிந்த்!
ஆனால் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. இ.தே.ரா. சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தது.
கொட்டும் மழை; புதைசேறு-எப்படி முன்னேறுவது...?
மேலும் சோதனைகள்...
ஜப்பானிய விமானப் படையின் ஆதரவு இல்லை.
உணவும் இல்லை
மலேரியா காய்ச்சலில் பலர் மடிகின்றனர். மருந்துகள் இல்லை...


அத்தனை கஷ்டங்களுக்
கிடையிலும் அந்தமான்
-நிகோபார் தீவுகளில்
நேதாஜி...
இந்திய அரசை இங்கு
ஸ்தாபிக்கிறேன்.
லெஃப்டினன்ட் கர்னல்
லோகநாதன்! நீங்கள்
ஆளுனராகப் பொறுப்
பேற்கிறீர்கள்!
நேதாஜியின் தியாகத்
தால் கவரப்பட்ட
ரங்கூன் இந்திய மக்கள்
அவருடைய எடைக்கு
இரு மடங்கு தங்கத்தை
அளித்தார்கள்!
உங்கள் அன்புக்கு நன்றி.
தேசபக்திக்குப் பாராட்டு!
ஆயினும் சோதனைகள்
தொடர்ந்தன.
அமெரிக்காவிடம்
ஜப்பான் சரணடைய...
ரங்கூன் மீண்டும்
பிரிட்டிஷார்
வசப்பட்டுவிட்டது...
அனைவரும் எப்படியோ
தப்பிச் செல்லுங்கள்!
ருஷ்யா செல்ல முயன்ற நேதாஜியின் விமானம் பார்மோஸா
தீவிலிருந்து புறப்படும் போது விபத்துக்குள்ளாகியது.
மரணத்துக்கு முன் நேதாஜியின் வீரவாசகம்...
இந்தத் தோல்வி தாற்காலிகமானதே.
இந்தத் தியாகம் வீண் போகாது.
இந்தியா விடுதலை பெற்றே தீரும்!
நம்பிக்கை இழக்காதீர்கள்.
ஜெய்ஹிந்த்!
தீரர் நேதாஜியின் விருப்பம்
வீண்போகவில்லை. ஆகஸ்டு
15, 1947ல் இந்தியா
சுதந்திரம் பெற்றது.



இப்படத்திலுள்ள படங்கள் பாரதியாரின் பாடல்களிலுள்ள 8 வரிகளை நினைவு படுத்துமே! கண்டுபிடியுங்கள். விடை: 76 ஆம் பக்கம்.

பிருந்தாவனக் கவியரங்கம்



அன்னை தெரசா

அமைதி என்பதன் மறுபெயராய்,
அன்பு காட்டிடும் நல்லவராம்.
அறப் பணியேதம் குறிக்கோளாய்,
அல்லல் போக்கிடும் வல்லவராம்.

குழந்தைகள் காப்பகம் நிறுவுவதில்,
குன்றா ஆர்வம் மிக்கவராம்.
பற்பல விருதுகள் பெற்றவராம்.
பசிப்பிணி போக்கிடும் தூயவராம்.

கன்னித் துறவி, துயர்துடைக்க,
கல்கத் தாவில் வாழ்பவராம்.
தொழுநோய் போக்கிடும் உத்தமராம்,
தொண்டுகள் புரியவே பிறந்தவராம்.

— எஸ். சிவராஜ் (22), மன்னார்குடி.



அணிலார் முந்திவிட்டார்!

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
இனிய கொய்யா மரமிருக்கு!
குஞ்சம் போன்ற பூக்களுடன்
பிஞ்சும் காயும் நிறைஞ்சிருக்கு!

பச்சை வண்ணப் பந்துகள்போல்
பருத்த காய்கள் கனிவதற்கு
இச்சை யுடனே காத்திருந்து
எண்ணி வந்தேன் நாட்களையும்!


பத்து நாட்கள் சென்றபின்னே
பழுத்த பழமாய் ஒன்றுகண்டேன்!
கத்தி, கம்பு எடுத்துவந்து
காலையில் பறிக்க நினைத்திருந்தேன்!

காலை எழுந்து பல்துலக்கிக்
கனியைப் பறிக்கச் சென்றபோது,
வாலை ஆட்டி அணிலார் அங்கே
வகையாய்க் கொறித்துத் தின்றுவிட்டார்!

காய்கள் பழுக்கக் காத்திருந்தேன்.
கனியோ எனக்குக் கிடைக்கவில்லை.
வாய்ப்பைச் சிறிதே நழுவவிட்டேன்.
வந்த அணிலார் முந்திவிட்டார்!

— ச. சந்திரமோகன் (9787), உத்தம பாளையம்.

வேடந்தாங்கலில்...



கோடி கோடிப் பறவைகள்
கூடி வாழ்க்கை நடத்திடும்
வேடன் தாங்கல் ஏரியில்
வேடிக் கைகள் ஆயிரம்!


ஜாடி போன்ற கூட்டுக்குள்
ஜால வித்தை நடக்குது!
ஜோடி போட்டு நாரையும்
ஜோராய்ப் பறந்து போகுது!

வெள்ளைக் கொக்கு, கூட்டுக்கு
வேக மாக வருகுது.
பிள்ளைக் கொக்கு ஆவலாய்ப்
பிஞ்சுத் தலையை நீட்டுது!

நாளும் ஏரி நீரிலே
நல்ல பாம்புத் தாரையும்
சூழும் மீனைப் பிடித்திடச்
சூரத் தனங்கள் காட்டுது!

சர்வ தேசப் பறவைகள்
சந்திக் கின்ற ஏரியில்
வர்க்க பேதச் சண்டைகள்
வருவதில்லை, இல்லையே.

— ஜெ. ரமேஷ் (7539), சிதம்பரம்.



காலண்டர்

வண்ண வண்ணக் காலண்டர் — புது
வருடம் தந்த காலண்டர்!
எண்ணம் கவர்ந்த காலண்டர்! — தேதி
எண்ண உதவும் காலண்டர்.

இயற்கைக் காட்சி இருக்குது.
எழிலாய்ப் பூக்கள் இருக்குது!
துயரம் மறைய வைக்குது — பல
திரு விழாவைக் காட்டுது!

பொங்கல் — கிறிஸ்து பிறந்தநாள்
— புனித ரம்ஜான் சிறந்த நாள்
எங்கள் காலண்டர் காட்டுதாம் — அதை
இன்றே பார்க்க வாருங்கள்!

மனிதர், நாமும் காலண்டர் — நம்
வயது உதிரும் தாள்களாம்.
இதனை மனத்தில் உணருவோம் — நம்
கடமை தன்னைச் செய்கு வோம்!

— ஷா. சேட்டு முகமது (30 48),
விருத்தாசலம்.



வானவூர்தி

வானில் சர்ரென வேகமாக
வானவூர்தி பறக்குது பார்.
விர்விர் என்ற சப்தத்தோடு
விரைவாய் வானில் செல்லுது பார்!

புகைபோல் உள்ள மேகத்திற்குள்
புகுந்து புகுந்து மறையுது பார்.
பறவைகளையும் கடந்து சென்று
பார்க்க வியப்பை அளிக்குது பார்.

உயர உயரச் சென்று அதுவும்
உலகம் சுற்றி வருகுது பார்.
விமான நிலையம் கண்டவுடனே
விரைந்து கீழே இறங்குது பார்!

பெட்ரோல் அதனின் உணவாகும்.
பெற்றோர் ரைட் சகோதரர்கள்.
உன்னதமான ஊர்தி இதில்
உலகம் காணச் செல்வோமா?

— க. தங்கராஜ் (8557),
வி. ஐய்யம்பாளையம்.

அக்கினி பூதம்

தங்கமணி



"ஏற்கெனவே இந்த இடத்தில் இரவைக் கழித்துப் பழகிய ஏதேனும் ஒரு காட்டு மிருகம் அல்லது மலைப் பாம்பு வந்தால்....?" என்று தயங்கினான் வால்மீகி.

மறுநொடி —

'வெடுக்'கெனச் சீறினாள் வீராயி. "ஆழந் தெரியாமல் காலை விடாதே! என்பார்கள் ஆழம் அறியாமல் ஆற்றிலே இறங்கிவிட்டு, அய்யோ! அம்மா! என்று நீந்தத் 'தெரியாமல் அலறுகிற முட்டாள்களா நாம்...? எத்தனை எத்தனை ஆபத்துக்கள் வந்தாலும், ஆரணியத்தைக் கடந்து, அக்கினி மலைக்குப் போய், பூதம் என்பது என்ன? அது பொய்யா, புளுகா? எனப் பார்த்தே விடுவது என்கிற தைரியமும் நம்பிக்கையுமாகத்தானே வந்திருக்கிறோம்....? இங்கே வந்த பிறகு, காட்டு மிருகம் வந்தால் என்ன செய்வது....? மலைப் பாம்பு வந்தால் ஏது செய்வது? என்று கோழைத்தனமாகப் பேசுகிறாயே! நம்முடைய வழியில்எது குறுக்கிட்டாலும்,அடித்து நொறுக்க வேண்டியதுதானே! எதிர்த்துப் போராட வேண்டியதுதானே....!"

"சப்பாஷ்....! அளவுக்கு மிஞ்சி நீண்டிருந்தாலும், அருமையான வீரப் பிரசங்கம்! வீராயியின் வீரப் பிரசங்கித்தனம் வாழ்க!" எனத் தமாஷாகக் கைதட்டிச் சிரித்தான் ஆதி.

இவ்வாறாக,

பேசிச் சிரித்துக் கொண்டிருக்கையில் —

இருள் பரவியது.

சில நிமிஷங்களுக்கு முன் எங்கேயோ தனித்துச் சென்ற பீமன், வந்தான். "உம்...ம்... ஆளுக்கு ஒரு பழத்தைத் தின்று பசியாறிவிட்டு, இந்தக் குகைக்குள்ளே இரவைக் கழிப்போம்...." என்றவாறே, பப்பாளி மரங்களில் ஏறிப் பறித்து வந்த பழங்களை ஆளுக்கு ஒன்றாகப் பங்கிட்டுக் கொடுத்தான் பீமன்.

பழத்தைவாங்கியபடியேசிரித்தான் ஆதி.

"என்னடா சிரிக்கிறாய்......?" என்றான், பீமன்.

"நாம் எல்லோரும் அக்கினி பூதத்தைப் பார்க்கத்தானே வந்திருக்கிறோம்....?" பப்பாளிப் பழத்தைப் பிளந்தவாறே புன்சிரிப்புடன் கேட்டான் ஆதி.

"ஆமாம், அக்கினி பூதத்தைத்தான் பார்க்க வந்திருக்கிறோம். ஆனால்.... அந்தமகாபூதத்தைப்பசியும்பட்டினியுமாகப் பார்க்கப்படாதே என்றுதான்...." எனச் சொல்லிச் சிரித்தபடியே, பழத்தைக் கவ்விக் கடித்தான் பீமன்.

வாய் நிறையப் பழத்துடன், 'கெக் கெக் கே.... கே....' எனக் குலுங்கிச் சிரித்தவீராயி,"பீம்ங்....ஸொல்வது... ....ஞ்ஜரிதான்...." எனக் குழறினாள்.

அப்புறம் —

பசியாறிய களைப்புடன் உடலாறத் தூங்குவதற்காகச் சின்னஞ்சிறுகுகைக்குள் எல்லோரும் அடைக்கலமானார்கள்.

அதற்கப்புறம் —

ரத்த வெறி கொண்ட கொடிய வேங்கைப் புலி, புள்ளி மானைக் கப்பெனக் கவ்விக் கொள்கிற மாதிரி, காடார்ந்தகாரக் கருக்கிருள், அக்கினி மலைச் சிகரம் முழுவதையும் கும்மெனச் சூழ்ந்து ஆக்கிரமித்துக் கொண்டது!

ஓர் ஆட்டுக் குட்டியை முழுசாக விழுங்கிய மலைப் பாம்பு மாதிரி, நேரம் மெல்ல மெல்ல ஊர்ந்து நகர்ந்து கொண்டிருந்தது.

சற்று நேரத்திற்குப் பிறகு —

நெஞ்சில் நிம்மதி இல்லையோ...?

வயிறு நிறையவில்லையோ...?

தூக்கம் வரவில்லையோ...?

என்னவோ தெரியவில்லை.

ஏதோ புரியவில்லை.

குகையிலிருந்து கைத்தடியுடன் வெளியே வந்தான் ஆதி. அவனைத் தொடர்ந்து வில்லையும் அம்புப் பையையும் எடுத்துக் கொண்டு வந்த வால்மீகி, சுற்றிச் சூழ்ந்து இறுகிக் கண்ணை உறுத்துப் கருக்கிருளைப் பார்த்தான். "பயங்...ங்கர இருள்!" என மெல்லிய குரலில் சொல்லியபடியே, அம்புப் பையை முதுகில் கட்டிக் கொண்டு, வில்லைத் தோளில் செருகிக் கொண்டான்.

வானத்தைப் பார்த்தான் ஆதி.

கருமேகங்களும் வெண்ணிறமேகங்களுமாகத் திரண்டு, புரண்டு வடக்குத் திசையிலிருந்து தெற்குத் திசையை நோக்கி விரைந்து பாய்ந்து போய்க் கொண்டிருந்தன.

காற்று ஜிலுஜிலுவெனத் தழைத்தது.

"இன்னும் சற்று நேரத்திற்குள்.... மழை வரும் போலிருக்கிறது...." என்று என்னவோ யூகமாய்ச் சொன்னான் வால்மீகி.

அடுத்த நொடி —

எதைக் கண்டானோ....?

திடீரென்று, வால்மீகியின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு, பரபரப்புடன் பாய்ந்தான். அருகிலுள்ள கருநீலப் பாறைக்குப் பின்னால் ஓடிப் பதுங்கினான் ஆதி. அவனுடன் ஒட்டினாற்போல் பதுங்கிய வால்மீகி வில்லையும், அம்பையும் எடுத்துக் கொண்டு, இருளைக் கூர்ந்து கவனித்தான்.

சில வினாடிகளுக்குப் பிறகு —

ஓரிரண்டு தென்னை மரக் கிடைத் தூரத்திலே, சின்னச்சின்னக் கோபுரங்களாகக் காணும் மலைப் பாறைகளின் இடுக்கிலே, இருளோடு இருளாக, ஆறடி உயரமுள்ள ஒரு கரிய உருவம், கூனிக் குறுகியபடி இரண்டு கால்களால் நடந்து போயிற்று. சற்றுத் தூரத்திற்குப் பிறகு, நான்கு கால்களால் தாவிக் குதித்து ஓடியது....!

"அது என்னடா....?" எனக் கிசுகிசுத்தான் ஆதி.

"அது வந்து.... கரடியாயிருக்கலாம். ஆனால்..... அது..... வந்து.... கரடி அல்ல...... வந்து....." என்னவோ சந்தேகத்துடன் தயங்கி மயங்கிய வால்மீகி, ஏதோ வேட்கையுடன் வினவினான்: "ஆதி.... அந்த உருவத்தைப் பின் தொடர்ந்து....."

"வா, பார்க்கலாம்....."

இருவரும் பாறைக்கு அடியிலிருந்து வெளிப்பட்டு, இருளை ஊடுருவிக் கொண்டு பாய்ந்தார்கள்....! இரண்டு கால்களால் நடந்து, நான்கு கால்களால் தாவிக் குதித்து ஓடிய இருளார்ந்த உருவத்தைப் பின் தொடர்ந்து, ஓட்டமும் நடையுமாக விரைந்து சென்றார்கள். மலைச் சிகரத்தின் பூமியெங்கும் கூம்பும், கோபுரமுமாய்க் குத்திட்டு ஓங்கி நிற்கிற பாறைகளுக்கிடையில், வளைந்து நெளிந்து போய்க் கொண்டிருக்கையில்....

சட்டென்று —

இணைந்து வரும் ஆதியைக் கையை நீட்டித் தடுத்தபடியே, கூம்புப் பாறைக்குப் பக்கத்தில் ஒதுங்கி நின்று கவனித்தான், வால்மீகி.

ஏழெட்டு மீட்டர் தூரத்திலே —

கூனிக் குறுகி ஆடி அசைந்தபடி இரண்டு கால்களில் நடந்து சென்ற அந்த உருவம், அந்தகார உருவம், ஓங்கி உயர்ந்திருக்கிற தூண் மாதிரி, நெட்டுக் குத்தாக எம்பி நிற்கிற ஒரு பாறைக்குப் பின்னால் போய்....

போயிற்று —

அவ்வளவுதான், மீண்டும் வெளிப்படக் காணோம்!

திகைத்துத் திணறிய ஆதியும், வால்மீகியும் குபீரெனத் தாவினார்கள்.

முயலைக் கண்ட ஓநாய் மாதிரி, வீச்சாகப் பாய்ந்தவர்கள் —

யாரோ தடுத்த மாதிரி —

எதுவோ குறுக்கிட்ட மாதிரி —

'சடக்'கெனத் தவித்து நின்றார்கள். ஓரிரண்டு மீட்டர் தூரத்திலே, தூண் மாதிரி ஓங்கி நிற்கிற பாறையின் மையத்தில், மலைக் கழுகின் முட்டையளவான பெரிய பெரிய இரண்டு கண்கள், அந்தக் காட்டுக் கருக்கிருளிலும்கூட ஜகஜகவென ரத்தச் சிவப்பாய்ப் பிரகாசித்தன!

ரத்தக் கண்களைப் பார்த்ததும் —

''பப்.... பிளப்!.... பப்.... பிளப்...!' எனத் துடிக்கிற இருதயம், நொடி நேரம் நின்று, மீண்டும் துடிக்கத் தொடங்கியது. 'பப்.... பிளப்! ....பப் ...பிளப்!'

'குப்! குப்....!'பென வியர்த்துத் துளிர்த்துச் சொட்டுகிற அங்கமெல்லாம் சிலிர்த்தது! சில்லிட்டு விறைத்தது....!

''இது என்ன....?''

''இது.... இது.... அக்கினி பூ.... பூத.... பூதத்தின் விழிகளோ.... ஓ!''

''டேய்.... பயப்படாதே....!''

''இல்லை! நான்.... நான்.... பயப்படவில்லை.... சும்....''

''நிதானமாகப் பின்வாங்கி.... காலையில் வந்து கவனிக்கலாம். வா....''

வில்லையும், அம்பையும் இறுக்கிப் பிடித்தபடியே ஆதியுடன் பின்வாங்கி நகர்ந்தான் வால்மீகி.

வானம்முழுவதையும்கன்னங்கரிய மேகங்களுடன் குவிந்து மூட்டமிட்டுக் கவிந்து இறுக்கின....!

வால்மீகியும், ஆதியும் வீச்சாக நடந்து குகையை நெருங்கிக் கொண்டிருக்கிற சமயத்தில் —

'பளீர்! பளீர்ர்ர்....!' என்று மின்னல் தெறித்தது!

மறுநொடியே —

'டமார்! டம்ம்... மார்ர்ர்....' எனப் பேரிடி குமுறி அதிர்ந்தது!

அஞ்சி நடுங்கிய ஆதியும், வால்மீகியும் வீச்சாகத் தாவிக் குகைக்குள் பாய்ந்தவுடனே —

குகைக்குள் தூங்காமல் விழித்திருக்கிற பீமன் அலறினான். ''ஆதி! வால்மீகி....!''

நாகன் கதறினான். ''எங்கே போய் வருகிறீர்கள்....?''

வீராயி —

அலறவும் இல்லை.



கதறவும் இல்லை.

ஆதியையும், வால்மீகியையும் கோபாவேசத்துடன் வெறித்துப் பார்த்தாள்! ''ஏன்....?'' என்று கேட்கவில்லை. ''எதற்கு....?'' என்று வினவவில்லை. வாய் திறந்து ஒரு பேச்சுப் பேசவில்லை. வேப்ப மரத்தடியில் சமைந்திருக்கிற பத்திர காளிச் சிலை மாதிரி, கைகளை வளைத்து முழங் கால்களைக் கட்டியபடி, முழிகளை உருட்டியவாறு கம்மெனக் கிடந்தாள்....,!

ஆதி, பீமனைப் பார்த்துச் சாந்தமாகக் கேட்டான். ''பீமா.... என்னடா, நடந்தது, இங்கே....?''

பீமன் அல்ல, நாகன் சொன்னான். ''வந்து.... தூங்கிக் கொண்டிருக்கையில்.... திடீரென்று இவள் வீறிட்டு அலறினாள். இவளது அலறலைக் கேட்டுத் தூக்கம் கலைந்து விழித்த நாங்கள்.... நாங்களும் அஞ்சி நடுங்கி அலறினோம்...!''

''ஆமாம், ஒரு இழவும் புரியாமல் அலறினோம்! அலறிக் கொண்டே அழுதோம்! அழுது கொண்டே அலறினோம்....!'' என்று அசட்டுச் சிரிப்புடன் சொன்னான் பீமன்.

நொடி நேரம் தயங்கிய வால்மீகி, வீராயியைப் பார்த்துக் கேட்டான். ''வீராயி... நீ எதற்காக அலறினாய்..?''

''பெரிய பெரிய கொம்புகள் முளைத்த நாலைந்து பயங்கர வேங்கைப் புலிகள், நம்மையெல்லாம் கவ்விக் கடித்துத் தூக்கிச் செல்வது போல் கனவு கண்டு அலறினேன்....! அது சரி.... இந்த நள்ளிரவு நேரத்தில், நீங்கள் இருவரும் எங்கே போய் வந்தீர்கள்....?'' என்று ஆத்திரமும் அதட்டலுமாய்க் கேட்டாள் வீராயி.

வால்மீகி ஏதோ சொல்ல.....

'பளீர்ர்....! பளீச்ச்....!' மலை முழுவதையும் எரித்துச் சாம்பலாக்கி விடுகிற மாதிரி குபீரெனத் தீய்ந்து தெறித்தது, கொடி மின்னல்! கொடிய மின்னல்....!

மின்னலுக்குப் பின் —

''குகுகும்ம்ம்.....! டுடுடும்ம்ம்....!'' மலை முழுவதையும் இடித்துத் தகர்த்துத் தூள் தூளாகச் சிதைத்து அழிக்கிறது போல, படு பயங்கரமாய்க் குமுறியது பேரிடி! பாழும் இடி....!

அடுத்த நொடி —

'கொட கொட கொட....' வெனக் கொட்டத் தொடங்கியது மழை! மழை! 'சடசடசட....' வெனச் சாடிப்



பொழிகிற பெரு மழையோடு கூடிக் குலாவிக் குமுறிக் கொப்புளித்துச் சீறிச் சுழன்று சூறுவளியாகக் கூத்தடித்தது, காற்று! பெருங் காற்று....!

அப்புறம் —

குகைக்குள்ளே —

அங்கும் இங்குமாக அமர்ந்து, முழங்கால்களுக்கு இடையில் முகத்தைக் கவிழ்த்து முடங்கியவாறே, சற்று நேரம் விழித்திருந்த பிறகு, தங்களை மறந்து தூங்கத் தொடங்கினார்கள்.

அதற்கப்புறம் —

மேகங்கள் கலைந்து

வானம் வெளுத்து

மழையும், காற்றும் அடங்கி

பொழுது விடிந்து

மஞ்சள் வெயில் பரவியதும் —


எல்லோரும் விழித்து எழுந்தார்கள். ஏதோ ஒரு பரபரப்பும் என்னவோ ஒரு துறுதுறுப்புமாக ஆதியும், வால்மீகியும் முன்னே நடந்தார்கள். மற்றவர்கள் ஏதும் புரியாமல் அவர்களைப்பின்பற்றிச் சென்றார்கள்.

சில நிமிஷங்களில் —

கூம்பும், கோபுரமுமாய்க் குத்திட்டு ஓங்கி நிற்கிற பாறைகளுக்கு அப்பாலே, ஓங்கி உயர்ந்த தூண் மாதிரி, நெட்டுக் குத்தாக எம்பி நிற்கிற பாறைக்கு எதிரில் போய் நின்றார்கள். பாறையின் மையத்தில், சொக்கத் தங்கத் தகட்டினால் அமைந்த விசித்திரமான, பயங்கர முகத்தில், காலை வெயிலில், 'பளீர் ர்....' எனச் சொலிக்கிற ரத்தக் கண்களைக் கண்ட நொடியே —

''என்னடா இது....?'' என்று கிறீச்சிட்டாள் வீராயி!

(தொடரும்)





குழந்தைகளே! உங்களுக்கு 'சாக்லெட்' பிடிக்கும் அல்லவா? அதன் பின்னணியில் ஒரு சுவையான நிகழ்ச்சி. வரலாற்றுச் சம்பவம்.

அமெரிக்கா கண்டத்தைக் கண்டு பிடித்தவர் யார் என்றால் 'டக்'கென்று சொல்வீர்கள் கிறிஸ்டோபர் கொலம்பஸ் என்று. அவருடன் தொடர்புடைய சம்பவம்தான் இது. இச்சம்பவம் தான் உங்களுக்கு சாக்லெட் என்ற தின்பண்டம் கிடைக்க வழி வகுத்தது. ஆச்சர்யமாக உள்ளதா? மேலே படியுங்கள்.

ஐரோப்பாவில் ஐபீரியா என்று ஒரு தீப கற்பம். அதில் இரண்டு நாடுகள். ஒன்று ஸ்பெயின். மற்றொன்று போர்ச்சுகல். இரண்டும் கப்பல் ஓட்டுவதில் சிறந்து விளங்கிய நாடுகள்.

15 ஆம் நூற்றாண்டு. ஸ்பெயின் மன்னருக்கு ஒரு மகள். இசபெல்லா என்று பெயர். அவளுக்குப் பாடம் கற்பித்த ஆசிரியர்தான் இந்த கொலம்பஸ். பாடத்துடன் கூட, பல்வேறு நாடுகளின் தகவல்களையும் இளவரசிக்குப் போதிப்பார். இந்தியாவைப் பற்றி அதிகம் சொல்லுவார். ஏனெனில், இது கொலம்பஸுக்குப் பிடித்தமான நாடு. 'இந்தியா ஒரு பணக்கார நாடு; பாலாறு ஓடுமிடம்; பொன் விளையும் பூமி' என்ற எண்ணம். இங்கு பயணம் வர வேண்டும் என்று கொள்ளை ஆசை.

ஒருநாள், கொலம்பஸ் தன் விருப்பத்தை அரசனிடம் சொன்னார். உதவி கேட்டார். கடல் பயணம் என்றால் இலேசா? ஏராளமாகச் செலவு பிடிக்கும். ஆகவே, அரசர் உதவ முன்வரவில்லை.

சில ஆண்டுகள் ஆயின. அரசர் இறந்துவிட்டார். புதிய அரசர் யார் தெரியுமா? இசபெல்லா தான். கொலம்பஸுக்கு மிகவும் மகிழ்ச்சி. நேராக அரசி இசபெல்லாவிடம் போனார். தன் விருப்பத்தைச் சொன்னார். அரசியின் ஆசிரியர் அல்லவா?

மறுக்க முடியுமா? ராணி ஏற்றுக்கொண்டாள். சில கப்பல்களைக் கொடுத்தாள். நிறைய மாலுமிகளை அனுப்பினாள். ஆறு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் கொடுத்து வழி அனுப்பி வைத்தாள்.

1498. கொலம்பஸ் கிளம்பிவிட்டார். இராப்பகலாகப்பயணம். இரண்டரை மாதங்கள் கடந்தன. இந்தியா வரவில்லை. வேறு எந்த பூமியும் தெரியவில்லை. கொலம்பஸ் கவலைப்பட்டார். ஏன் தெரியுமா? போக மூன்று மாதம் திரும்ப மூன்று மாதம் அதற்குத்தான் கப்பலில் உணவு இருந்தது.

மூன்று மாதம் முடிய ஓரிரு தினங்கள் இருந்தன. திரும்ப வேண்டும். நல்லவேளை. தூரத்தில் கரை தெரிந்தது. அதை நோக்கிப் போனார். கப்பல்களுக்கு நங்கூரம் இட்டார். எல்லாரும் தரை இறங்கினர். நிம்மதியாக அமர்ந்து உணவு தயாரித்தனர்.

சாப்பிடத் தொடங்கும் நேரம். திடீரென்று அத்தீவின் மக்கள் கூட்டமாக ஓடி வந்தனர். எல்லா உணவையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டனர். மீண்டும் உணவு தயாரிக்க நேரமாகும். அனைவருக்கும் நல்ல பசி. வயிற்றைக் கிள்ளியது.

அருகில் சில மரங்கள். பழங்கள் தொங்கின. கொலம்பஸ் அவற்றைப் பறித்து வரச் சொன்னார். எல்லாரும் சாப்பிட்டனர். நல்ல ருசி!

கொலம்பஸ், ராணி இசபெல்லாவுக்குக் கொடுப்பதற்காகச் சில பழங்களைப் பறித்து வைத்துக் கொண்டார். இரண்டு மூன்று நாள் தங்கிவிட்டு ஸ்பெயினுக்குப் புறப்பட்டார்.

கொலம்பஸ், அந்த இடம்தான் இந்தியா என்று நினைத்தார். அங்கு வாழ்ந்த மக்களை இந்தியர் என்றார். முகம் சிவப்பு நிறம். எனவே செவ்விந்தியர் என்றார். உண்மையில் அது இந்தியா இல்லை. புதிய கண்டம். பிற்பாடு அதை அமெரிக்கோ வெஸ்புஸி என்பவர் அறிந்து சொன்னார். அவர் பெயரால் அமெரிக்கா எனப்படலாயிற்று. கொலம்பஸ் இறங்கிய இடம் தென் அமெரிக்காவின் பகுதி.

கொலம்பஸ் ஸ்பெயினை அடைந்தார். பழங்களை ராணியிடம் அளித்தார். அவள் ஒன்றை எடுத்துச் சுவைத்தாள். சுவையாக இருந்தது. உடனே அவளுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

வேலைக்காரனை அழைத்தாள். சில பழங்களைத் துண்டு துண்டாக நறுக்கச் சொன்னாள். பாலில் போட்டுக் காய்ச்சித் தரச் சொன்னாள். ஆறியதும் எடுத்து உறிஞ்சிச் சுவைத்தாள். இனிமையான சுவை. வியந்தாள். 'ஆகா! இனிமையான 'சாக்லெட்' என்று கூச்சலிட்டாள்.

'சாக்லெட்' என்றால், ஸ்பானிய மொழியில் 'உறிஞ்சும் உணவு என்று பொருள். அப்பழத்தின் பெயர் 'கோகோ'. சதைப் பற்றுள்ள பழம் என்று பொருள்.

அது முதல், அப்பழத்தில் தயாராகும் தின்பண்டத்தை 'சாக்லெட்' என்றனர். பிற்பாடு, அது போன்று தயாராகும் எல்லாமே 'சாக்லெட்' எனப்படலாயின.

இப்போது, கோகோ மரத்தைக் கூட 'சாக்லெட்' மரம் என்றே சொல்கிறார்கள்.

அழுவது ஏன்?

"மழை பெய்வது என்றால் மேகம் அழுவது என்கிறார்களே... மேகம் ஏன் அழுகிறது....?"

"மின்னல் அடிக்கின்றதே.....!"

— பவித்ரா.



தாத்தாவின் பரிசு



"அருண்! அஷோக்! எழுந்திருங்கள். மணி ஆறு ஆகிவிட்டது. இன்று உங்கள் தாத்தா சென்னையிலிருந்து வருகிறார். தெரியுமல்லவா?" கூறியவாறே தன் மகன்களை எழுப்பினாள் சுமதி.

'தாத்தா' என்ற சொல்லைக் கேட்டதும் அரைத்தூக்கத்திலிருந்த இருவரும் உற்சாகத்துடன் படுக்கையிலிருந்து எழுந்தார்கள்.

"ஆமாம் அம்மா. தாத்தாவை அழைத்துக்கொண்டுவர வேண்டுமே, ரயில் நிலையத்துக்குப் போய்" எழுந்து ஓடினர் இருவரும்.

"தாத்தா வரும் ரயில் நம் ஊருக்கு 7.30க்கு வரும். தாத்தாவுக்கு "நேரம் தவறாமை" மிகவும் முக்கியம். அதனால், நீங்கள் நேரம் கழித்துச் செல்லாமல் சரியான நேரத்துக்குச் செல்ல வேண்டும்" என்று கூறினாள் அவர்கள் அன்னை சுமதி.

குளித்து முடித்து இருவரும் தங்கள் தாத்தாவை அழைத்து வரப் புறப்பட்டனர்.

அவர்களுடைய ஊர் மலையடிவாரத்தில் உள்ள ஓர் அழகிய கிராமம். அவர்கள் வீட்டிற்குச் சற்று தொலைவில் ரயில் நிலையம் உள்ளது. நடந்து சென்றால் பதினைந்து நிமிடத்தில் சென்றடையலாம். பல மரங்களும், தோப்புகளும் கொண்ட அழகிய ஊர் அது. ரயில் நிலையம் செல்லும் வழியில் ஒரு பெரிய ஏரி உள்ளது. மழை நாட்களில் நிரம்பி வழியும் ஏரி, கடுங்கோடையில் கூட வற்றாது.

அருண், அஷோக்கின் தாத்தா மகாதேவன் எப்பொழுதும் கோடை விடுமுறையில் அந்தக் கிராமத்துக்கு விரும்பி வருவார். அவர் வந்தால் இருவருக்கும் மிகவும் கொண்டாட்டம்தான். விடுமுறை நாட்களாதலால், தாத்தாவோடு சேர்ந்து விளையாடுவார்கள், தோட்டம் போடுவார்கள். உடற்பயிற்சியும் செய்வார்கள். மாலையில் ஏரிக் கரை ஓரமாகப் பேசியபடியே நடந்து செல்வார்கள். ஏரிக் கரையில் ஒரு ராமர் கோவில் உள்ளது. அங்கு சென்று கடவுளை வணங்கி, சற்று நேரம் அங்கேயே அமர்ந்து விட்டு வருவார்கள்.

ஆனால், அவர்கள் இருவருக்கும் தங்கள் தாத்தாவிடம் ஒரு விஷயத்தில் சற்று பயம் உண்டு. அதுதான் தாத்தாவின் பங்சுவாலிட்டி. நேரம் தவறாமை என்பது தாத்தாவுக்கு முக்கியம். எந்த ஒரு வேலையையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க வேண்டும் என்பார். நேரம் பொன் போன்றது என்பார் தாத்தா. பள்ளி விடுமுறை என்றாலும் வழக்கம் போல் எழுந்து விட வேண்டும். தாத்தா ராணுவத்தில் பெரிய அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். அதனால் அவர்களுக்கே உரிய கட்டுப்பாடு, ஒழுக்கம் எல்லாவற்றையும் தன் ஓய்வு கால வாழ்விலும் கடைப்பிடிப்பதோடு தன்னைச் சுற்றியுள்ளவர்களும் .. அப்படியே இருக்க வேண்டும் என்று விரும்பு

வார். மற்றபடி தாத்தா மிகவும் ஜாலியான மனிதர். இரக்கமும் பிறருக்கு உதவும் குணமும் நிரம்பப் பெற்றவர்.

அந்தத் தாத்தாவை அழைத்துக் கொண்டு வரத்தான் அருணும், அஷோக்கும் கிளம்பினர். ரயில் நிலையம் செல்லும் வழியில் ஒரு மேம்பாலம் உண்டு. அங்கு ஒரு ஏரி குறுக்கிடுவதால் ஒரு சிறிய மேம்பாலத்தை அங்கு கட்டியிருந்தார்கள். நடந்து செல்பவர்கள் அதில் ஏறித்தான் ரயில் நிலையம் செல்ல வேண்டும். வாகனங்கள் செல்ல வேறு பாதை உண்டு.

அருணும், அஷோக்கும் பேசியபடியே மேம்பாலத்தின் மேல் சென்று கொண்டிருந்தார்கள்.

"அருண்! இங்கேயிருந்து கீழே பாரேன். தண்ணீரில் என் முகம் தெரிகிறது பார்" என்றவாறே திரும்பிய அஷோக், "டேய், அழகான பட்டுப் பூச்சிடா!"" என்றவாறே அதைப் பிடிக்க ஓடினான். அருணும் அவன் பின்னால் ஓட ஆரம்பித்தான். இருவரும் வந்த வழியே ஓடி மறுபடி மேம்பாலத்தின் கீழே இறங்கி விளையாட ஆரம்பித்துவிட்டனர். இருவரும் சிறுவர்கள் அல்லவா? வந்த காரணத்தை மறந்துவிட்டனர். தொலைவில் ரயில் எஞ்ஜினின் சப்தம் கேட்டதும் அருண் திடுக்கிட்டான்.

"டேய், அஷோக்! மடையா! உன்னால்தான் இன்று நாழியாகிவிட்டது. அதோ பார். ரயில் வந்துவிட்டது." கூறிக் கொண்டே ஓடினான் அருண். அஷோக்கும் பின்னாலேயே ஓடினான். ஆனால் அவர்கள் ரயில் நிலையம் செல்வதற்குள் தாத்தா பெட்டி, பைகளுடன் சிறிது தூரம் வந்துவிட்டார். இரு சிறுவர்களும் மூச்சிரைக்க அவர் முன்னே வந்து நின்றனர். தாத்தா அவர்களைப் பார்த்துச் சிரித்தார்.

"என்ன இன்று லேட். மெதுவாக எழுந்து வந்தீர்களா?" தாத்தா மகாதேவன் கேட்டார். பதில் ஒன்றும் சொல்லாமல் இருவரும் பெட்டியையும், பையையும் அவரிடமிருந்து வாங்கிக் கொண்டனர். அருண் அஷோக்கை முறைத்தான். அவனால் தானே தாமதம்?

"தாத்தா! இந்த அஷோக்தான்... அருண் ஆரம்பித்தான்.

"இல்லை தாத்தா" உடனே மறுத்தான் அஷோக்.


"சரி சரி. சண்டை வேண்டாம். வீட்டில் சென்று பேசுவோம் அதைப் பற்றி" என்ற தாத்தா அவர்களுடைய படிப்பைப் பற்றியும், சென்ற முறை அவர் வந்தபோது வைத்திருந்த ரோஜாச் செடி, மாங்கன்று பற்றியெல்லாம் கேட்டவாறே நடந்து வந்தார். அவர்களும் நடந்ததை மறந்து உற்சாகமாகப் பதிலளித்துக்கொண்டு வந்தனர்.

"தாத்தா! அப்பா ஒரு நாய்க் குட்டி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார். புசுபுசுவென்று அழகாக இருக்கு தாத்தா. நாங்கள் அதற்கு சீசர் என்று பேர் வைத்திருக்கிறோம். நாம் வாக்கிங் போகும்போது அதையும் அழைத்துக் கொண்டு போகலாமா தாத்தா?" அஷோக் ஒரே மூச்சில் சொல்லிக் கொண்டு வந்தான்.

பேசியவாறே மூவரும் வீடு வந்து சேர்ந்தனர். உள்ளே வந்ததும் அருண் அஷோக்கைப் பற்றித் தாயிடம் முறையிட்டான். "இவனால் தானம்மா நேரமாகியது. நாங்கள் போவதற்குள் தாத்தாவே வந்துவிட்டார்". அஷோக்கின் கண்கள் கலங்கியது. தாத்தா அஷோக்கை அருகில் அழைத்துச் சமாதானப்படுத்தினார். இருவருக்கும்தான் வாங்கி வந்திருந்த பழங்கள், பிஸ்கெட்களைக் கொடுத்தார்.

தாத்தா குளித்து உடை மாற்றி வந்ததும் மூவருக்கும் சிற்றுண்டி பரிமாறினாள் சுமதி. சாப்பிட்டவாறே தாத்தா கூறினார். "நான் நாளையே ஊர் திரும்ப வேண்டும். கோடை விடுமுறைக்கு வருவேன். அப்போது பார்க்கலாம். 'நேரம் தவறாமையில்' நீங்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறீர்கள் என்று."

மறுநாள் தாத்தா ஊருக்குச் சென்றுவிட்டார். இருவருக்கும் வீடு வெறிச்சென்றிருந்தது. ஆனால் வருடத் தேர்வு நெருங்கிவிட்டதால் மிகக் கவனத்துடன் படிக்க ஆரம்பித்தனர். அருணும் அஷோக்கும் நன்றாகப் படிப்பவர்கள்தான். அவர்கள் தந்தை அவர்கள் எது கே[illegible]லும் வாங்கித்



தருவார். ஆனால் படிப்பில் கவனமாக இல்லையென்றால் மிகவும் கோபப்படுவார். அதற்குத்தேவையில்லாமலேயே இருவரும் நன்றாகப் படித்து நல்ல முறையில்தேர்வும்எழுதினர். கோடை விடுமுறையும் வந்தது.

தாத்தாவிடமிருந்து அன்று கடிதம் வந்திருந்தது. தாத்தா மறுநாள் வருவதாக எழுதியிருந்தார். இருவருக்கும் மிகவும் மகிழ்ச்சி.

அருண் கூறினான்: ''அசோக்! நாளைக் காலையில் நான் மட்டும் போய் தாத்தாவை அழைத்துக் கொண்டு வருகிறேன். நீ வர வேண்டாம். உன்னால்தான் சென்ற முறை தாமதமாயிற்று.''

''முடியாது. நானும் வருவேன். அம்மா அருணைப் பாருங்கள். நான் அவனுடன் வரக் கூடாதாம்'' அழ ஆரம்பித்தான் அசோக். அவர்கள் அன்னை சுமதி அருணிடம் கூறினாள். ''அருண்! இந்தத் தடவை அசோக் சமர்த்தாக வருவான். அவனையும் கூட்டிப் போ''. அரை மனத்தோடு ஒப்புக் கொண்டான் அருண்.

மறுநாள் காலை. இம்முறை தாத்தாவின் பாராட்டைப் பெற்றுவிட வேண்டுமென்று இருவரும் சீக்கிரமே கிளம்பினர் வீட்டை விட்டு. ஒன்றும் பேசாமலே நடந்து மேம்பாலம் ஏறி, இறங்கியும் ஆயிற்று. அப்பொழுது தான் கவனித்தனர், எதிர்ப்புறமாக ஒரு முதியவர் கைத்தடியை ஊன்றியவாறு நடக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தார். கையில் ஒரு பை வேறு வைத்திருந்தார். ஏற முடியாமல் அங்கேயே அமர்ந்தும் விட்டார். அருணுக்கும் அசோக்கிற்கும் அவரைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ஆனால், அவரிடம் சென்றால் நேரமாகிவிடும். தாத்தா வரும் ரயிலும் வந்துவிடுமே! அதனால் ஒருவரை ஒருவர் பார்த்தவாறே அவரைக் கடந்துவிட்டனர்.

''பாவம்டா அருண், அந்தத் தாத்தா....'' மெல்ல ஆரம்பித்தான் அசோக்.

''டேய்பேசாமல்வா! போன முறையும் இந்த மேம் பாலத்தில்தான் உன்னால்தாமதமாகிவிட்டது'' அருண்

அதட்டினான். ஆனால் அவனுக்கும் அந்த முதியவரை அப்படியே விட்டு விட்டுப் போக மனமில்லை. சற்றுத் தயங்கி நின்றுவிட்டுக் கூறினான்.

"அசோக்! நீ சொல்வது போல் எனக்கும் அவரைப் பார்த்தால் பாவமாகத்தான் இருக்கு. நாம் அவரை மெல்ல அழைத்துக் கொண்டு போய் மேம்பாலம் தாண்டி விட்டு விடலாம்" அருண் சொல்லி முடிப்பதற்குள் அசோக் உற்சாகமாக முதியவரிடம் ஓடினான். இருவரும் அவரை மெல்ல எழுப்பி இருபுறமும் பிடித்துக் கொண்டு நடத்திச் சென்றனர். அசோக் கைத்தடியையும், அருண் பையையும் எடுத்துக் கொண்டனர். முதியவர் மேம்பாலம் இறங்கியதும் இருவரையும் மகிழ்ச்சியோடு ஆசீர்வதித்துவிட்டு மெல்ல நடந்து சென்றார்.

சகோதரர்கள் இருவரும் மீண்டும் மேம்பாலம் ஏறிச் சென்றனர். பாதி தூரம்தான் சென்றிருப்பார்கள். தாத்தா மகாதேவனே எதிரே வந்து விட்டார். இருவரையும் கண்டதும் 'ஓ'வென்று பலமாகச் சிரித்தார். "என்ன இருவரும், 'நேரம் தவறாமை'யில் கவனமாக முன்னேறுகிறீர்களா?" தாத்தா கேட்ட கேள்விக்கு பதில் ஒன்றும் சொல்லாமல், அவருடைய பெட்டி, பைகளை வாங்கிக் கொண்டனர் அருணும் அசோக்கும். வழக்கம் போல் மற்ற விஷயங்களைப் பேசிக் கொண்டு வந்தனர். வீடு வந்தது. அவர்களுடைய அன்னை சுமதியிடம் மகாதேவன் கூறினார். "உன் மகன்கள் இருவரிடமும் நல்ல முன்னேற்றம். போன முறைக்கு இம்முறை இன்னும் பத்து நிமிடங்கள் தாமதம்." சுமதி வியப்போடு தன் மகன்களைப் பார்த்தாள். உடனே அசோக் கூறினான். "தாத்தா! இந்த முறை நாங்கள் தவறு செய்யவில்லை. மேம்பாலத்தில் வரும் போது ஒரு வயதான தாத்தா, ஏற முடியாமல் கீழே விழுந்துவிட்டார். அதனால் நாங்கள் இருவரும் அவரை அழைத்துக் கொண்டு போய் பாலம் இறக்கி விட்டுவிட்டு வந்தோம். அதனால்தான் நேரமாகிவிட்டது தாத்தா."

அருண் தொடர்ந்தான். "நாங்கள் கூட முதலில் போய்விடலாம் என்றுதான் நினைத்தோம். ஆனால் அவரைப் பார்க்க பாவமாக இருந்தது. அதனால்தான் நேரமானாலும் பரவாயில்லை என்று அவருக்கு உதவப் போனோம்."

அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த மகாதேவனுக்கு முகம் மலர்ந்தது.

"நீங்கள் இருவரும் செய்ததுதான் மிகவும் சரியானது. 'நேரம் தவறாமை' மிகவும் முக்கியமானதுதான். ஆனால், அதைவிட முக்கியமானது 'மனிதாபிமானம்'. உதவி தேவைப்படுபவர்களுக்கு நம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். உங்கள் செயல் எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது"—கூறி முடித்த தாத்தா மகாதேவன் அவர்களை அருகே அழைத்து ஆளுக்கொரு சிறிய பரிசுப் பொட்டலத்தைக் கையில் கொடுத்தார். பிரித்துப் பார்த்த இருவருக்கும் மிக்க மகிழ்ச்சியும் வியப்பும் ஏற்பட்டது. அதில் ஒரு கைக்கடிகாரம் இருந்தது. அதை அவர்கள் கையில் கட்டியவாறே தாத்தா கூறினார். "உங்களுக்குக் கொடுக்கத்தான் இதை வாங்கிக் கொண்டு வந்தேன். ஆனால் இப்பொழுது இதைக் கொடுக்கும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது."

தாத்தா தன் இரண்டு பேரன்களையும் அன்புடன் தட்டிக் கொடுத்தார். சீசருக்கு ஒரே உற்சாகம். தன்னையே பாராட்டியது போல் எகிறிக் குதித்தது. மெலிதாகக் குரைத்துத் தன் மகிழ்ச்சியைக் காட்டியது.

பெரும்பாலான விலங்குகளுக்கு நிறக் குருடு (Colour Blindness) உண்டு என்ற உண்மையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பூனை, நாய், குதிரை போன்ற பாலூட்டிகளால் நிற வேறுபாடுகளைக் கண்டுபிடிக்க இயலாது.

— கோபஞ்சு.



ஜெர்மனி நாட்டுக் கதை

கட்டைவிரல் டாம்

மூலம் : கிரிம் சகோதரர்கள்
தமிழில் : எச். கிருஷ்ணமூர்த்தி



ஒரு விறகு வெட்டியும், அவனுடைய மனைவியும் இருந்தனர். அவர்களுக்குக்குழந்தையேஇல்லை.அதனால், அவர்கள் மிகவும் வருத்தப்பட்டனர்.

ஒருநாள் விறகு வெட்டியும் மனைவியும் பேசிக் கொண்டிருந்தனர்.

''குழந்தைகள் இல்லாமல் வீடு வெறிச்சென்றிருக்கிறது. பொழுதே போகவில்லை'' என்றான் விறகு வெட்டி.

''உண்மைதான். ஊரில் எல்லோர் வீட்டிலும் குழந்தைகள் இருக்கின்றன. அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நமக்கும் ஒரு குழந்தை இருந்தால், நாம் எவ்வளவு ஆனந்தமாக இருப்போம்!... அது ஒரு சின்னக் குழந்தையாக இருந்தால் கூடப் போதும்... ஏன், என் கட்டை விரல் அளவுக்கு இருந்தாலும்போதும். அதனிடம்நான் மனதார அன்பு செலுத்துவேன். என் வாழ்க்கை நிறைவு பெறும்!'' என்று மனைவி, தன் ஆசையை வெளியிட்டாள்.

நாட்கள் நகர்ந்தன. ஓர் அதிசயம் நடந்தது. அந்த மனைவியின் ஆசை நிறைவேறியது. அதுவும் அவள் நினைத்த மாதிரியே நிறைவேறியது. உரிய காலத்தில் அவளுக்கு ஒரு சின்ன ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை கொள்ளை அழகு. பலசாலி. ஆனால், அது கட்டைவிரல் அளவே இருந்தது!

''குழந்தை சின்னதாக இருந்தாலும் பரவாயில்லை. அவன் எங்கள் செல்லப் பிள்ளை,'' என்று குழந்தையின் அப்பாவும், அம்மாவும் கூறினர். கட்டை விரல் அளவே இருந்ததால் குழந்தைக்குக் 'கட்டை விரல் தாமஸ்' என்று பெயர் வைத்தனர். செல்லமாக, ''கட்டை விரல் டாம்'' என்று கூப்பிட்டனர்.

பெற்றோர்கள் டாமுக்குப் பிரியமாக உணவூட்டி வளர்த்தனர். ஆனால், டாம் பிறந்த போது இருந்த அளவே இருந்தான்! துளி கூடப் பெரிதாக வளரவில்லை. அவனுடைய கண்கள் மட்டும் பளிச்சென்று பிரகாசித்தன. அவன் புத்திசாலியாக இருந்தான்.

ஒருநாள் விறகு வெட்டி அவசரமாகக் காட்டிற்குப் போக வேண்டியிருந்தது. அப்போது அவன், ''ச்சே! என்ன வீடு இது? எனக்கு உதவியாக வண்டியை ஓட்டி வருவதற்கு இந்த வீட்டில் யாருமே இல்லை. அப்படி ஓர்

ஆள் இருந்தால், எவ்வளவு உதவியாக இருக்கும்?'' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான்.

''அப்பா, நான் இருக்கிறேனே உங்களுக்கு உதவி செய்ய! நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்றான் டாம்.

''டாம்! நீயோ சின்னவன். குதிரையின் கடிவாளத்தைக் கூட உன்னால் தொட முடியாது. எப்படி வண்டி ஓட்ட முடியும்?'' என்று சிரித்துக்கொண்டே விறகு வெட்டி கேட்டான்.

''பரவாயில்லை அப்பா! அம்மா குதிரையை வண்டியில் பூட்டினால் போதும். நான் குதிரையின் காதில் ஏறிக் கொண்டு அதற்கு வழி சொல்லுவேன்!'' என்றான் டாம்.

''சரி, ஒருமுறை அப்படியே செய்யலாமே!'' என்றான் விறகுவெட்டி.

விறகு வெட்டி காட்டிற்கு விரைந்தான். சிறிது நேரம் கழித்து அம்மா வண்டியைத் தயார் செய்தாள். டாமைக் குதிரையின் காதில் ஏற்றினாள்.

காதின் உள்ளே வசதியாக உட்கார்ந்து கொண்டு டாம் குதிரையை விரட்டினான். 'ஓடு,' 'திரும்பு' 'நில்லு' — என்று அதை அதட்டினான். விறகு வெட்டி ஓட்டினால் எப்படி ஓடுமோ, அது மாதிரியே அந்தக் குதிரை டாம் ஓட்டிய போதும் ஓடியது.

குதிரையின் வேகம் அதிகரித்ததும், டாம், ''மெள்ள, மெள்ள'' என்று கத்தினான். குதிரையின் வேகம் குறைந்தது. அப்போது இரண்டு வழிப்போக்கர்கள் எதிர்ப்பட்டனர். ''வண்டி ஓடுகிறது. வண்டிக்காரனின் சப்தமும் கேட்கிறது. ஆனால், ஆளைக் காணவில்லையே! இதென்ன அதிசயம்!'' என்றான் ஒருவன். ''அதிசயம் தான்! இந்த வண்டியைத் தொடர்ந்து நடப்போமே!'' என்றான் மற்றவன்.

வண்டி காட்டுக்குள் சென்றது. வண்டியைத் தொடர்ந்து போன இருவரும் கடைசியில் விறகு வெட்டியைக் கண்டனர்.

டாம் அப்பாவைப் பார்த்ததும், ''இதோ பாருங்கள் அப்பா! நான் வண்டியைக் கொண்டு வந்துவிட்டேன்! என்னைக் கீழே இறக்கி விடுங்கள்!'' என்று கூச்சலிட்டான்.

அப்பா ஒரு கையால் குதிரையின் காதைப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் தன் பிள்ளையைக் குதிரையின் காதிலிருந்து வெளியே எடுத்தார். கூரையில் இருந்த ஒரு வைக்கோலின் மேல் அவனை வைத்தார். டாம் சந்தோஷமாக உட்கார்ந்து கொண்டான்.

அந்த இரண்டு வழிப்போக்கர்களும் ஆச்சரியத்தால் வாயடைத்து நின்றனர். ''இந்தக் குள்ளனை நாம் விலைக்கு வாங்கலாம். இவனை ஊர் ஊராக ஒரு காட்சிப் பொருளாக எடுத்துப் போனால், கொள்ளைப் பணம் சம்பாதிக்கலாமே,'' என்று முடிவு செய்தனர். பிறகு அவர்கள் விறகு வெட்டியை அணுகினர். ''இந்தப் பொடியனை எங்களிடம் கொடுத்து விடுங்கள். நீங்கள் கேட்கிற விலையைத் தருகிறோம்'' என்றனர்.

''என்ன! டாமை விற்பதா? முடியாது. முடியவே முடியாது'' என்றான் விறகு வெட்டி.

அதைக் கண்ட டாம் மெதுவாகத் தன் அப்பாவின் தோள் மீது ஊர்ந்து ஏறினான்.

''பணத்தை வாங்கிக் கொள் அப்பா. என்னை அவர்களுக்குக் கொடுத்துவிடு. நான் எப்படியாவது திரும்பி வந்துவிடுவேன். கவலைப் படாதே,'' என்று அவர் காதுக்குள் ரகசியமாகச் சொன்னான்.

விறகு வெட்டி ஒரு பெரிய தொகையைக் கேட்டான். உடனே அவர்கள் அந்தப் பணத்தைக் கொடுத்தனர். டாம் அப்பாவிடம் விடைபெற்றுக் கொண்டதும், அவர்கள் டாமை எடுத்துக் கொண்டு புறப்பட்டனர்.

''டாம்! உனக்கு எங்கே உட்காரப் பிடிக்கும்?'' என்று ஒரு வழிப்போக்கன் கேட்டான். அந்த வழிப்போக்கன் ஒரு பெரிய தொப்பி அணிந்திருந்தான். டாம் அதைச் சுட்டிக் காட்டி, ''உன்னுடைய தொப்பியின் விளிம்பில் என்னை வைத்துக் கொள்'' என்று சொன்னான். வழிப்போக்கன் அவ்வாறே செய்தான்.

டாமுக்கு அந்தத் தொப்பியின் விளிம்பு ஒரு வட்டமான நடைபாதை



போல இருந்தது. வழிப்போக்கன் நடந்து போகையில், டாம் அந்த விளிம்பின் மேல் சுற்றிச் சுற்றி வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

மாலை நேரம் இருட்டத் தொடங்கியது. சாலையின் இரு மருங்குகளிலும் காய்ந்த வயல்கள் இருந்தன. அவை நன்றாக உழப்பட்டு ஏர்த் தடங்கள் வரி வரியாகத் தெரிந்தன.

"என்னைக் கீழே இறக்குங்கள்! களைப்பாக இருக்கிறது" என்று கத்தினான் டாம். வழிப்போக்கர்கள் சாலையை விட்டு வயலில் இறங்கி அமர்ந்தனர். தங்கள் தொப்பிகளைக் கழற்றினர். பெரிய தொப்பிக்காரன் தன் தொப்பி விளிம்பிலிருந்து டாமை எடுத்து ஒரு மண்ணாங்கட்டியின் மேல் உட்கார வைத்தான். டாம் அதிலிருந்து கீழே குதித்து ஏர்த்தடங்களின் வழியே ஓடி விளையாடினான். அப்போது ஓர் எலி வளையைக் கண்டான்.

"நண்பர்களே! நான் போய் வருகிறேன். முடிந்தால் என்றைக்காவது ஒரு நாள் சந்திப்போம். வணக்கம்!" என்று உரக்கக் கத்திக் கொண்டே டாம் எலி வளைக்குள் புகுந்து மறைந்தான். வழிப் போக்கர்கள் இருவரும் ஆளுக்கு ஒரு குச்சியை எடுத்துக் கொண்டு எலி வளையைக் குத்தினர். ஆனால், டாம் கிடைக்கவில்லை. அவர்கள் ஏமாற்றத்தோடு தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

அவர்கள் போன பிறகு டாம் வளையை விட்டு வெளியே வந்தான். வயலில் இருந்த மண்ணாங்கட்டிகள் எல்லாம் அவனுக்கு மலைகளாகத் தோன்றின. இருட்டில் நடப்பது கஷ்டமாகவும் இருந்தது; பயமாகவும் இருந்தது. வழியில் காலியான ஒரு பெரிய நத்தைக் கூடு கிடந்தது. நத்தைக் கூட்டில் படுத்துக் கொண்டு இரவைக் கழிக்கலாம் என்று டாம் எண்ணினான்.

அந்த சமயத்தில் இரண்டு திருடர்கள் அங்கே வந்தனர். ஒரு பிரபல பணக்காரன் வீட்டிலிருந்து பொன், வெள்ளிப் பாத்திரங்களைக் கொள்ளையடிக்க அவர்கள் திட்டம் தீட்டினர். டாமின் மூளை வேகமாக வேலை செய்தது. ஒரு தந்திரம் செய்து வயலிலிருந்து தப்பிப் போக எண்ணினான், டாம். திருடர்களைப் பார்த்து, "என்னை

யும் அழைத்துப் போங்கள். உதவியாக இருப்பேன்,'' என்று அலறினான். திருடர்கள் முதலில் திடுக்கிட்டாலும், அந்தப் 'பொடிப் பையன்' பல விதங்களிலும் உதவியாக இருப்பான் என்று எண்ணி, அவனையும் தங்களோடு அழைத்துப் போயினர்.

மூவரும் அந்தப் பணக்காரரின் வீட்டை அடைந்தனர். கதவு உட்புறம் தாழ் இடப்பட்டிருந்தது. வீட்டில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர். டாம் ஜன்னல் வழியாக உள்ளே போனான்.

''இங்குள்ள வெள்ளிப் பாத்திரங்களில் உங்களுக்கு எது வேண்டும்?'' என்று டாம் உரக்கக் கத்தினான். திருடர்கள் அவனை மெதுவாகப் பேசும்படி கூறினர். டாம் மறுபடியும் உரக்கக் கத்தினான்.,


அந்தச் சப்தத்தில் சமையல்காரி விழித்து எழுந்தாள். ஒரு விளக்கை ஏற்றிக் கொண்டு வந்தாள். திருடர்கள் பயந்து தப்பி ஓடினர். டாம் ஓடிப் போய்மாட்டுத்தொழுவத்தில்ஒளிந்து கொண்டான். சமையல்காரி வீடு முழுவதும்தேடினாள். யாரையும்காணவில்லை. அவள் மறுபடியும் தூங்கிப் போய்விட்டாள்.

தொழுவத்தின் மூலையில் இருந்த வைக்கோலின் மீது டாம் படுத்துக் கொண்டான். பொழுது விடிந்த பிறகு அம்மா அப்பாவைப் பார்க்க ஏதாவது ஒரு வழி செய்யலாம் என்று அவன் நினைத்தான். ஆனால், நினைப்பதெல்லாம் அப்படியே நடந்து விடுகிறதா, என்ன? இந்த உலகில் ஒருவன் எத்தனை துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது?

விடியும் முன்னரே சமையல்காரி எழுந்தாள். தொழுவத்திற்குப் போனாள். இரண்டு கைகளாலும், வைக்கோலை அள்ளிப் பசுவுக்குத் தீனி போட்டாள். தூங்கிக் கொண்டிருந்த டாமையும் சேர்த்து அவள் பசுவுக்குப் போட்டுவிட்டாள்!

டாம் கண் விழித்தபோது உண்மையிலேயே அவன் பசுவின் வாய்க்குள் இருந்தான். டாம் யோசனை செய்வதற்குள் பசு அவனைக் கடிக்காமலேயேவிழுங்கிவிட்டது. டாம்பசுவின் வயிற்றுக்குள் தள்ளப்பட்டான்.

டாமுக்கு, தான் எங்கிருக்கிறோம், எப்படி வந்தோம் என்று ஒன்றுமே புரியவில்லை. ''இந்த இடம் ஒரே இருட்டாக இருக்கிறதே! ஜன்னல் வைக்க மறந்து விட்டார்கள் போலிருக்கிறது!'' என்று டாம் எண்ணினான். அந்த 'இருட்டு அறை' அவனுக்குப் பிடிக்கவே இல்லை. மேலும் மேலும் வைக்கோல் உள்ளே வந்து கொண்டே இருந்தது. அவனைச் சுற்றி இருந்த இடம்சுருங்கிக்கொண்டேபோயிற்று.



டாம் பயத்தால் அலறினான். "வைக்கோலைப் போடாதே! வைக்கோலைப் போடாதே! போடாதே என்றால் போடாதே!" என்று அலறினான்.

அந்தச் சமயத்தில் சமையல்காரி வழக்கம்போலப் பால் கறந்து கொண்டிருந்தாள். "வைக்கோல் போடாதே!" என்ற சப்தம் தெளிவாக அவளுடைய காதுகளில் விழுந்தது. "நேற்று இரவு கேட்ட அதே குரல்தான். சந்தேகமே இல்லை," என்று அலறிப் புடைத்துக் கொண்டு அவள் எழுந்தாள். கையிலிருந்த பாத்திரம் உருண்டது. பால் கீழே கொட்டியது.

அவள் எஜமானரின் அறைக்கு ஓடினாள். "ஐயா, ஐயா, நம்முடைய பசு பேசுகிறது!" என்று பதறினாள்.

"உனக்குப் பைத்தியமா என்ன? உளறுகிறாயே?" என்று கேட்டுக் கொண்டே எஜமானர் உண்மையை அறிவதற்காகத் தொழுவத்திற்குப் போனார். அவர் தொழுவத்திற்குள் காலை வைத்தவுடன் "நான் சொல்லுகிறேன். இனிமேல் வைக்கோல் போடாதே! போடாதே என்றால் போடாதே!" என்று கணீரெனப் பசு குரல் கொடுத்தது. பசு டாமை விழுங்கிய விஷயம் யாருக்கும் தெரியாது.

எஜமானர் அதிர்ச்சி அடைந்தார். "எந்த மந்திரவாதியோ பசுவுக்குச் சூனியம் வைத்திருக்கிறான். அதனால் தான் அது பேசுகிறது," என்று அவர் முடிவு செய்தார். வேலையாட்களை அழைத்து, அந்த மாட்டை உடனே கொல்லும்படி உத்தரவிட்டார்.

பாவம், அப்பாவிப் பசு கொல்லப்பட்டது! அதன் வயிற்றுப் பாகம். குப்பை மேட்டில் எறியப்பட்டது.

டாம் தன்னை விடுவித்துக்கொண்டு, வெளியே வர முயன்றான். ஆனால், எளிதில் முடியவில்லை. அவன் கஷ்டப்பட்டுத் தலையை வெளியே நீட்டுவதற்கும், ஒரு புதிய ஆபத்து அவனை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது!

பசியால் வாடி, உடல் மெலிந்த ஓர் ஓநாய் பாய்ந்து வந்தது. டாமையும் சேர்த்து அந்த இறைச்சித் துண்டை அது ஒரே விழுங்காக விழுங்கிவிட்டு ஓடியது!

டாம் சோர்வடையவில்லை. மெதுவாக அந்த ஓநாயிடம் பேச்சுக்கொடுத்தான். "ஓநாய் நண்பா! நான் சொல்லுவதைக் கேட்டால், உனக்கு நல்ல விருந்து கிடைக்கும்!" என்றான் டாம்.

"எங்கே? எங்கே?" ஓநாய் ஆவலோடு கேட்டது.

டாம் ஒரு விலாசத்தைக் குறிப்பிட்டு "நண்பா! நீ அந்த வீட்டுக்குப் போ! நீ பின்புறமுள்ள சாக்கடை வழியாக நுழைந்து போய்ச் சமையல் அறைக்குள் நுழையலாம். பக்கத்திலேயே உக்கிராண அறை இருக்கும். அங்கே ரொட்டி, பழம், மீன், இறைச்சி எல்லாம் நிறைய இருக்கும். நீ பசியாறச் சாப்பிடலாம்!" என்று டாம் கனிவான குரலில் பேசினான். ஆனால், டாம் குறிப்பிட்டது தன் சொந்த அப்பாவின் வீட்டைத்தான்!

பசி பிடித்த ஓநாய் நேராக அந்த வீட்டுக்கு ஓடியது. டாம் சொன்னது போலவே குறுகலான சாக்கடை வழியாக நுழைந்து, சமையலறையைக் கடந்து, உக்கிராண அறைக்குப் போயிற்று. ஓநாய் பல நாட்களாகப் பட்டினி. ஆகவே, அது தன் ஆசைதீர அங்கிருந்த உணவுப் பண்டங்களைத் தின்று தீர்த்தது! வயிறு நிறைந்தது! அதன் காரணமாக ஓநாயால் அது

மாணவ மணிகள்



கல்வித்துறையில் மாணவர்கள் நன்கு கவனம் செலுத்தாததற்குக் காரணம், அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டதுதான் என்ற பழிச் சொல்லை வரவழைக்காதீர்கள். எனக்குத் தெரியும், 'மாணவர்கூட நல்லபொன்முட்டையிடும்வாத்துக்கள்' என்று! அந்த வாத்துக்களின் வயிற்றை அவசரப்பட்டுப் பேராசையில் அறுக்க மாட்டேன். அவை நல்ல பொன் முட்டைகளைத் தேவையான போது, தந்து கொண்டே இருப்பவை.

— அறிஞர் அண்ணா.

வந்ததே. அந்தக் குறுகிய சாக்கடை வழியாகத் திரும்பிப் போக முடிய வில்லை.

டாம் எதிர்பார்த்ததும் அதேதான். உடனே டாம் வாய்க்கு வந்தபடி சத்தம் போடத் தொடங்கினான்.

''வீட்டில் உள்ளவர்கள் தூங்குகிறார்கள். அவர்களை எழுப்பி விடுவாய் போலிருக்கிறதே. கொஞ்சநேரம் அமைதியாக இருக்கிறாயா?'' என்று டாமிடம் கெஞ்சியது ஓநாய்.

''நீ சந்தோஷமாகச் சாப்பிட்டு விட்டாய். எனக்கும் கொஞ்சம் சந்தோஷம் வேண்டாமா?'' என்று சொல்லி விட்டு,

மறுபடியும் டாம் மனம் போனபடி கூச்சல் போட்டான்.

சப்தத்தைக் கேட்டு விறகு வெட்டியும், மனைவியும் எழுந்தனர். சமையலறைக் கதவைத் திறக்காமல் இடுக்கின் வழியாக எட்டிப் பார்த்தனர். அங்கு ஒரு பெரிய ஓநாய் வெளியே வர முயன்றுகொண்டிருந்தது. முதலில் அவர்கள் பயந்தனர். பிறகு, விறகு வெட்டி ஒரு கோடரியை எடுத்தான். மனைவி கையில் ஒரு அரிவாளைக் கொடுத்தான்.

''நான் அதன் தலையில் ஒரு போடு போட்டதும், நீ ஓநாயை இரண்டாகப் பிளந்து விடு!'' என்று மனைவியிடம் சொன்னான்.

அதைக் கேட்டதும், ''அப்பா! அப்பா! ஓநாய் என்னை விழுங்கிவிட்டது. நான் அதன் வயிற்றுக்குள்தான் இருக்கிறேன்! என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று டாம் கத்தினான்.

''நம்முடைய குழந்தை கிடைத்து விட்டான். கடவுள் அருளே அருள்!'' என்று சொல்லி விறகுவெட்டி, மகிழ்ந்தான்.

ஒரே மூச்சில் அவன் ஓநாயின் தலையில் கோடரியால் ஒரு போடு போட்டான். அது உயிரை விட்டதும் அதன் வயிற்றைக் கவனமாகப் பிளந்துகட்டைவிரல்டாமைவெளியே எடுத்தான்!

அப்பா ஆனந்தமாக மகனைக் கட்டி அணைத்தார். உச்சி மோந்தார். அம்மா அவனைக் குளிப்பாட்டி, உடை போட்டு, இனிய உணவுகளை அளித்தாள்.

''இந்த உலகத்தையே விலையாகப் பெற்றாலும், இனி உன்னை விற்க மாட்டோம், டாம்! நீ இல்லாமல் நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா?'' என்று பெற்றோர் கூறினர். டாம் பெருமையாகத் தன் சாகசங்களைச் சொல்லிக்கொண்டிருந்தான்.

பாட்டிக்குப் பல்வலி!

''முன்னைப் போல எங்க பாட்டிக்கு பல்வலி, இப்போ வர்றதில்லே... தெரியுமா?''

''பல்வலியே வர்றதில்லையா...? ஆச்சரியமா இருக்கே... எப்படி?''

''பாட்டிதான் 'பல் செட்' போட்டுக் கிட்டாளே... பிறகு எப்படி பல்வலி வரும்?''

— ஜி. காமராஜன்.



என்ன செய்தாய்?



''உன் தம்பி கழுதை மாதிரி கத்தினானே... அவன் அழுகையை நிறுத்த என்ன செய்தாய்?''

''பேப்பர் ரோஸ்ட், வாங்கிக் கொடுத்தேன்!''

— ஜி. காமராஜன்.

பள்ளிக்கு வந்த மருத்துவர்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



இராமநாதன் படிக்கும் பள்ளிக் கூடத்திற்குப் புகழ்பெற்ற மருத்துவர் ஒருவர் வந்தார். அன்று மாலை மாணவர் மன்றத்தின் சிறப்புக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் அம்மருத்துவ நிபுணர் பேசினார். அவர் சொற்பொழிவு பின்வருமாறு:

நாம் இந்த மாதிரி பிறக்க வேண்டும்; இன்ன வாழ்க்கை வாழ வேண்டும் என்று தீர்மானிக்க முடியாது. அது இறைவனுடைய விருப்பத்தைப் பொறுத்து அமைகிறது. ஆகவே, இந்த உடலும் உயிரும் நமக்குச் சொந்தமில்லை. அவை கடவுள் இட்ட பிச்சை.

உயிர் நம்முடைய உடலில் எத்தனை காலம் இருக்குமென்று தெரியாது. ஆனால், உயிர் தங்கி இருக்கும் உடலை நாம் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம். நம்மால் இயன்றவரை உடலைப் பாதுகாக்க வேண்டும். உடல் அழிந்தால், உயிர்போய் விடும். உயிரைப் பாதுகாக்க, உடம்பைப் பாதுகாக்க வேண்டும்' என்று திருமூலர் கூறினார்.

உடலுக்கு மிகத் தேவையானது உணவு. உணவைக் குறைவாக உண்டால் உடம்பு தளர்ந்து விடும். அதிகமாக உண்டால், நாளடைவில் உடல் பாழாகிவிடும். ஆகவே, நமது தேவைக்குத் தகுந்தவாறு உண்ண வேண்டும். அதாவது, நாம் செய்யும் தொழிலுக்குத் தகுந்தவாறு உண்ண வேண்டும். பசித்த பிறகு சாப்பிட வேண்டும் என்று ஔவைப்பாட்டி கூறுகிறாள். எளிய, சத்தான உணவை உண்ண வேண்டும். கண்ட நேரத்தில் உண்ணக் கூடாது.

உடலுக்குத் தகுந்த வேலை கொடுக்க வேண்டும். உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் செயல்பட வேண்டும். விளையாடலாம். தகுந்த தேகப்பயிற்சி செய்யலாம். அளவுக்கு மீறிச் செய்யக் கூடாது.

மேலும், சுகாதாரமான பழக்க வழக்கங்கள் வேண்டும். தொற்று நோய்கள் மிக எளிதில் நம் உடலைத் தாக்கிக் கெடுத்துவிடும். ஆகவே, உடலைச் சுகாதாரமான சூழ்நிலையில் வைத்திருக்க வேண்டும். காப்பி, தேயிலை போன்ற பானங்களை அடிக்கடி குடிக்கக் கூடாது.

நம்முடைய உடல் மனத்தைப் பொறுத்து அமைகிறது. மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். உணர்ச்சி வசப்படக்கூடாது. நாவடக்கம் வேண்டும். உணவுக்கும் நாவடக்கம் வேண்டும்; பேச்சிற்கும் நாவடக்கம் வேண்டும். தன்னடக்கத்தைப் பழகிவிட்டால் மற்றவை தாமாக அமையும்.

இந்த வகைகளில் பழகிவிட்டால், ஆரோக்கியம் தானாக அமையும். இறைவன் கட்டளை இருந்தால் நீண்ட காலம் வாழ முடியும்.

— இவ்வாறு அந்த மருத்துவ நிபுணர் பேசினார்.

திருக்குறள் :

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.



வளையப்பந்தில் விற்பன்னர்கள்!

'டெனிகாய்ட்' என்ற ஆட்டம் டென்னிஸ், கோயட்ஸ் என்ற இரு ஆட்டங்களிலிருந்து மருவி வந்த ஒரு புதிய விளையாட்டு. இங்கிலாந்தில் 'கோயட்ஸ்' என்ற ஆட்டம் பிராபல்யமாக ஆதிகாலத்தில் விளங்கியிருக்கிறது. ஓர் இரும்பு வளையத்தை ஓர் இரும்புக் கம்பியில் விழுமாறு நாலரை அடி தூரத்திலிருந்து எறிந்து ஆடப்படும் ஆட்டத்துக்குத்தான் 'கோயட்ஸ்' என்று பெயர்.

'டெனிகாய்ட்' என்பது ரப்பராலான வளையப் பந்து கொண்டு விளையாடுவதுதான். இந்த டெனிகாய்ட்டின் மைதானம் 40 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்டது. இந்த ஆட்டத்துக்கு ஆறு அடி உயரத்தில் வலை பொருத்தப்பட்டிருக்கும். இந்த ஆட்டத்தில் தனியர், இரட்டையர் போட்டிகள் உண்டு. ஓர் ஆட்ட மொத்த எண்ணிக்கை பதினைந்து. ஒரு குழு வெற்றியடைய வேண்டுமானால் மூன்று ஆட்டங்களில் இரண்டை வெல்ல வேண்டும். இந்த டென்னிகாய்ட் ஆட்டத்தில் ஏதாவது ஒரு கையைத்தான் பயன்படுத்த வேண்டும். டென்னிகாய்டுக்கு 'ரிங் டென்னிஸ்' என்று மற்றொரு திருநாமமும் இருக்கிறது.

மலர்விழி ஷீலா என்ற சிறுமி 1981—82ம் ஆண்டில் தமிழக ஜூனியர் சாம்பியனாகத் தனியர், இரட்டையர் போட்டியில் தேர்வு பெற்றிருக்கிறார். 1984ம் வருஷம் மலர்விழி ஷீலா கொச்சியில் நடைபெற்றமூன்று

வது ஜூனியர் தேசியப் போட்டியில் மூன்று பரிசுகள் பெற்றுப் புகழ் ஏணியில் சுடர் விட்டுப் பிரகாசித்தாள். இந்தச் சிறுமிக்கு 1983—84ம் ஆண்டில் மாமல்லன் பரிசு கிடைத்தது. 1982—84ம் ஆண்டுகளில் பாடியாலாவிலுள்ள தேசிய விளையாட்டுக் கழகம் வருஷத்துக்கு 900 ரூபாய் ஸ்காலர்ஷிப் வழங்கி இவளுக்கு ஆட்டத் துறையில் ஊக்கத்தை ஊட்டியது. மலர்விழி ஷீலாவுக்கு டென்னிகாய்ட் விளையாட்டில் பயிற்சி அளித்து பெருமை தேட உதவியவர் 'கோச்' போத்தையா.

தமிழகத்தில் வளையப் பந்துக்குப் பிராபல்யம் தேடித் தருவதற்கு உதவியவர் சங்கு ஸையத் அப்துல் காதர். அதுமட்டுமல்ல; இந்த விளையாட்டுக்கு அரசின் அங்கீகாரம் பெற்றுத் தந்தவரும் அவர்தான். 1965ம் ஆண்டிலிருந்து தலைவராக இருந்து 1980ம் ஆண்டு வரை அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். தமிழக வளையப் பந்து கழகத்தின் தலைவராகத் தற்சமயம் பணியாற்றி வருபவர் மல்ஹான். தமிழக வளையப் பந்து கழகத்தின் காரியதரிசி ஜி. ராமலிங்கம்.

ஹரியானாவில் நடைபெற்ற அகில இந்திய வளையப் பந்து போட்டியில் தமிழகக் குழுவுக்குக் கிடைத்த வெற்றி தமிழகத்தில் ஆட்டம் உத்வேகத்துடன் பெருக உதவியது. டீம் சாம்பியன் போட்டியில் தமிழகக் குழு வென்றது. இந்தத் தேசிய வளையப் பந்து போட்டியில் தேசிய சாம்பியன் பரமேசுவரி. இவர் தமிழக டென்னிகாய்ட் கழகக் காரியதரிசி ராமலிங்கத்தின் புதல்வி. மலர்விழி ஷீலா தேசிய அளவில் மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

பள்ளிச் சிறுவர் சிறுமியருக்கு வளையப் பந்து ஆட்டத்தில் மோகம் பெருகி வருகிறது. சென்னை மாவட்ட வளையப் பந்து கழகம் நடத்திய போட்டியில் இறுதி ஆட்டத்தில் சென்னை சேவாசதன் மாணவிகளும் தாராபூர் லோகநாதன் மேல்நிலைப் பள்ளி மாணவிகளும் கடுமையாக வெற்றிக்கு ஆடினர். இறுதி வெற்றி பெற்ற சிறுமிகள் லதாவும், மகாலக்ஷ்மியும், ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றனர். சிறுமி லதாவும், மகாலக்ஷ்மியும் சேவாசதன் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாவது வகுப்பில் பயில்கின்றனர். மாணவிகளுக்காக நடத்தப்பட்ட முதல் சாம்பியன் போட்டியில் அவர்கள் ஜயித்தது தனிப் பெருமை.

சிறுமிகள் லதாவும், மகாலக்ஷ்மியும் வெற்றிக் களிப்பில் மூழ்கிய தருணத்தில் பேட்டி கண்டபோது அவர்கள் கொடுத்த விவரம்:

"எங்கள் சேவாசதன் பள்ளித் தலைமை ஆசிரியரும், தாளாளரும் விளையாட்டுத் துறையில் ஆர்வம் மிக்கவர்கள். எங்கள் உடற்பயிற்சி ஆசிரியை அசோகா டென்னிகாய்ட்டில் விளையாட ஊக்கம் தந்தார். திறமையான பயிற்சி அளித்தவர் கோச் போத்தையா. மாவட்ட அளவில் வென்ற நாங்கள் இனி மாநில வெற்றிகளுக்குப் பாடுபடுவோம்!"

ஊக்கமும் உற்சாகமும் இருப்பதால் சிறுமிகள் லதாவும் மகாலக்ஷ்மியும் பல வெற்றிகளை மாநிலத்திலும் தேசிய அளவிலும் பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்ப்போம்!



குண்டுமணி

திருந்திய மாணவன்

த.கி. இராமசாமி



'நாடகத்தில் நடிப்பதற்கு யாருக்கு இஷ்டமோ — அவர்களெல்லாம் கையைத் தூக்குங்கள்' — என்று ஆசிரியர் சொன்னதைக் கேட்டதும் எல்லோரையும் முந்திக் கொண்டு தன் கையைத் தூக்கினான் மணி.

ஆசிரியர் மணியை ஆவலுடன் பார்த்தார்.

'மணி — உன் குணத்துக்கு இந்த நாடகம் சரிப்பட்டு வராதே' — என்றார் வேண்டுமென்றே.

மணிக்கு முகம் சுண்டிப் போயிற்று. கூடவே கோபமும் வந்தது. விருட்டென்று தன் இருக்கையில் போய் அமர்ந்தான்.

"அடடா... அதற்குள் உனக்குக் கோபம் வந்துவிட்டதே. இப்பொழுதே இப்படிக் கோபப்பட்டால், எப்படி 'திருந்திய மாணவ'னை நாடகத்தில் நடிக்கப் போகிறாய்? என்று சொல்லிக்கொண்டே அவனருகே போய் நின்று, அவன் தோளைத் தட்டினார்.

மணிக்கு ஒருபுறம் வெட்கமாகவும், மறுபுறம் சந்தோஷமாகவும் இருந்தது.

"நான் நன்றாகவே நடிப்பேன் சார்" என்றான், தலையைக் குனிந்து கொண்டு.

"அதுக்குத்தானே உன்னை அந்த நாடகத்தில் போட்டிருக்கேன். இதோ பாரு... அதுலே ராமுவாக நடிப்பது ரொம்ப கஷ்டம். உன்னாலே முடியுமா? பார்..."

"கண்டிப்பாகச் செய்கிறேன் சார்."

"இதோ பார் மணி. இந்த வருஷம் நடத்தப் போற நம்ப ஸ்கூல் நாடகங்களிலே முதல் பரிசு யார் தரப் போறா தெரியுமா?"

"யாரு சார்...?" எல்லா மாணவர்களும் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

"டெல்லியிலிருந்து கல்வி மந்திரி வரப் போறார். அவர்தான் தரப் போறார். இதை டீ. வி. யிலே கூடக் காட்டப் போறாங்க..."

"அப்படியா சார்?"

"ஆமாம். அதனாலே நம்ப ஸ்கூல்லே நடத்தற நாடகங்களில் 'திருந்திய மாணவன்' நாடகம் முதல் பரிசு வாங்கணும்னு, எல்லா மாணவர்களும் நன்றாக நடிக்கணும். அதிலும் குறிப்பாக 'ராமு'வின் பாத்திரம் இருக்கே அது தான் உயிர்நாடி. அந்த ராமுவாக..."

"நானே நடிக்கிறேன் சார்" — அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் மணி. ஆசிரியர் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார். மற்ற மாணவர்களுக்குக் கொஞ்சம் பொறாமையாகத் தான் இருந்தது.

சரத்பாபுவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

"மணி மட்டும் நாடகத்தில் நடிக்கலாமா — நானும் நடிக்கக் கூடாதா — தினமும் டீ. வி. யிலே எத்தனை டிராமா பார்க்கிறோம் — அம்மா முன்னாலே சிவாஜி மாதிரி, ரஜினி மாதிரி, நடிச்சுக் காண்பிச்சிருக்கோமே — எதிர்த்த வீடு ஆறுமுகம் கூட ஒரு நாளைக்கு என் நடிப்பைப் பார்த்துவிட்டு கைதட்டி ஐஸ்கிரீம் கூட வாங்கிக் கொடுத்தாரே..."

— என்றெல்லாம் நினைத்தான்.

அன்றைக்குத் தானும் நாடகத்தில் நடிக்க வேண்டுமென்று நினைத்து வகுப்பறையில் கையைத் தூக்கினான் சரத்பாபு.

அவனுக்குக் கீச்சுக்குரலாக இருப்பதாலும், விரைவில் தேசிய அளவில் நடக்கவிருக்கும் குழந்தைகளது ஓவியப் போட்டியில் சரத்பாபு கலந்து கொண்டால் நல்லது என்று அவனது ஆசிரியர் நினைத்தது. ஆலும் சரத்பாபுவைச் சமாதானம் பண்ணி, நாடகத்திலிருந்து விலக்கி விட்டார்.

முதலில் 'சரி' என்று சரத்பாபு ஆசிரியர் முன்பு தலையை ஆட்டினான்.

ஆனால் —

"மணி மட்டும் மந்திரியிடம் பரிசு வாங்கும்பொழுது, மணியை விட கெட்டிக்காரனை நானும் மந்திரியிடம் பரிசு வாங்கக் கூடாதா?" என்ற ஏக்கம் மணியைச் சுட்டெரித்தது.

வீட்டில் போய் அம்மாவிடம் சொல்லி அழுதான்.

சரத்பாபுவின் ஏக்கத்தைக் கண்டு, அவனைத் தேற்றிக் கொண்டிருந்தாள்.

"நாடகத்திலே நீ நடிக்காட்டா என்ன — நன்றாகப் படித்தால் பிரதம மந்திரியே உனக்கு நேரில வந்து பரிசு கொடுப்பார். நீதான் ஓவியப் போட்டியிலே கலந்து கொள்ள டெல்லிக்குப் போறியே — கண்டிப்பாக உனக்குத்தான் பர்ஸ்ட் பிரைஸ்... தைரியமாக இரு. நம்பிக்கையைக் கைவிடாதே."

சிவாஜிக்கு அவனது தாயார் தைரியம் கொடுத்த மாதிரி, சரத்பாபுவுக்கு அவனது தாய் சமாதானத்தைத் தந்து ஊக்கம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.



இருந்தாலும் சரத்பாபுவுக்கு உள்ளூர ஏக்கம் இருந்து கொண்டே இருந்தது.

இதற்கிடையில் மணிக்கு நாடகத்தில் நல்ல வேஷம் கிடைத்ததால் அனைப் பள்ளியில் தினமும் எல்லோர் முன்னிலையிலும் நடித்து — கைத்தட்டல் வாங்கிக் கொண்டிருந்தான்.

சரத்பாபுவுக்கு இது மனத்துக்குக் கஷ்டமாக இருந்தது.

விழா நடக்க இன்னும் பத்து நாளே இருந்தது. தலைமை ஆசிரியர் வகுப்பு ஆசிரியர்கள் அனைவரும் இயங்கிக் கொண்டிருந்தனர். பள்ளி முழுவதும் வெள்ளை அடிக்கப்பட்டு, தோரணங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

'கிளாஸ் ரூம்' சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை அந்தந்த வகுப்பு மானிட்டர்கள் கவனித்துக் கொண்டனர். மைதானத்திலுள்ள புல் பூண்டுகளை வெட்டிக் கொண்டிருந்தார்கள் சிலர். பள்ளி வாசலில் வரவேற்பு வளைவு, நாடகம் நடத்துவதற்கான அரங்கம் எல்லாம் 'ஜரூராக' இயங்கிக் கொண்டிருந்தன.

போதாக்குறைக்கு சுவரொட்டிகள் வீதிகளில் அங்கங்கே ஒட்டப்பட்டு நாடகங்களைப் பற்றி விளம்பரமும் போடப்பட்டன.


இவற்றையெல்லாம் சரத்பாபு பார்க்கும்பொழுது — மணிக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டமா?' என்று எண்ணிக் கொண்டான்.

இயல்பாகவே மணி சுமாராகத்தான் படிப்பான். ஆனால், திமிர்த்தனம் அதிகம். சக மாணவர்களைக் கிண்டல் பண்ணுவான். கண்ணாடி போட்டுக் கொண்டு வரும் மாணவர்களிடம், கண்ணாடியைப் பிடுங்கிக் கொண்டு அவர்கள் திண்டாடுவதை வேடிக்கை பார்ப்பான்.

யாராவது தப்பித் தவறி டிபன் பாக்ஸை கிளாஸில் வைத்துவிட்டு வெளியே போயிருந்தால் — யாருக்கும் தெரியாமல் அந்த டிபனைக் காலி பண்ணுவான்.

குறும்புக்காரப்பையன் என்று மணியைப் பற்றி எல்லோரும் சொல்வார்கள். அதோடு கோபக்காரனும்கூட.

அவனது அப்பா மணிக்குஅளவுக்கு





இட்டிலி! சட்டினி! சட்டினி!

நெல்லை. ஆ. கணபதி

இட்டிலி சட்டினி என்பதிலே உள்ள
இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றும்!
இரண்டாம் எழுத்துகள் ஒன்றிவருவதோ
எதுகைகள் ஆகுமாம்! என்றும்!

சட்டினி சாம்பார் என்பதிலோ முதல்
தலைஎழுத்துகள் ஒன்றும்!
தலைஎழுத்துகள் ஒன்றிவருவது
தான் கவிமோனைகள் என்றும்!

ஒட்டுமொத்தம் உள்ள வார்த்தை உறுப்புகள்
ஒவ்வொன்றும் எழுத்துகள் ஆகும்!
ஒன்றுஇரண்டெனச் சேர்ந்திடும்போ(து)
அவை
ஓரசை! ஈரசை யாகும்!

கட்டியபூக்களாய் அசைகள் இணைந்துதான்
காண்பதுசீர்எனும் சேர்ப்பு!
காலமெல்லாம்எழுத்(து)! அசை! சீர்!
இணைந்துநாம்
கவிதைபுனைவதே யாப்பு!

பட்டுடல்மேனியோர் அழகுடன்தோன்றினும்
பட்டு அணிந்(து)பெண் மணிகள்
பற்பலபொன்நகை அணிவதுபோல்நயம்
'பாடலில்சேர்ப்பதே அணிகள்!

தட்டுத்தடுமாறி விழ்ந்தும்எழுந்துசெய்
தான்துணி உடுத்திடப் பழகும்!
தமிழின்இலக்கணம்! பழகப்பழகத்தான்
தன்மனம்போல்இடர் விலகும்!

மீறிச் செல்லம் கொடுத்ததால் — மணி வித்தியாசமாக வளர்ந்து வந்தான்.

இதற்கு நேர்மாறான குணங்களைக் கொண்டவன் சரத்பாபு. நன்றாகப் படிப்பான், ஓவியம் தீட்டுவதில் அவன் மிகவும் கெட்டிக்காரன். கற்பனையும் கலைவண்ணமும் சரத்பாபுவுக்கு இயற்கையாக இருந்ததால் — தமிழ் நாட்டிலிருந்து அனுப்பப்படும் 'தேசிய ஓவியப் போட்டி'க்கு சரத்பாபுவை, அவனது பள்ளித் தலைமை ஆசிரியர் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

சரத்பாபுவுக்குத் தான் டெல்லிக்குப் போகப்போகிறோம் என்ற சந்தோஷத்தைவிட தன் பள்ளியில் நடக்கும் நாடகத்தில் கலந்து கொள்ளவில்லையே என்ற ஏக்கம்தான் இருந்தது.

அரைகுறை மனத்தோடு அன்றைக்குப் பள்ளிக்குச் சென்றதும் — சரத்பாபுவைத் தலைமை ஆசிரியர் அழைத்தார்.

"இன்னும் இரண்டு நாளில் நீ டெல்லிக்குச் செல்ல வேண்டும். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டேன். அப்பாவிடம் சொல்லி விடு. இந்த ஓவியப் போட்டியில் நீ வெற்றி பெற்றால் — பள்ளிக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?" — என்று சொன்னார்.

என்றைக்கு டெல்லியில் ஓவியப் போட்டி நடக்கிறதோ — அன்றைக்குத் தான் தன் பள்ளியிலும் ஆண்டு விழா.

என்பதைத் தெரிந்துகொண்ட சரத்பாபு ரொம்பவும் 'டல்லாகி'ப்

போனான். இருப்பினும் மனத்தைத் தேற்றிக் கொண்டு, தமிழகத்திலிருந்து வந்த மற்றப் பள்ளி மாணவர்களோடும், தக்க துணை யோடும் டெல்லிக்குப் பயணமானான். தலைமை ஆசிரியரும் — வகுப்பு ஆசிரியரும் ஸ்டேஷனுக்கு வந்து வழி அனுப்பி வைத்தார்கள்.

டெல்லிக்குச் சென்றதும் சரத்பாபு குஷியாக மாறிவிட்டான். தன்னுடன் பயணம் செய்த மாணவ — மாணவிகளோடு சந்தோஷமாகப் பழகினான். தன் ஓவியத்தைப் பலரிடம் காட்டினான். அவர்களும் சரத்பாபுவின் கைவண்ணத்தைக் கண்டு ஆச்சரியப் பட்டனர்.

இந்த சந்தோஷம், சரத்பாபுவின் மனத்திலிருந்த நாடக ஏக்கத்தையும் — மணி மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியையும் மறக்க வைத்தது.

போட்டியில் எல்லா மாநிலங்களிலுமுள்ள பள்ளிகளைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் மாணவ—மாணவிகள் கலந்து கொண்டனர். இது நேரிடையாக நடக்கும் போட்டியாதலால் — தேசிய அளவில் பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

நம்பிக்கையோடும் திறமையோடும் ஓவியங்களைத் தீட்டிய சரத்பாபுவின் ஓவியம் தேசிய அளவில் முதல் பரிசு பெற்றது. சரத்பாபுவுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

அன்றைக்கு மாலையில் நடந்த விழாவில் பிரதம மந்திரியே சரத்பாபுவுக்கு முதல் பரிசு வழங்கினார். நூற்றுக் கணக்கான கேமிராக்கள், சரத்பாபுவைபுகைப்படம்எடுத்தன. டெலிவிஷன்காரர்கள் சரத்பாபு பரிசு வாங்குவதை டீ. வி. யில் நேரடியாக ஒளிபரப்பினார்கள்.

சரத்பாபு சந்தோஷத்தால் திக்குமுக்காடிப் போனான். அவனது பள்ளிக்கு தேசிய அளவில் கிடைத்த பாராட்டு, யாருக்குமே கிடைக்காத ஒன்று.

'மணியின் மீது பொறாமைப்பட்டோமே— அன்றைக்கு அம்மா சொன்னது எவ்வளவு சரியாகப் போயிற்று. பிரதம மந்திரியிடமே நீ பரிசு வாங்கப் போகிறாய் என்று சொன்னாளே!''

— என்றெல்லாம் எண்ணிக் கொண்டான்.

டெல்லியிலிருந்து ஊர் திரும்பிய சரத்பாபுவுக்கு ஊரெங்கும் பலத்த வரவேற்பு. அவனுடைய அம்மாவும் அப்பாவும் டெலிவிஷனில், அவன் பிரதமரிடம் பரிசு வாங்குவதைப் பார்த்ததாகக்கூறி அவனைப் பாராட்டினார்கள். தலைமை ஆசிரியர் அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். பள்ளியில் அவன் ஹீரோவாகத் திகழ்ந்தான்.

அப்பொழுது சரத்பாபுவின் பள்ளி ஆசிரியர், 'சரத்— அன்றைக்கு நடந்த பள்ளி விழாவுக்கு டெல்லி மந்திரி வரவே இல்லை. மணிக்கும் உடம்பு சரியில்லாததால் 'திருந்திய மாணவன்' நாடகம் நின்று போயிற்று'' என்றார்!

'தன்னைத் திருத்தவே ஆண்டவன் நடத்திய நாடகமா?'' என்று எண்ணிக் கொண்டான் சரத்பாபு. மணியின் மீது சரத்பாபுவுக்கு இப்பொழுது அனுதாபம்தான் ஏற்பட்டது.

பாரதி புதிர் விடை

கோயிற் பூசை செய்வோர் — சிலையைக்
கொண்டு விற்றல் போலும்;
வாயில் காத்து நிற்போன் — வீட்டை
வைத்திழத்தல் போலும்.

ஆயிரங்களான — நீதி
அவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் — சிச்சி
சிறிய செய்கை செய்தான்.

நிலாக் கிண்ணத்தில் பால் ஐஸ்!

பல்லவன்



நீல வான வெளியிலே
  நிலாக்கிண்ணம் மீதிலே
பால்ஐஸ் இருக்குது!
  பார்க்க ஓடி வாருங்கள்!

சீக்கிரமாய் வாருங்கள்!
  சிறுவர் ஒன்று சேருங்கள்!
நாக்கில் நீரும் ஊறுது!
  நழுவிச் சொல்லும் ஒழுகுது!

பருக ஆசை பெருகுது!
  பறக்க மனம் துடிக்குது!
உருகிவிடப் போகுது!
  உடனே ஓடி வாருங்கள்!

சொட்டுச் சொட்டாய் வானெலாம்
  சிந்திவிட்ட துளியெலாம்
தொட்டுத் தொட்டுச் சுவைக்கலாம்!
  துட்டும் தேவை இல்லையே!

அதிக மதிப்பெண் பெறுபவன்
  அறிவியலில் சிறந்தவன்
மதிப்புக்குரிய சிட்டுதான்
  பயணத் திட்டம் வகுக்கிறான்!

தொட்டுவிடும் தூரம்தான்!
  தயங்க வேண்டாம் யாரும்தான்!
சிட்டு அண்ணன் தலைமையில்
  கிளம்ப வேண்டும் நாமெல்லாம்!

சிட்டக் சிட்டப் போகலாம்!
  கிடைக்கும் ஏவுக் கணையெலாம்!
கொட்டக் கொட்ட விழிக்கலாம்!
  குனிந்தே உலகைப் பார்க்கலாம்!

பறந்து வானில் திரியலாம்!
  பயமே இல்லை நெஞ்செலாம்!
சிறுவர் சேர்ந்தால் விண்ணெலாம்
  செய்தி பரவும் உலகெலாம்!

திட்டம் போட்ட சிட்டெங்கே?
  திசையும் வெளுத்து விட்டதே!
பட்டப் பகலும் ஆனதே!
  பால் ஐஸூம் போனதே!

நல்லமனம் வேண்டும்



ஆர். பரிமளா ராஜேந்திரன்

வானத்துச் சூரியன் விடைபெற்றுக் கொள்ள, சந்திரன் மெல்ல மெல்லத் தாழ்ந்து வந்தது.

'வாசலில் உட்கார்ந்திருந்த ராஜா முகத்தை உம்மென்று கோபமாக வைத்திருந்தான்.

அங்கு வந்த ராஜாவின் அம்மா மரகதம், ''என்ன ராஜா உன் பிறந்த நாளும் அதுவுமா இப்படியா இருக்கிறது? உனக்கு என்ன ஆச்சு? உனக்குப் பிடித்த பலகாரமெல்லாம் செய்து, உன் இஷ்டப்படி உன் நண்பர்களையெல்லாம் அழைத்து வந்து விருந்து வைத்தோமே... அப்புறம் என்னடா?'' — வாஞ்சையுடன் மகன் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

''நண்பர்களை அழைத்தது இருக்கட்டும். அந்த முருகுப் பயல் டிரஸ்ஸைப் பார்த்தியா?''

''ஓ, நம்ம தாயம்மா மகன் முருகுவைச் சொல்றியா? அவனுக்கும் இன்னைக்குத்தான் பிறந்தநாளாம். போன வாரம் தாயம்மா சொன்னா... பாவம், நல்ல பையன்... அதுவும் தாயம்மா நம்ம வீட்டுக்காக எவ்வளவு நாளா உழைக்கிறாள், இல்லையா...? அதனாலே உன்னோட அப்பா முருகுவுக்கும் புது டிரஸ் எடுத்துக் கொடுத்தாங்க. இதிலே உனக்கு என்னடா வருத்தம்?''

''புது டிரஸ் எடுத்தது சரி... அதுக்காக எனக்கு எடுத்த மாதிரியே ஒரே கலர்லே..,. ஒரே துணியிலே எடுத்துத் தரணுமா? நானும் அவனும் ஒண்ணா?'' — கோபத்துடன் கேட்டான்.

''என்ன ராஜா இது? மனிதர்களுக்குள்ளே என்ன பேதம்? ஏழைன்னு நாம் யாரையும் கேவலமாப் பேசக் கூடாது. அவனும் உன்னைப் போல ஒரு பையன். அவங்க அம்மாவுக்கு ஒரே மகன். அவங்க ஏழ்மை நிலையிலே இருக்காங்கங்கிறதுக்காக நாம அவங்களை மட்டமாகவோ, ஏளனமாகவோ நினைக்கக் கூடாது. இந்த எண்ணமெல்லாம் உனக்கு வரக் கூடாது ராஜா. அவனையும் உன் சினேகிதனா நினைக்கணும்'' மகனுக்குப் பல விதத்தில் அறிவுரை கூறினாள் மரகதம்.

ஆனால், அதையெல்லாம் கேட்கும் நிலையில் ராஜா இல்லை. ஆனாலும், 'இந்த அப்பா ரொம்ப மோசம்.

என்னைப்போலவே அவனுக்கும்விலை உயர்ந்த துணியில் டிரஸ் எடுத்துக் கொடுத்து, அவனையும் விருந்தில் கலந்துக்கச் செய்து என்னை அவமானப் படுத்தி விட்டார்களே... சேகரும் என்னைப் பார்த்து, "என்ன ராஜா, உங்க வீட்டில் நீயும் ஒண்ணு, வேலைக்காரி பையனும் ஒண்ணுதானா? உனக்குச் சமமாக அவனுக்கும் டிரஸ் எடுத்துக் கொடுத்து விருந்திலே உன்னோட கலந்துக்கும்படி சொல்லியிருக்காங்களே!' ன்னு கேட்டாளே.

ராஜாவுக்கு நினைக்க நினைக்க அவமானமாக இருந்தது.

கோபத்துடன் இரவு ஒன்றும் சாப்பிடாமலே படுத்துக்கொண்டான்.

'மகனைச் சிறிது சிறிதாகத்தான் திருத்த வேண்டும். அவன் மனத்திலிருக்கும் ஏழை, பணக்காரன் என்ற எண்ணத்தையே மாற்ற வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டாள் மரகதம்.

பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தான் ராஜா. இன்றுதான் கடைசிப் பரீட்சை. இன்றுடன் பள்ளிக்கு விடுமுறை விட்டுவிடுவார்கள். மனத்தில் ஒரே சந்தோஷமாக இருந்தது. அங்கு வந்த அம்மாவுடன் ஏதாவது பேசவேண்டும் போல் தோன்றியது.

"அப்பா எங்கேம்மா?" என்று கேட்டான்.

"இன்னிக்கு சனிக்கிழமை. கம்பெனி விடுமுறை இல்லையா... அவங்க சினேகிதர் பலவேசம் மாமாவைப் பார்க்க ஆவடி வரைக்கும் போயிருக்காங்க. நீ சீக்கிரம் படிச்சிட்டு, டிரஸ் பண்ணிக்கோ... ஸ்கூல் பஸ் வந்திடும்" — என்று மகனிடம் சொல்லிக் கொண்டே வேலைகளைக் கவனிக்க உள்ளே சென்றாள்.

பின்புறம் தாயம்மா பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். முருகு தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான்.

அங்கு வந்த மரகதம், "என்ன முருகு, ஸ்கூலுக்குப் போகலையா?" என்று அவனைக் கேட்டாள்.

"எனக்குப் பரீட்சை முடிந்து விடுமுறை விட்டாச்சும்மா..." — பதில் கூறினான் முருகு.

"ஏதோ உங்க உதவியாலே அவன் இவ்வளவு தூரம் படிக்கிறான்... நீங்க அவனையும் உங்க பிள்ளையா நினைச்சு, நடந்துக்கிறீங்க" தாயம்மா கூறினாள்.

"நீ ஒண்ணு தாயம்மா... நீ எனக்கு ஒருவிதத்திலே ஒத்தாசையா இருக்கே.. நான் அதுமாதிரி உனக்கு உதவியா இருக்கேன். அவ்வளவுதான். இதைப் போய் பெரிசா பேசிக்கிட்டு..."

குளிப்பதற்காகப் பின்புறம் வந்த ராஜா, இவர்கள் உரையாடல்களைக் கேட்டு, "சே... இந்த அம்மா ரொம்ப மோசம். வேலைக்காரங்களுடன் சரி சமமாப் பேசிக்கிட்டு இருக்காங்க.." மனத்தில் முணுமுணுத்தவாறு சென்றான்.

அன்று மாலை ஸ்கூல் பஸ்ஸை விட்டு இறங்கியவன், சந்தோஷமாக வீட்டை நோக்கி நடந்தான். "இன்றிலிருந்து பள்ளிக்கு விடுமுறை. ஜாலியாக விளையாடலாம். பக்கத்து வீட்டில் T. V. பார்க்கலாம். அம்மா, அப்பாவுடன் சினிமாவுக்குச் செல்லலாம்," கற்பனை பண்ணியபடியே வந்தவன், வீட்டுவாசலில்பூட்டுத்தொங்குவதைப் பார்த்துத் திகைத்தான்.

அதற்குள் அங்கு அழுத கண்களுடன் வந்த முருகு, "ராஜா, அப்பாவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆகி ஆஸ்பத்திரியில் இருக்காங்க. அம்மா எல்லாரும் அங்குதான் போயிருக்காங்க.. வா... நாமும் போகலாம்," என்றான்.

"ஐயோ! அப்பா...!" அழுது அரற்றியபடியே அவன் முருகுவுடன் ஓட்டமும், நடையுமாகச் சென்றான்.

அழுதழுது சிவந்த முகத்துடன் ஆஸ்பத்திரி வராண்டாவில் உட்கார்ந்திருந்த அம்மாவைக் கண்டதும், ராஜாவினால் துக்கத்தை அடக்க முடியவில்லை. ஓடிச் சென்று அம்மாவைக் கட்டிக் கொண்டு கதறினான்.

"அம்மா... அம்மா... அப்பா இப்போ எப்படி இருக்காரு...?"

"ஒண்ணுமில்லே ராஜா... கவலைப் படாதே... அப்பாவுக்கு கையிலே அடி பட்டு அட்மிஷன் பண்ணியாச்சு... ஆபத்து ஒண்ணுமில்லே... இன்னும்

கொஞ்ச நேரத்திலே நாம் போய்ப் பார்க்கலாம்...'' மகனுக்கு ஆறுதல் கூறினாள் மரகதம்.

''தக்க சமயத்திலே தாயம்மா எனக்கு ரொம்ப உதவியா இருந்தா. அப்பாவுக்கு அடிபட்டு, ஆபரேஷன் பண்ணினால்தான் பிழைப்பார்ங்கிற நிலைமையிலே எனக்குக் கையும் ஓடல்லே... காலும் ஓடல்லே... கடவுளே என் மாங்கல்யத்தைக் காப்பாத்துன்னு கதறத்தான் தெரிஞ்சுது.

"வீட்டிலேயும் அவ்வளவு பணம் இல்லே. நான் கேட்காதபோதே தாயம்மா அவளுடைய ஆஸ்தின்னு, வெச்சிருந்த ரெண்டு பவுன் சங்கிலியை வித்து ரெண்டாயிரத்து ஐந்நூறு. ரூபாய் கொண்டு வந்து கொடுத்து, ஆபரேஷன் உடனே நடக்க உதவியா இருந்தா. அப்பாவுக்கு நல்லபடியா ஆனவுடனே, பாங்கிலிருந்து பணம் எடுத்து அவளுக்குக் கொடுத்திடனும். ஆனா... அவ சமயத்திலே செஞ்ச இந்த உதவியை என்னைக்குமே மறக்கக் கூடாது, ராஜா...

தாய் கூறியவற்றைக் கேட்ட ராஜா. மனம் கசிந்தான். ''எவ்வளவு நல்லவள் இந்தத் தாயம்மா! நான் இவ்வளவு நாளும், ஏழைங்கிற ஒரே காரணத்திற்காக தாயம்மாவையும், முருகுவையும் அவ்வளவு வெறுப்போடு நடந்துக்கிட்டேன்! உண்மையான அன்போடே, அவ்வளவு பெரிய உதவி செஞ்சிருக்காங்க. ஏழையா இருந்தாலும், பணக்காரனா இருந்தாலும் நல்ல மனசுதான் மனிதனுக்கு முக்கியம்... என்பது தெள்ள தெளிவாக இப்பத்தான் எனக்குப் புரியுது.''

உடனே ராஜா, தாயம்மா காலில் விழுந்து வணங்கி, 'தாயம்மா என்னை மன்னிச்சிடு. உன்னை இவ்வளவு நாளும் ஒரு மனுஷியாக நான் நினைச்சதில்லே. என் செய்கைக்காக வெட்கப்படறேன்; வேதனைப்படறேன் தாயம்மா...'' என்று கண்களில் நீர் வழியக் கூறினான் ராஜா.


''என்ன தம்பி இது... உங்க அம்மாவும் அப்பாவும் எங்க மேலே வச்சிருக்கிற அன்புக்கு இதைக் கூடச் செய்யலேன்னா நாங்க மனுஷங்களா இருக்கவே தகுதியில்லாமே போயிடுவோமே!'' என்று சொல்லி ராஜாவைத் தூக்கி நிறுத்தினாள் தாயம்மாள்.

கண்களைத் துடைத்துக் கொண்ட ராஜா, முருகுவின் தோளில் கை போட்டு, ''முருகு, இனிமே நீ எனக்கு சகோதரன் மாதிரி'' என்றான்.


அப்போது ஒரு நர்ஸ் வந்து ''மரகதம்மாள் உள்ளே வரலாம். ஒரு ஆபத்துமில்லே'' என்றாள்.

உடனே மரகதம் தாயம்மாவையும், ராஜா, முருகுவையும் கையைப்பிடித்து இழுத்தபடி உள்ளே ஓடினார்கள். ராஜாவின் அப்பா சிரித்தபடி அவர்களை வரவேற்றுப் பேசினார். இனி எவ்வித கவலையும் இல்லை என்பது தெரிந்தது.

தன் கணவரைப் பெரிய ஆபத்திலிருந்து பிழைக்க வைத்து தனது மாங்கல்யத்தைக் காப்பாற்றிய கடவுள், தன் மகனுடைய மனத்தையும் மாற்றியதை எண்ணி எண்ணி மனம் மகிழ்ந்தாள் மரகதம்.



உயர்வாய் தம்பி!



சின்ன குடிசையில் வாழும் குப்பன்
சேற்றில் ஆட மாட்டான்.

குளத்து நீரைக் காய்ச்சி வைத்தே
குடித்து நலம் காப்பான்.

காலை எழுந்து உடலின் அழுக்கைத்
தேய்த்து நாளும் குளிப்பான்.

அம்மா கொடுக்கும் உணவுதன்னை
அமர்ந்து மென்று தின்பான்.

அழகாய் நல்ல வெளிச்சத்திலே
அன்றாடம் பாடம் படிப்பான்.

ஆண்டுதோறும் குப்பன் சிறந்த
மாணவனாய்ப் பொலிவான்.

குப்பனைப் போல் ஒழுங்கைக் கற்று
நீயும் வாழ்வில் உயர்வாய்!





மன்னர் மன்னன்

ஒரு செடி முளைத்தது!

இளசை எஸ்.சுந்தரம்



குளத்தூர் கிராமத்தில் கோயில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு இருந்தார்கள்.

ஆனால், சிறுவன் சின்னச்சாமி மட்டும் சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

கொஞ்ச காலமாக இந்தக் கிராமத்தை ஒரு நோய் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதாவது, அந்தக் கிராமத்திலிருப்பவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பட்டணங்களை நோக்கிப் போகத் தொடங்கியிருந்தார்கள்.

இங்கிருந்து விவசாயம் செய்வதை விட, அங்கு போய் வியாபாரம் செய்தால் நல்ல வருமானம் கிடைக்கிறது. என்பதே அவர்களது நோக்கம்.

அப்படி வெளியூர்களுக்குப் பிழைக்கப் போனவர்கள், இந்தக் கோவில் திருவிழா சமயத்தில் குடும்பத்தோடு வந்து ஓரிரு நாட்கள் தங்கி, சாமி கும்பிட்டுவிட்டுப் போவார்கள். அப்படி அவர்கள் போகும்போது சும்மா போனாலும் பரவாயில்லை. தங்கள் கடைகளிலும் வீடுகளிலும் வேலை செய்வதற்காக அந்தக் கிராமத்துச் சிறுவர் சிறுமிகள் சிலரையும் அழைத்துக் கொண்டு போய்விடுவார்கள்.

அதனால்தான் கோயில் திருவிழா வந்ததைக் கண்டு சிந்தனை செய்யத் தொடங்கியிருந்தான் சின்னச்சாமி.

அவனுக்கு ஒரு விஷயம் புரியாத புதிராகவே இருந்தது. பெரியவர்கள் சிலர் வெளியூர்களுக்குப் போய்விட்டார்கள். இன்னும் சிலர் இறந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். சிறுவர்களும் இப்படி பட்டணங்களுக்குக் கொண்டு போகப் படுகிறார்கள். அப்படியானால், இன்னும் பல ஆண்டுகளில் இந்தக் கிராமத்தில் யார் மிஞ்சுவார்கள்? இந்த ஊர் விவசாயத்தை யார் கவனிப்பார்கள்? விவசாயம் நடந்தால்தானே சாப்பாடு, வியாபாரம் எல்லாம்? கிராமங்கள் முன்னேறினால் தானே நாடும் நன்றாக இருக்கும்?

தனது கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் அவன், காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி நடந்த கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசும் பெற்றான்.



"சாப்பிடுவதற்கு முன் கையைச் சுத்தம் செய்ய வேண்டும் என்று, சொல்கிறேனே, எதற்காகத் தெரியுமா?"

"ஓ! தெரியுமே! இல்லாதபோனால், தட்டு அழுக்காகப் போயிடும்!"

அப்போது, காந்தியடிகளின் சிந்தனைகளை நிறையப் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அதிலிருந்து இப்படிப் பட்ட நினைவுகளை அவன் மனம் அசைபோட ஆரம்பித்தது.

அந்தக் கிராமத்தில் பிறந்து, அங்கேயே தொடக்கக் கல்வி பயின்று, பிறகு வெளியூர் சென்று படித்து இப்போது டாக்டராக உயர்ந்திருக்கும் ஒருவர் தனது பெற்றோரைச் சந்திப்பதற்காகக் கிராமத்துக்கு வந்திருந்தார்.

அவரைச் சந்தித்துச் சில விஷயங்களைப் பேசவேண்டும் என்று நினைத்த சின்னச்சாமி அவரைத் தேடிப் போனான்.

இவ்வளவு ஆர்வமாகத் தன்னைத் தேடி வந்திருக்கிறானே என்று அவரும் பேச்சுக் கொடுத்தார். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, தனது விருப்பத்தை வெளியிட்டான் சின்னச்சாமி.

"ஐயா! நமது கிராமத்து மக்கள் சரியான மருத்துவ வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எதற்கெடுத்தாலும் பக்கத்து ஊர் அரசாங்க ஆஸ்பத்திரிக்குத்தான் ஓட வேண்டியதிருக்கிறது. அதுவும் சரியான போக்குவரத்து வசதியும் இல்லாததால் அவசரமான நேரங்களில் மிகவும் சிரமமாக இருக்கிறது. டாக்டருக்குப் படித்திருக்கிற நீங்கள், நமது கிராமத்திலேயே தங்கி மருத்துவ வசதி செய்தால் என்ன....?"

அவனை விநோதமாகப் பார்த்தார் அந்த டாக்டர்.

"தம்பி! நீ விவரம் தெரியாமல் பேசுகிறாய். எவ்வளவு எதிர்காலத் திட்டத்தோடு நான் டாக்டருக்குப் படித்தேன் தெரியுமா? கைநிறையச் சம்பாதிக்க வேண்டும்; கார் வாங்க வேண்டும்; பெரிய வீடு கட்ட வேண்டும்; இன்னும் என்னவெல்லாமோ செய்ய வேண்டும். அதெல்லாம் இங்கு வந்தால் முடியுமா?"

அவரது எதிர்காலத் திட்டங்களைக் கண்டு ஆச்சரியப்பட்ட சின்னச்சாமி, "ஐயா! உங்கள் எண்ணம் அப்படி இருந்தாலும், மாதத்துக்கு ஒருமுறை இங்கு வந்து இரண்டு நாட்கள் தங்கி முடிந்த அளவுக்கு மருத்துவ உதவி செய்யலாமே?" என்று பணிவோடு கூறினான்.

டாக்டர் அவனைப் பார்த்து முறைத்தார்.

"இந்தக் குப்பை மேட்டுக்கு எவன் வருவான்?" என்று ஆத்திரத்தோடு சொன்னார்.

"ஐயா! நீங்கள் பிறந்தது இந்தக் குப்பை மேட்டில்தான்" என்று நறுக்கென்று கூறிய சின்னச்சாமி, அவர் கோபத்தோடு எழுவதைக் கண்டதும் அங்கிருந்து நடக்கத் தொடங்கினான்.

கோவில் திருவிழா முடிந்ததும் வெளியூரிலிருந்து வந்தவர்கள் திரும்பத் தொடங்கி இருந்தார்கள். அவர்களோடு செல்வதற்குத் தயாராக இருந்த சில சிறுவர்களில் முத்துவும் ஒருவன். அவன் சின்னச்சாமியின் நெருங்கிய நண்பன்.

அவனிடம் பேசி அவனை மட்டுமாவது தடுத்து நிறுத்தலாம் என்று முடிவு செய்தான் சின்னச்சாமி.

"முத்து! படிப்பதற்காகப் போனாலும் பரவாயில்லை. யாருடைய கடையிலோ எடுபிடி வேலை செய்வதற்குப் பட்டணம் போக வேண்டுமா? அப்படி அங்கே போய் உழைப்பதற்கு இங்கேயே பாடுபட்டால், இந்த மண் மாதா சோறு போட மாட்டாளா?" என்று நயமாக நண்பனிடம் பேசிப் பார்த்தான் சின்னச்சாமி.

"பட்டணத்துக்குப் போனால் புதிது புதிதாய் சினிமா பார்க்கலாம்; டி.வி. பார்க்கலாம். சினிமா நடிகர்களைக்



கூடப் பார்க்க முடியுமாம். இங்கே இருந்தால் என்னடா கிடைக்கும்? உனக்கு அங்கு வர இஷ்டமில்லை என்றால் போகிறவர்களை ஏன் தடுக்கிறாய்? நான் போகத்தான் போகிறேன்,'' என்று கண்டிப்புடன் கூறிவிட்டான் முத்து.

இதையெல்லாம் நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்த சின்னச்சாமிக்கு இப்போது இன்னொரு கவலையும் சேர்ந்து கொண்டது.

அந்தக் கிராமத்தில் மூன்று வருடங்களாக மழை இல்லை. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டிருந்தது. மாதங்கள் ஆக ஆக நிலைமை மேலும் மோசமாகியது. கம்பு, சோளம், கேழ்வரகு, பருத்தி இப்படி மழையை மட்டுமே நம்பிப் பயிர் செய்யப்படும் புஞ்சைகள் நிறைந்த பூமி அது.

இப்போது மழையில்லாமல் வறண்டு கிடந்தது. குடிப்பதற்குத் தண்ணீர் கூட அதிக தூரம் போய் எடுத்து வர வேண்டியிருந்தது. இதனாலேயே பல பேர் இப்போது கிராமத்தை விட்டு வெளியேறத் தொடங்கியிருந்தார்கள். பல பேர் தங்களது ஆடுமாடுகளை வெளியூருக்குக் கொண்டு போய் விற்க முயன்றார்கள்.

மழை வந்துவிடும், வந்துவிடும் என்று எதிர்பார்த்து ஏமாந்த ஊர்ப் பெரியவர்கள் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று தீர்மானிக்க அன்று ஊர்க் கூட்டம் போட்டரார்கள்.

கிராமத்தை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற கருத்தையே பலரும் தெரிவித்தார்கள். ஊர்த் தலைவரும் அதை ஏற்றுக் கொள்வதைப் போலத் தோன்றியது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சின்னச்சாமி எழுந்து பணிவோடு பேசினான். ''ஐயா! பெரியவர்கள் மத்தியில் நான் பேசுவதற்கு மன்னிக்க வேண்டும். நிச்சயமாக மழை பெய்யும்; நமது ஊர் முன் போலச் செழிக்கும். இதை நம்புங்கள்.''

''இப்படி நம்பி நம்பித்தான் இவ்வளவு நாளும் ஏமாந்தோம். இப்போது சாப்பாட்டுக்கே பிரச்னையாகிவிட்டது. இனிமேல் இந்தக் கிராமத்தில் ஒரு செடி கூட முளைக்குமா என்பது சந்தேகம்தான்'' என்று கூட்டத்தில் ஒருவர் கூச்சல் போட்டார்.

சின்னச்சாமி கூட்டத்தைப் பார்த்து மீண்டும் பேசத் தொடங்கினான்:

''தனது மகனை ஒரு தாய் எப்படியெல்லாமோ கஷ்டப்பட்டு வளர்க்கிறாள். அவன் வளர்ந்த பிறகு, தாய் திடீரென்று நோயில் படுத்துவிட்டால், மகன் அவளை விட்டுவிட்டு ஓடலாமா?''

அவன் அப்படிக் கேட்டதும் எல்லோரும் அவனைக் கூர்ந்து பார்த்தார்கள். ''அதுபோலத்தான் இந்த மண் மாதா நமக்குச் சோறு போட்டாள். அவளுக்குச் சோதனை வரும்போது நாம் விட்டுவிட்டு ஓடலாமா? இந்தச்

சோதனை கூடத் தற்காலிகமானது தான். மழையைப் பெய்விக்கும்படி கடவுளிடம் வேண்டுவோம். நிச்சயம் மழை பெய்யும்.''

மற்றவர்கள் மௌனமாக இருக்கையில், சின்னச்சாமியின் நம்பிக்கையின் மீது ஊர்த் தலைவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இன்னும் கொஞ்சநாள் பொறுத்துப் பார்க்கலாமே என்று முடிவு செய்த அவர்,

''இன்னும் ஒரு மாதம் பொறுத்துப் பார்ப்போம். அப்போதும் மழை பெய்யவில்லையென்றால் நமது தீர்மானப்படி நடப்போம்!'' என்று கட்டளையிட்டதும் சம்மதம் தெரிவித்துக் கூட்டம் கலைந்தது.

அந்த வெற்றிக்காகச் சிறிது மகிழ்ந்தான் சின்னச்சாமி.. ஆனால், ''இந்த ஊரில் இனிமேல் ஒரு செடி கூட முளைக்குமா என்பது சந்தேகம்தான்'' என்று கூட்டத்தில் ஒருவர் கூறியது அவன் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது.

வீட்டுக்கு வந்த அவன் ஒரு சிறு மண் சட்டியில் மண்ணை அள்ளிப் போட்டு அதில் சில புளியங்கொட்டைகளை ஊன்றினான்.

குடிநீரில் கொஞ்சம் கொஞ்சம் அதில் ஊற்றினான். மழை வேண்டி கோயிலில் நடந்த பூஜையில் கலந்து கொண்டான். மழையைப் பெய்விக்கும்படி கடவுளிடம் மனம் உருகி வேண்டினான்.

தான் வைத்த விதைகள் முளைத்திருக்கின்றனவா என்று தினமும் பார்த்தான்.

அவன் எதிர்பார்த்தபடி மழையும் பெய்யவில்லை; செடியும் முளைக்கவில்லை. வருத்தமடைந்த அவன் இன்னும் சில புளியங்கொட்டைகளை ஊன்றினான். தண்ணீர் விட்டான்.

ஒரு மாதம் ஆகிவிட்டது எதிர்பார்த்தபடி மழை பெய்யாததால் ஊர் மக்கள் கிராமத்தை விட்டுப் புறப்பட ஆயத்தமானார்கள்.

சின்னச்சாமியின் அம்மாவும், அப்பாவும் கூட அன்று இரவு மூட்டை முடிச்சுகளைக் கட்டினார்கள். விடிந்தால் பயணம் தொடங்கிவிடும்.

அன்று விடியற்காலை மிகவும் கவலையோடு தான் விதை போட்டிருந்த மண் சட்டியைப் போய்ப் பார்த்தான் சின்னச்சாமி.

என்ன ஆச்சரியம்! ஒரு விதை, மண்ணைக் கிளறிக் கொண்டு முளை விட்டிருந்தது!

சின்னச்சாமிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்த மண் சட்டியைத் தூக்கிக் கொண்டு போய் எல்லோரிடமும் காட்டினான்.

அவனை யாரும் சட்டை செய்யவில்லை. எல்லோரும் புறப்படுவதிலேயே குறியாக இருந்தார்கள்.

அப்போது சூரியனின் ஒளி மங்கியது.

வானம் இருண்டது. எல்லோரும் ஆவலோடு வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள். கொஞ்ச நேரத்தில் சிறு துளிகள் விழத் தொடங்கின.

சுமார் மூன்று மணி நேரம் இடைவிடாமல் மழை அடைத்துப் பெய்தது. குளத்தில் நீர் பெருகியது. எங்கு பார்த்தாலும் நீர் கரைபுரண்டு ஓடியது.

மழை நின்ற பிறகும்கூட சின்னச்சாமி தனது ஆட்டத்தை நிறுத்தவில்லை. ஏதோ ஆவேசம் வந்தவன் போல ஆடிக் கொண்டே இருந்தான்.

ஊர்த் தலைவர் ஓடி வந்து அவனை அப்படியே கட்டி அணைத்து முத்தமிட்டார். ஊர் மக்கள் எல்லாரும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ஊர்ப் பெரியவர் ஒருவர் உவகையோடு பேசினார்.

''தம்பி! நீ சாதாரணச் சிறுவன் இல்லை; அபூர்வமானவன்! இவ்வளவு அனுபவம் படைத்த நாங்களே நம்பிக்கையை இழந்து விட்டபோது, நீ நம்பிக்கையோடு இருந்தாய். அதுமட்டுமல்ல; எங்களுக்கும் நம்பிக்கையை ஊட்டினாய். என்னதான் நாங்கள் ஊரை விட்டுக் கிளம்பத் தீர்மானித்தாலும், சொந்த நிலத்தையும் வீட்டையும் விட்டுவிட்டுப் போகிறோம் என்ற கவலை இருக்கத்தான் செய்தது. ஆனால், உன்னுடைய செயல் எங்களுக்கு வழிகாட்டி விட்டது. நீ முளைக்க வைத்த செடி, நீ இந்த ஊருக்கு ஒரு நல்ல செடியாக முளைத்திருக்கிறாய் என்பதற்கு அடையாளம்தான்!''

சின்னச்சாமியை எல்லோரும் பாராட்டுவதைக் கண்டு, அவனது பெற்றோர் ஆனந்தம் அடைந்தனர்.

மழை, இன்னொரு பட்டம் பெய்வதற்குத் தயாரானது.

தூங்குமூஞ்சி

— சிற்பி சோமு

அன்று தூங்குமூஞ்சி மாரிக்குக் கல்யாணம்.

அதை வேடிக்கை பார்க்க ஊரே திரண்டிருந்தது. 'இந்தத் தூங்குமூஞ்சிப் பயலையும் ஒருத்தி கல்யாணம் செய்து கொள்கிறாளே! அந்த அப்பாவிப் பொண்ணு யாரென்று பார்ப்போம்' என்றுதான் அவ்வளவு கூட்டம்.

அந்த ஊர்ப் பண்ணையார்கூட கல்யாணத்திற்கு வந்திருந்தார்.

தூங்குமூஞ்சி மாரியின் அப்பா மருதப்பன் முன்பு பண்ணையிலே வேலை பார்த்தவர். ஒரு விபத்திலே அவர் இறந்து போனார். அவர் போனதும் அவர் மனைவி சுப்பம்மாள் பண்ணையில் சேர்ந்து வேலை பார்த்தாள்.

கஷ்டத்தோடு கஷ்டமாக மகன் மாரியைப்படிக்கப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினாள். மாரிக்குப் படிப்பு ஏற வில்லை. மாறாக கொண்டு போன கட்டுச் சோற்றைப் பிரித்து வைத்து பள்ளிக்கூடத்திலே தினமும் தூங்கி விழஆரம்பித்தான். அதனால்அவனைப் பள்ளிக்கூடத்திலிருந்து அனுப்பிவிட்டார்கள். பிறகு, பண்ணையில் அவனைச் சேர்த்துவிட்டாள். பண்ணையார், பண்ணை மாடுகளை மேய்க்க அனுப்பி வைத்தார். அங்கும் அவன் தூங்கி விழவே, மேய்ச்சலுக்குப் போன சில மாடுகள் காணாமல் போய்விட்டன! அது கண்டு அவனை வீட்டுக்கு அனுப்பி விட்டார், 'ஒன்றுக்கும் உதவாத உதவாக்கரை' என்று.

பாவம், சுப்பம்மாள் என்ன செய்வாள்? ஆனாலும், காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே...?'

பெற்றவளாயிற்றே. மற்றவர்களைப் போல அவனைத் தூக்கி எறிந்துவிட முடியுமா? என்றாவது ஒருநாள் எல்லோரையும் போலத் தன் மகனும் ஆளாகிவிட மாட்டானா என்ற ஏக்கத்தில் தன் கஷ்டத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனுக்கு மூன்று வேளையும் சோறு போட்டாள்.

படாத பாடுபட்டுப் பண்ணையில் சுப்பம்மாள் வேலை பார்க்க, தூங்குமூஞ்சி மாரி சதாசர்வகாலமும் சாப்பிடுவதும், தூங்குவதுமாகக் காலத்தை ஓட்டினான். அவனது செய்கையைக் கண்ட ஊரிலுள்ளவர்கள் அவனை 'தூங்கு மூஞ்சி' என்று கேலியாக அழைத்தனர். இப்படித்தன்னைக் கேலியாக அழைக்கிறார்களே என்று மாரி யாருடனும் சண்டை சச்சரவுக்குப் போக மாட்டான். அந்த வகையில் அவன் நல்லவன். சிரித்துக்கொண்டே போய்விடுவான்.

இப்படியாக, காலத்தைத் தள்ளிக் கொண்டிருந்தவனுக்கு, கல்யாணம் என்றால் கேட்கவா வேண்டும்? இந்தக் கல்யாணத்தை வேடிக்கை பார்க்க அக்கம்பக்கத்து ஊரிலிருந்துகூட ஆட்கள் வந்திருந்தனர்.

சுப்பம்மாள் வந்தவர்களையெல்லாம் கும்பிடு போட்டு வரவேற்றுக் கொண்டு இருந்தாள். மணமேடையில் இருந்த மாரி நன்றாகச் சாப்பிட்டு விட்டதால் "கொர்...கொர்...கொர்.." என்று குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்துவிட்டான். பக்கத்தில் இருந்த

வர்கள் எழுப்ப, எழுப்ப அவன் தூக்கம் கலைவதாக இல்லை.

முகூர்த்த நேரம் வந்துவிடவே மணப் பெண்ணை அழைத்து வந்தனர் மணப்பெண் மாரியுடைய அத்தை மகள் தங்கம்தான். அவள் வந்து மேடையில் உட்கார்ந்ததும் மாமனை 'சுருக்' கென்று ஒரு கிள்ளுக் கிள்ளினாள், மாரி அரண்டு போய், கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு, 'திருதிரு' வென்று விழித்தான். பிறகு, கெட்டி மேளம் முழங்க, தங்கம் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

வந்தவர்களெல்லாம் மாரிக்கு புத்திமதி சொன்னார்கள், "இனி மேலாவது தூங்குமூஞ்சியாக இருக்காமல், உன் பெண்சாதி தங்கத்தை நல்ல படியாக வைச்சு காப்பாத்து" என்று.

எல்லாத்துக்கும் தூங்குமூஞ்சி மாரி தலையாட்டினான். அப்போதே அவனுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது. கொட்டாவி விட்டுக் கொண்டே இருந்தான்.

கல்யாணத்திற்கு வந்த சில பெரியவர்கள் மணமக்களுக்கு வைத்துக் கொடுத்த பணம் ஆயிரம் ரூபாய் சேர்ந்திருந்தது. அந்தப் பணத்தைத் தங்கம் தனது அத்தை சுப்பம்மாளிடம் கொடுத்தாள்.

"எனக்கு எதுக்கும்மா இந்தப் பணம்? எவ்வளவு சொல்லியும் கேட்காமே விடாப்பிடியா மாமன் மாரியைத்தான் கட்டிப்பேன்னு ஒத்தக் காலிலே நின்னு கட்டிக்கிட்டே. இனி அவனைக் கரை சேர்ப்பது உன் பொறுப்பு. எப்படியோ அவனை ஒரு மனுஷனாக்கிடு. அது போதும் எனக்கு!" என்று கூறிய சுப்பம்மாள், "இந்தா, இந்தப் பணத்தைக் கொண்டு ஏதாவது நகை நட்டு போட்டுக்கோடியம்மா..." என்று தங்கத்திடம் பணத்தைக் கொடுத்துவிட்டாள்.



பணத்தை வாங்கிக் கொண்ட தங்கம், "அத்தை... எனக்கு நகையும் வேண்டாம். நட்டும் வேண்டாம். ரெண்டு உழவு மாடு வாங்கிக் கொடுங்கள், அதை வைச்சு நாங்க பொழைச்சுக்கிறோம்" என்றாள்.

சுப்பம்மாள் மாரியை அழைத்து அவனிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து "சந்தைக்குப் போய் ரெண்டு உழவு மாடு நல்லதாக வாங்கி வா" என்றாள்.


மறுநாள் கட்டுச் சோற்றைக் கட்டிக் கொண்டு சந்தைக்குப் புறப்பட்டுப் போனான் மாரி.

வழியிலே அவனுக்குப் பசி வந்து விட்டது. ஒரு மரத்து நிழலில் அமர்ந்து கட்டுச் சோற்றைப் பிரித்துவைத்து சாப்பிட்டான். வயிறு நிரம்பியதும் அவனுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது. 'சற்று நேரம் தூங்கிவிட்டுப் போகலாம்' என்று துண்டை விரித்துப் படுத்தான். அவ்வளவுதான்! சற்று நேரத்திற்கெல்லாம் குறட்டைவிட்டுத் தூங்க ஆரம்பித்துவிட்டான்!

பொழுது போய்விட்டது.

அப்போது சந்தைக்குப் போய் விட்டு வந்த ஒரு ஆள், மாரியைஎழுப்பினான். "என்னப்பா பொழுது போய் விட்டது. இப்படித் தூங்குறியே...? ஆமா, எங்கே வந்தே...?" என்றான்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த மாரி, கண்களைக் கசக்கி விட்டவாறு, "மாடு வாங்க வந்தேங்க... வெயிலு கடுமையாக இருக்கவே, இப்படி உட்கார்ந்து இளைப்பாறிப் போக நினைச்சேன். நல்லா தூங்கிவிட்டேன்" என்றான்.



அம்மா செய்வது?

"எலே! சமையல் அறையிலிருந்து 'இடி' சப்தம் வருதே.... உள்ளே அம்மா என்னடா செய்யறா?"

"இடியாப்பம் சுடறாப்பா."

— விக

எழுப்பியவன், "மாடு வாங்கவா... எவ்வளவு பணம் கொண்டு வந்தே...? இன்று சந்தையிலே மாடு விலைகளெல்லாம் ரொம்ப அதிகம்" என்றான்.

"ஆயிரம் ரூபாய் கொண்டு வந்திருக்கேங்க. உழவு மாடு ரெண்டு வாங்கிட்டு வரச் சொல்லி எங்க அம்மா அனுப்பி வைச்சுச்சு" என்றான் மாரி.

"சந்தைக்கு இனிமே போக முடியாதேப்பா. பொழுதே போய்விட்டது. என் கூட வா, நான் ரெண்டு மாடு வைச்சிருக்கேன். அதை உனக்குத் தருகிறேன்" என்றான்.

மாரி அவன் கூடப் போனான். அந்த ஆசாமி அடிமாடு வியாபாரம் செய்பவன். முப்பது ரூபாய் பெருத இரண்டு அடிமாடுகளை அப்பாவியான மாரியிடம் ஆயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு — அவன் தலையில் கட்டிவிட்டு நழுவி ஓடிவிட்டான்!

மாரி அந்த வீட்டுக்கு அந்த மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்த போது நன்றாக இருட்டிவிட்டது.

பிள்ளை, சொன்னபடி சந்தைக்குப் போய் மாடுகள் வாங்கி வந்துவிட்டானே என்று சுப்பம்மாள் சந்தோஷப்பட்டாள். மருமகள் தங்கத்திடம் தன் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தினாள்.

காலையில் எழுந்து போய்ப் பார்த்த போது சுப்பம்மாள் சந்தோஷம் பறி போய்விட்டது. மகன் மாரி வாங்கி வந்த மாடுகளைக் கண்டு திடுக்கிட்டாள். "அடப் பாவிப் பயலே... எவன் கிட்டேடா... பணத்தைக் கொடுத்து ஏமாந்தே? உழவு மாடுகள் வாங்கி வரச் சொன்னால், அடிமாட்டை வாங்கிக்கிட்டு வந்து நிக்கிறியே?" என்று துடிதுடித்துப் போனாள்.

ஆனால் தங்கம் கதறவில்லை; கலங்கவில்லை. தன் மாமன் மாரியை 'எந்தப் போக்கிரியோ நன்றாக ஏமாற்றி விட்டுப் போய்விட்டான்' என்று எண்ணியவள், அத்தை சுப்பம்மாளிடம் சமாதானம் கூறி, மாமனைத் திட்டாது தடுத்தாள். பின், சுப்பம்மாளை அழைத்துக் கொண்டுபோய், பண்ணையாரிடம் விவசாயம் செய்ய வாரத்துக்கு நிலம் கேட்டாள்.

தங்கத்தின் துணிச்சலான செயலைக் கண்டு பெருமிதம் கொண்ட பண்ணையார், மேட்டு நிலத்தில் ஒரு காணி

யும் பள்ளத்தாக்கில் ஒரு காணியும் கொடுத்து, ''இந்தாம்மா தங்கம், உன் அத்தை எல்லா விவரத்தையும் என் கிட்டே சொன்னுள். ஒரு தூங்குமூஞ்சி யான மாரியைக் கட்டிக்கிட்டோமே என்றுமூலேயில்முடங்கிக்கிடக்காமே, அவனை வைத்தே விவசாயம் செய்ய நினைத்த உன் துணிச்சலேப் பாராட்டு கிறேன். நீ எனக்கு வாரம் எதுவும் இந்த நிலத்துக்குக் கொடுக்க வேண் டாம். கிரையத்துக்கே உனக்குத் தர் றேன். ரெண்டு வருடத்திலே அந்த நிலத்துலே பாடுபட்டு இரண்டாயிரம் ரூபாயைக் கொண்டு வந்து கொடு, அது போதும்!'' என்று வாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தார் பண்ணையார்.

தங்கத்திற்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி; வீடு வந்தவள் தன் மாமன் மாரியிடம் விவரத்தைக் கூறி மகிழ்ந் தாள். அத்துடன், ''நாளை முதல் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். ஒரே வருடத்திலே பண்ணையார் கடனை அடைக்க வேண்டும்'' என்று மாரி யிடம் கூறினுள். அவன் எல்லாவற் றுக்கும் தலையாட்டி வைத்தான்.

மறுநாளிலிருந்து தங்கம் பரபர வென்று சுழன்று காரியத்தில் இறங்கி னுள். மாரியையும் வேலை வாங்கினுள். இருவரும் சேர்ந்து மேட்டு நிலத்தில். ஒரு கிணறு தோண்டினுர்கள். அது அவள் எண்ணம் போல ஊற்றெடுத்து சமுத்திரமாகத் தண்ணீரைக் கொடுத் தது. உழவு மாடுகளை நன்ருக மேய்ச்ச லுக்கு அனுப்பி வைத்தாள். அவை களைக் கண்ணும் கருத்துமாகக் கவ னித்து, பருத்திக் கொட்டை, புண் ணாக்கு என்று நல்ல ஊட்டச் சத்து உணவாக வாங்கி வந்து 'ஊட்டி ஊட்டி' வளர்த்தாள்.

நல்லஉணவைக்கண்டறியாதஅந்த மாடுகள், இப்போது தங்கத்தின் கவ னிப்பில் நல்ல உணவை உண்டு மகிழ்ந்து 'திமு திமு'வென கட்டிளம் காளைகளாக மாறி வளர்ந்தன. கோயில் மாடுகள் போல உருப் பெற் றன.

'எந்த வேலைக்கும் நாங்கள் அஞ் சோம்' என்று கூறுவது போல தங்கத் தின் விவசாயத்துக்குத் தக்க விதமாக அவை பாடுபடத் தொடங்கின. மாடு கள் மாறியது போல மாரியும் பாடு பட்டான்! அவனிடமிருந்து தூக்கம் பறந்தோடிவிட்டது! இப்போது அவன் தங்கத்தோடுஉழைப்பில்பங்குகொண் டான்.

காலத்துக்குத் தக்கவிதமாக மேட்டு நிலத்தில் கடலே, கிழங்கு, சோளம் வகைகளையும், பள்ளத்தாக்குகளில் பயிர் வகைகளையும் விவசாயம் செய் தாள் தங்கம்.

அடிமாடுகள் அபாரமாக உழைத்து அவளுக்கு ஈடு இணையில்லா ஒத்து ழைப்பைத் தந்தன.

சாகப்போன தங்களுக்குமறுபிறவி கொடுத்த தங்கம் — மாரி தம்பதி களுக்குத் தங்களது கடுமையான உழைப்பைத் தந்து, தங்களது விசுவாச மான நன்றியை உணர்த்தின அந்த மாடுகள்.

எல்லாமாகச் சேர்ந்து அவர்க ளுக்கு அந்த வருட விவசாயத்தில் ஒன்றுக்குப் பத்தாக விளைச்சல் கண் டது.

அவளது உழைப்பைக் கண்டு அந்த ஊரே வியந்தது. 'ஒன்றுக்கும் ஆகாத உதவாக்கரையான — தூங்குமூஞ்சி கணவனையும் அடிமாடுகளையும் வைத் துக் கொண்டு தனது கடுமையான உழைப்பின் மூலம் ஜெயக்கொடி நாட்டிவிட்டாளே ஒரு பொம்பளை!' என்று எல்லாரும் புகழ்ந்தார்கள்.

அந்தவருடவிவசாயத்தில்கிடைத்த லாபத்தை எல்லாம் ஒன்று திரட்டிய தங்கம், தன் அத்தை சுப்பம்மாளை அழைத்துக் கொண்டு போய் இரண்டு வருடம் தவணை கொடுத்த பண்ணையா ரிடம் இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்தாள்.

பண்ணையார் அளவற்ற ஆனந்தம் கொண்டு, ''அம்மா தங்கம், உன் உழைப்பைக் கண்டு பெருமைப்படு கிறேன். இந்தப் பணத்தை உன் கடுமை யான உழைப்பிற்கு நான் தந்த பரிசாக ஏற்றுக் கொள். நீயும் உன் கணவனும் என்றும் நிறைஞ்ச நெஞ்சத்தோடு சந் தோஷமாக இருங்கள்'' என்று வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

வீடு வந்த தங்கம் பண்ணையார் கொடுத்த பரிசை, தன் கணவன் மாரி யிடம் கொடுத்து வணங்கினுள்.

அந்தப் பணத்தை தங்கள் உழைப் புக்குக்கிடைத்தவெகுமதியாகக்கருதி, இன்னும் பாதுகாத்து வருகிறான் மாரி.

வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம்

ஆர். ஆனந்த்



''போஸ்ட்'' — 'தொப்'பென்று கனமாக ஒரு கவர் வீட்டுக்குள்ளே வந்து விழுந்தது. கதவின் கம்பியிடுக்கின் வழியாக கவரை வீசிவிட்டு, போஸ்ட்மேன், சைக்கிளை அழுத்தி மிதித்துக் கொண்டு சென்றுவிட்டிருந்தார்.

குனிந்து கவரை எடுத்தான்.

கவரின் இடப்பக்கத்தில்கீழே அச்சடிக்கப்பட்டிருந்தமுகவரியைப்பார்த்தவுடனேயே அவனுக்குவிஷயம்புரிந்துவிட்டது — அவன் அனுப்பிய கதை பத்திரிகை ஒன்றிலிருந்து திரும்பி வந்திருக்கிறது! கவரை ஒரு ஓரத்தில்கிழித்துப் பிரித்தான். உள்ளேயிருந்து பேப்பர்களை வெளியே இழுத்தான் —

'அன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் கதை/கட்டுரை/துணுக்கை வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம்.

— ஆசிரியர்.'

— என்று அச்சடிக்கப்பட்ட ஒரு சின்னக் காகிதம்தான் இவன் அனுப்பியதற்கு அதிகப்படியாக உள்ளே இருந்தது. அந்தக் காகிதத்திலிருந்த வாசகம் கூட அவனுக்கு அத்துப்படிதான்!

இது முதல்முறையல்ல; இரண்டாம் முறை அல்ல; ஐம்பதாவது முறை...!

ஆமாம், இப்பொழுது திரும்பி வந்திருந்தது அவனுடைய ஐம்பதாவது சிறுகதை!

கதையைக் கையில் வைத்துக்கொண்டே ரொம்ப நேரம் நின்றிருந்தான்.

தன்னுடைய ஐம்பதாவது கதையும் திரும்பி வந்ததில் ரொம்பவே ஏமாற்றமடைந்திருந்தான்.

அவன் மனம் அடைந்திருந்த ஏமாற்றத்தை, கொஞ்சம் கொஞ்சமாய் அவன் முகம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ஏமாற்றம் எரிச்சலாய் மாறியது.

'எவ்வளவு அழகாய் எழுதியிருந்தேன். சமுதாயத்தில்சிலரால்வடிக்கப்படும் சோகமயமான கண்ணீர்களையே கதையாகப் படைத்து...! — படிக்கிற எல்லோருடைய மனமும் இளகிவிடும்படி எழுதியிருந்தேனே...



கதையை எழுதி முடிச்சவுடனே, நண்பர்களிடம் காட்டி, கருத்து கேட்ட போது, “ரொம்ப நல்லா எழுதியிருக்கே. இது உறுதியா பிரசுரமாகும்’னு சொன்னாங்களே... அவங்க இவ்வளவு நம்பிக்கையோட சொன்னவுடனே, எவ்வளவு ஆர்வத்தோட அனுப்பிச்சேன்...! இந்தக் கதை கூட பிரசுரமாகலை... இனிமேல் கதை எழுதவே கூடாது...’ — கதை திரும்பி வந்ததில் ஏகமாய் வருத்தப்பட்டான்.

அந்தக் கதையைத் திரும்ப, முழுக்கப் படித்துப் பார்த்தான்; ‘எவ்வளவு நல்லா இருக்கு. இதைப்போய்த் திருப்பி அனுப்ப எப்படித்தான் மனசு வந்ததோ, இந்தப் பத்திரிகைக்காரர்களுக்கு!’

சில பிரபல எழுத்தாளர்கள் எழுதி, பத்திரிகைகளில் வெளிவந்த சில கதைகளை, மனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றோடு தன் கதையையும் ஒப்பிட்டுப் பார்த்தான். ‘அவங்களுடையதைவிட, என்னுடையது எந்த விதத்திலேயும் குறைஞ்சு போயிடலை. சொல்லப் போனா, இன்னும் நல்லாவே இருக்கு... பத்திரிகைக்காரங்களுக்குத் தான் ஒழுங்கா தேர்வு செய்யத் தெரியலை... யாராவது தெரிஞ்ச ஆளோட கதையின்னா மட்டும் வெளியிடுவாங்க...’ பத்திரிகைக்காரர்கள் மீது அவன் கோபப்பட்டான்.

ரொம்ப நேரத்திற்குப் பிறகு, அந்த முடிவு திடீரென்று தோன்றியது.

எந்த முடிவு? — ஒரு பிரபல எழுத்தாளரிடம் சென்று, தன் கதையைக் காட்டி, அவரிடம் கருத்துக் கேட்பது!

பல வாசகர்களுக்குப் பரிச்சயமான ஓர் எழுத்தாளரைச் சந்திக்கச் சென்றான். அந்த எழுத்தாளரின் கதைகள் வெளிவராத பத்திரிகைகளே இல்லை எனலாம். அந்த எழுத்தாளர்தான் ரொம்ப பிஸியானவர். பல வார, மாத இதழ்களும் அவரிடம் கதைகளைக் கேட்டு நச்சரித்துக் கொண்டேயிருந்தன.

‘ஒருவேளை தன்னிடம் பேச மறுத்து விடுவாரோ?’ என்ற எண்ணத்துடனேயே அவர் வீட்டிற்குத் தயக்கத்துடன் சென்றான்.

ஆனால், அவர் மிக அன்பாகவே நடந்து கொண்டார். இவனை உள்ளே அழைத்துச் சென்று, சோபாவில்

அமரச் செய்து, காப்பி கொடுத்து... அதன் பிறகு இவனைப் பேச அனுமதித்தார்.

தான் கஷ்டப்பட்டு எழுதிய கதைகள் சுவரில் அடித்த பந்தாகத் திரும்பி வருவதை வேதனையுடன் சொன்னான். அவர் பொறுமையாகக் கேட்டார்.

"ஒரு நிமிஷம்..." என்று கூறிவிட்டு, உள்ளே சென்றார். திரும்பி வந்தபொழுது, அவருடைய கைகளில் நிறைய 'ப்ரௌன்' கவர்கள். அத்தனையையும் அவன் முன் வைத்தார். "எடுத்துப் பார்," என்றார்.

பார்த்தான்!

அனைத்துக் கவர்களின் இடப்பக்கத்தில், கீழே வெவ்வேறு பத்திரிகைகளின் முகவரிகள்... அனைத்துக் கவர்களிலும், 'வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம்' என்ற துண்டுக் காகிதமும் உடனிருந்தது.


....அப்படியென்றால்?

இவருக்குமா கதைகள் திரும்பி வந்திருக்கு? இவருடைய கதைகளை வாங்கி வெளியிட, பத்திரிகைகள் போட்டி போடுகின்றனவே? — அவரை ஆச்சரியத்துடன் பார்த்தான். அவர் சொன்னார்: "எல்லாம் எனக்குத் திரும்பி வந்த கதைகள்தான். நூறு கதைகளுக்கும் மேலேயே திரும்பி வந்திருக்கு. திரும்பி வரும்பொழுது வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால், அதற்காக, மனசைத் தளரவிட்டுடக்கூடாது. தொடர்ந்து நிறைய எழுதணும். கதையுடைய நடை, நம்முடைய கற்பனை எல்லாமே நம்மை அறியாமலே நாளுக்கு நாள் சிறப்புறும்."

'அட, எல்லா எழுத்தாளர்களுக்கும் ஆரம்பத்தில் இதே கதைதானா! நானும் இப்ப ஆரம்ப கட்டத்திலேதான் இருக்கேன்! இனிமேல் நிறைய எழுதணும்' — அவன் தீர்மானித்துக் கொண்டான்.

"சார் போஸ்ட்" — அவனுடைய ஐம்பத்தொன்றாவது கதையும் திரும்பி வந்துவிட்டது! ஆனால், இப்பொழுது அவனுக்கு, தடுமாற்றமோ, எரிச்சலோ ஏற்படவில்லை ஒருவிதமான நம்பிக்கையே ஏற்பட்டிருந்தது. 'நம்முடைய இலக்கை அடைய, மேலும் ஒரு படி முன்னேறிவிட்டோம்' என்ற நம்பிக்கை! உற்சாகத்துடன் வேறு கதை எழுத உட்கார்ந்தான்!

ஓவியராகலாம்



எங்கள் வீட்டு எலிகள்



ரு. துளசிதாஸ்




ஓடி விளையாடும் எலிகள் — வீட்டில்
ஓய்ந்திருக்க லாகாத எலிகள்
கூடிக் கும்மாளமிடும் எலிகள் — ஒரு
குறை இல்லாமல் வளரும் எலிகள்.

காலை எழுந்தவுடன் காய்கறிகள் — பின்பு
கடித்துக் குதறிவிடும் நல்ல துணிகள்
மாலை வரையில் ஒளிந்திருக்கும் — ஒளி
மங்கி விட்டால் ஆட்டம் தொடங்கிவிடும்.

சோம்பல் மிகக்கெடுதி என்று — பாரதி
சொன்ன சொல்லைத் தட்டார்த எலிகள்
பாம்பு கூட வளர்த்திடலாம் — இந்தப்
பாதகரைக் கண்டால் குலைநடுக்கம்.

பண்டம் எதுவும் மிஞ்சவில்லை — என்
பங்கென்று அம்மா தந்ததெல்லாம்
குண்டு சட்டிக்குள் மறைத்தபோதும் — அவை
குறிப்பறிந்து திருடிச் செல்லும்.

எலிகள் பாய்ச்சல் புலிப்பாய்ச்சல் — அவை
இருந்தால் வீடு போர்க்களம்தான்.
எலிகள் விரட்டும் வழி தெரிந்தால் — அதை
எனக்கும் கொஞ்சம் சொல்லுங்கள்!



திருப்பதி லட்டு

டாக்டர் கரு. நாகராசன்

ஓவென்று அலறிக் கொண்டு வந்தான் ரவி. அவனது அழுகைக் குரலைக் கேட்டு அடுக்களையில் சமையல் செய்து கொண்டிருந்த ராதா துடித்துப் போய்விட்டாள். பதறிக் கொண்டே வாசற்படியை நோக்கி ஓடி வந்தாள் அவள்.

உடம்பெல்லாம் புழுதி மண் படிய தலைவிரி கோலமாக அழுது கொண்டு நின்றான் ரவி. அம்மாவைப் பார்த்தவுடன் அழுகை மேலும் அதிகரித்தது

''யாருடா உன்னை அடிச்சது? உடம்பெல்லாம் ஏண்டா இப்படி மண்ணு?'' மகனைப் பிடித்து உலுக்கினாள் அவன் அம்மா ராதா.

''குமாருப்பயல்...என்னை அடிச்சு... மண்ணுலே தள்ளிப்புட்டான்...'' தொடர்ந்து அழுது கொண்டிருந்தான் ரவி. தாய் மனம் துடித்தது. பக்கத்து வீட்டுப் பையன்தான் குமார். ரவி முதல் வகுப்புப் படிக்கும் அதே பள்ளியில்குமார்இரண்டாம்வகுப்புப் படிக்கிறான். இருவருமே வீட்டுக்குச் செல்லப் பிள்ளைகள். படிக்கும் நேரம், சாப்பிடுவது, உறங்குவது போன்ற நேரம் தவிர மற்ற நேரங்களில் இருவரும் சேர்ந்தே விளையாடுவார்கள். இவர்கள் இருவரின் மூலமாகவே் இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் தொடர்பு ஏற்பட்டது. ஆனால், இன்று?

''எங்கே அந்தப் பயல்? அவனை...'' வரிந்து கட்டிக் கொண்டு கோபக் கனல் வீசும் கண்களுடன் பக்கத்து வீட்டுக்குவிரைந்தாள் ரவியின் அம்மா ராதா. அவளது கோபத்தின் வேகத்தில் பக்கத்து வீட்டுக் காம்பவுண்ட் கதவு படார் என்று திறந்தது. அந்தச் சப்தம் கேட்டு உள்ளேயிருந்த குமாரின் அம்மா சீதா வேகமாக வெளியில் வந்தாள். ராதா அங்கு நின்ற கோலம் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவளால்எதையும்பேச முடியவில்லை.

''பிள்ளையைப் பெற்றால் ஒழுங்கா வளர்க்கணும். இல்லேன்னா கழுத்தை முறிச்சுப் போடணும்...'' ராதாவின் பேச்சுசீதாவைமேலும்அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

''ஏன் இப்படிச் சொல்றீங்க...?''

தயங்கிக் கொண்டே கேட்டாள் சீதா.

"உன் புள்ளை செய்த வேலையைப் பார்..." வாசற்படியில் தலைவிரிகோலமாக நின்றிருந்த ரவியைச் சுட்டிக் காட்டினாள் ராதா. சீதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. இதையெல்லாம் பார்த்துப் பயந்து நடுங்கியபடி கதவோரம் பதுங்கி நின்ற குமாரை எட்டிப் பிடித்து வெளியில் இழுத்து வந்தாள் சீதா.

"என்னடா செய்தே அந்தப் பயலே?" சீதாவின் வலது கை குமாரின் பிஞ்சுக் கன்னங்களில் முத்திரை பதித்தது.

"அடிக்காதேம்மா... அடிக்காதேம்மா..." என்று தாயின் காலைக் கட்டிக் கொண்டு துடித்த குமார், ரவியுடன் அவன் சண்டை போட்டதற்கான காரணத்தைத் தேம்பிக் கொண்டே கூறினான். முந்திய நாள் குமாரின் அப்பா அவனுக்கு வாங்கிக் கொடுத்த புதிய பேனாவை ரவி வைத்துக் கொண்டு தர மறுத்தானாம். அதைப் பிடுங்குவதற்காக இவன் முயற்சி செய்தபோது அவன் மண்ணில் விழுந்து புரண்டிருக்கிறான். முடிவில், பேனா நொறுங்கிவிட்டது. பேனா உடைந்த ஆத்திரத்தில் ரவியை அடித்திருக்கிறான் குமார்.

"திருட்டுக்கழுதை, புதுப்பேனாவை ஒரு நாளிலேயே ஒடிச்சுப்புட்டியா?" மீண்டும் குமாருக்கு அடி விழுந்தது.

"பெரிசா பஞ்சாயத்துக்கு வந்துட்டியே, உன் புள்ளை மட்டும் என்ன ஒழுங்கு?" என்று சீறினாள் சீதா. இருவருக்கும் வாய்ச் சண்டை முற்றியது. பக்கத்து வீட்டுக்காரர் வந்து சண்டையை நிறுத்த வேண்டியதாயிற்று.

அன்று முதல் இரண்டு வீட்டுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் போய் விட்டது. பள்ளிக்கூடத்திலும் கூட குமாரும் ரவியும் பேசிக் கொள்வதில்லை.

குமார் வீட்டில் திருப்பதிக்குப் போய்விட்டு அன்றுதான் திரும்பியிருந்தார்கள். பக்கத்து வீடுகளில் உள்ளவர்களுக்கெல்லாம் லட்டு, மற்றும் கோயில் பிரசாதங்களை சீதா கொடுத்து வந்தாள். ராதா வீடு தவிர அந்தத் தெருவில் உள்ள எல்லா வீடுகளுக்கும் கோயில் பிரசாதம் கொடுக்கப்பட்டது.

கோயிலில் இருந்து திரும்பியது முதல் குமார் சோர்வாகக் காணப்பட்டான். லட்டு மற்றும் எவ்விதத் தின்பண்டங்களையும் அவன் தொடவில்லை. அம்மா வற்புறுத்தியும் கூட வேண்டாமென்று கூறிவிட்டான். பயணக் களைப்பாக இருக்கும் என்று அப்பா சமாதானம் கூறிவிட்டார்.

இரவு உறங்கப்போகும்முன் தனக்கு ஒரு லட்டு தருமாறு அம்மாவிடம் கேட்டான் குமார். ஒன்றுக்கு இரண்டை எடுத்துக் கொடுத்து மகனை உண்ணச் சொன்னாள் சீதா. அவன் லட்டைச் சாப்பிடத் தொடங்கியதைப் பார்த்த பிறகுதான் அம்மாவுக்கு ஆறுதலாக இருந்தது.

இரவு பதினொரு மணி இருக்கும். அந்தத் தெருவே உறங்கிப் போய்விட்டது. குமாரின் அப்பாவும் அம்மாவும் கூட அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், குமாருக்கு மட்டும் தூக்கம் பிடிக்கவே இல்லை. புழுவைப் போல் படுக்கையில் நெளிந்து கொண்டிருந்த அவன், திடீரென்று படுக்கையிலிருந்து எழுந்தான்., அம்மாவும் அப்பாவும் நன்கு உறங்குகிறார்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்ட குமார், மெதுவாக எழுந்து பக்கத்து வீட்டுக்குப் பூனை போலப் பதுங்கிக் கொண்டே சென்றான்.

பெற்றோருடன் • திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்தான் ரவி. தெரு விளக்கின் ஒளியில் அவன் முகம் மின்னியது. அவனோடு பேசி ஒரு மாதத்துக்குமேல் ஆகிவிட்டதை நினைத்தபோது குமாருக்கு அழுகையே வந்துவிட்டது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

மெதுவாக ரவியின் கால்களை வருடினான் குமார், படக்கென்று கண்விழித்துப் பார்த்த ரவி, தனக்கு எதிரில் குமார் நிற்பதைப் பார்த்து அயர்ந்து போய்விட்டான். தான் காண்பது கனவாக இருக்குமோ என்று எண்ணிக் கண்களைக் கசக்கினான்.

"நான்தாண்டா குமார்..."

"நீ... நீ ஏண்டா எங்க வீட்டுக்கு வந்தே? போயிடுடா. எங்க அம்மா முழிச்சுப் பார்த்தா திட்டுவாங்கடா" கெஞ்சினான் ரவி.

"உனக்கு, திருப்பதி லட்டு கொண்டு வந்திருக்கேண்டா. இந்தாடா. இதை

நீ அவசியம் திங்கணும்... இல்லே, நாள் புறம் எதுவும் சாப்பிட மாட்டேன்!'' மீண்டும் குமாரின் கண்கள் கசிந்தன.

ரவிக்குக் கண்கள் மட்டும் கசிய வில்லை. லட்டு என்று கேள்விப்பட்ட வுடன் அவன் நாக்கிலும் நீர் கசிந்தது. அவனுக்கும் இப்போது தைரியம் வந்து விட்டது. மெதுவாகத் திண்ணையி லிருந்து இறங்கினான். இரண்டு வீட்டுக் கும் இடையில் இருந்த நீண்ட சுவரின் ஓரம் பதுங்கி இருப்பதற்கு ஏற்றாற் போல் இடம் இருந்தது. இருவரும் அவ் விடத்தை அடைந்தனர்.

அம்மாவிடம் வாங்கிய இரண்டு லட்டுகளில் பாதியை மட்டுமே குமார் சாப்பிட்டிருந்தான். மீதி ஒன்றரையும் ரவிக்குத்தான். கொஞ்சம் கொஞ்ச மாக அவன் பிட்டுக் கொடுக்க ஆவ லுடன் அதை வாங்கித் தின்று கொண் டிருந்தான் ரவி.

''எனக்கு நீ லட்டு கொடுத்தது தெரிஞ்சா உன் அம்மா உன்னை அடிச் சுப் போடுவாங்க, இல்லே?''

''எங்க அம்மா நல்லவங்கடா. உங்க அம்மா சண்டைக்கி வந்தால் தான் எங்க அம்மா என்னை அடிப்பாங்க.''

ஒரு மாதத்துக்கு முந்திய அந்த நிகழ்ச் சியை அப்போது நினைத்துப் பார்த் தான் ரவி. அவனுக்குச் சுருக்கென்று இருந்தது சிறிது நேரம் எதுவும் பேசா மல் தின்று கொண்டிருந்தான்.

''எத்தனை நாளைக்கு இன்னமும் நாம் இரண்டு பேரும் பேசாமல் இருக்க முடியும்?'' வேதனையுடன் கேட்டான் ரவி.

''என்ன செய்யறது? நம்ம அப்பா அம்மா...'' என்று கூறிய குமார் பின் புறமாகத் திரும்பிப் பார்த்தான். அங்கே அவனுக்கு ஓர் அதிர்ச்சி காத் திருந்தது. அவனுடைய அம்மாவும் அப்பாவும் அங்கே நின்று கொண் டிருந்தனர். அதே சமயம் யாரோ நடந்து வரும் சப்தம் கேட்டு ரவியும் திரும்பிப் பார்த்தான். அவனது பெற்றோரும் அங்கு நின்று கொண்டிருந்தனர்.

''கவலைப்படாதேப்பா. இனிமேல் நீங்க ரெண்டு பேரும் எப்பவுமே பேசிக்கிட்டு இருக்கலாம். பெரியவங் களைப் பார்த்து நடக்கணும்னு உங்க ளுக்கு நாங்க உபதேசம் செய்வோம். இப்போ, உங்களைப் பார்த்து நாங்க நடக்க வேண்டியதாயிடுச்சு'' என்று குமாரின் அப்பா கூறிய அந்த வார்த் தைகளை ரவியின் பெற்றோரும் ஆமோ தித்தனர். அப்புறம் என்ன? குமாருக் கும் ரவிக்கும் கொண்டாட்டம்தான்! திருப்பதி லட்டின் மூலம் வேங்கடா சலபதி அவர்களை மீண்டும் ஒன்று சேர்த்து விட்டார்!

உலகிலேயே நீளமான கூந்தல்!



உலகத்திலேயே நீளமான கூந்தல் உடைய பெண் ஜப்பானில் இருக்கிறாள். பெயர் ஹிரோகா யமசாக்கி. கூந்தலின் நீளம் 260 சென்டிமீட்டர்.

ஆசியாவிலேயே உயரமானவர்!



ஆசியாவிலேயே உயரமான மனிதர் பாகிஸ்தானில் இருக்கிறார். அவர் பெயர் மகமுத் சன்னு. அவரது உயரம் 251 சென்டிமீட்டர்!

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600 032. (Phone: 431543).
Editor: K. Rajendran.



கண்ணதாசன்

தோற்றம்: 24-6-1927. மறைவு: 17. 10. 1981.

REGISTERED No. IN MS (3) 281
Registered as a Newspaper in Srilanka

